# மஹாவீரர்

வி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ.

இயற்றியது.

சென்னை :

"சுதேசமித்திரன்" ஆபீஸ்.

1921

Copy Right] [Price As. 5.

# மஹாவீரர்

வி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ.,

இயற்றியது.

14655

சென்னை :

"சுதேசமித்திரன்" ஆபீஸ்.

1921

Copy Right]

[Price As. 5.

MADRAS:
THE SWADESAMITRAN BRANCH PRESS.
1921.

# மஹா வீரர்

மஹாவீரருக்கு முன்பு விளங்கின ஜைன தீர்த்தங்கரர்கள் 24:—

(1) ரிஷபதேவர்: இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்தவர். ப்ரதம ஜினர் (ஆதி ஜினதேவர்)

(2) அஜிதர்—ஜிதசத்ருவின் புத்ரன்.

(3) ஸம்பவர்—ஜிதாரியின் புத்ரன்.

(4) அபிநந்தனர்—சம்பரனுடைய புத்ரன்.

(5) ஸுமதி—மேகருடைய புத்ரன்.

(6) பத்மப்ரபர்—ஸ்ரீதரருடைய புத்ரன்.

(7) ஸுபார்ச்வர்—ப்ரதிஷ்டருடைய புத்ரன்

(8) சந்த்ரப்ரபர் — மஹாஸேனருடைய புத்ரன்.

(9) புஷ்பதந்தர் அல்லது ஸுவிதி— ஸுப்ரியருடைய புத்ரன்.

(10) சீதலர்—த்ரிடரதருடைய மகன்

(11) ச்ரேயனர் அல்லது ஸ்ரீயாம்சர்—விஷ்ணு ன் புதல்வன்.

(12) வாஸுபூஜ்யர் — வஸுபூஜ்யருடைய மந்தன்.

(13) விமலர்—கிருதவர்மாவின் பிள்ளை.

(14) அனந்தர் அல்லது அனந்தஜித்—ஸிம்ஹ ஸனருடைய புத்ரன்.

(15) தர்மர்—பானுவின் மகன்.

(16) சாந்தி—விச்வஸேனரின் குமாரன்.

(17) குண்டு—சூரருடைய புதல்வன்.

(18) அறர்—ஸுதர்சனருடைய பிள்ளை.

(19) மல்லி—கும்பருடைய புத்ரன்.

(20) முனிஸு வ்ரதர் — ஸுமித்ரருடைய த்ரன்.

(21) நிமி—விஜயருடைய குமாரன்.

(22) நேமி அல்லது அரிஷ்டநேமி— ஸமுத்ர யருக்குப் பிறந்தவர்.

(23) பார்ச்வ நாதர் — அச்வஸேனருடைய த்ரன்.

(24) வர்த்தமானர் அல்லது வீரர், மஹா வீரர், ரம தீர்த்தகிருத்—ஸித்தார்த்தருடைய புத்ரன்.

ஸுபார்சுவன் ஸித்தார்த்தன் = த்ரிசலா (விதேஹதத்தா)
கேதகன் = ஸுபத்ரா (விசாலிராஜன்)

நந்திவர்த்தனன் | ஸுதர்சனை

கேல்னை = பிம்பிஸாரன் (மகததேச ராஜன்)
| அஜாதசத்ரு
| உதயி (பாடலி புத்ரத்தைக் கட்டினவன்)

வர்த்தமானன் = யசோதா
| ஸுதர்சனை = ஜமாலி
| யசோவதி

ஆனல் மஹாவீரருக்குத் தமயனுவது தமக்கையாவது ஒறிய தகப்பனுவது மனைவியாவது பெண்ணுவது இருந்ததாய் திகம்பர சாஸ்த்ரங்கள் ஒப்புக்கொள்ளவேயில்லை.

மஹாவீரருடைய ஜீவ சரித்ரத்தை 5 கல்யாணகங்களென்ற பாகங்களாய் ஜைன சாஸ்த்ரங்கள் வர்ணிக்கின்றன. அவைகள் முறையே

னனம், இல்லறம், தபஸ், மஹோபதேசம், நிர்
ாணமென்று சொல்லப்படும்.

## 1. மஹா வீரருடைய அவதாரம்

ஜைன மதஸ்தாபகர்களில் முக்யரான மஹா
'ரரைப் பற்றி நமக்குத் தெரியும் விஷயங்கள்,
கம்பரர்கள் சுவேதாம் பரர்களென்ற இருவகை
ஜனமதஸ்தர்கள் எழுதிய க்ரந்தங்களிலிரு
ந்த கிடைக்கின்றன. அவை சில விஷயங்க
ல் ஒன்றிற்கொன்று விரோதமா யிருந்தாலும்,
பாதுவாய் அவருடைய ஜீவசரித்ரத்தையும்
வரால் உலகத்திற்கு செய்யப்பட்ட உபகாரத்
தயும் பற்றி நமக்குப் போதுமான அம்சங்களைத்
தரிவிக்கின்றன. மஹா வீர புராணத்தில் இவ
டைய பூர்வ ஜன்மங்களையும் அவைகளில் இவ
ல் செய்யப்பட்ட பல அத்புதமான செயல்களை
ம் பற்றி விஸ்தாரமாய் வர்ணித்திருக்கின்றன.
ஜனமத கூடஸ்தரான ரிஷபதேவர் அல்லது
திநாதருடைய பேரனும் பரத சக்ரவர்த்தியின்
ந்ரனுமாய் இவர் பிறந்தாரென்று சொல்லப்படு
றது. * ஆதிநாதருக்கு முந்தியே இவர் பலஜன்
ங்களை எடுத்ததாகவும் தெரிகிறது. தன் உயர்
ந குலத்தாலும் செல்வத்தாலும் அதிகாரத்தா
ம் செருக்கடைந்து, பொய்யான மதத்தையும்

தர்மவிரோதமான ஆசாரத்தையும் ஜனங்களுக்கு உபதேசித்தார். அதினல் உண்டான பாவம் இவரைப் பூமியில் அநேக ஜன்மங்களெடுக்கும் படி செய்ததென்று சொல்லப்படுகிறது. ஆனல் கல்பஸூத்ரத்தில இதைப்பற்றின ப்ரஸ்தாபம் யாதொன்று மில்லை. ஸகல ஐச்வர்யங்களாலும் போக போக்யங்களாலும் ஆனந்தத்தாலும் விளங்குற புஷ்போத்தரமென்ற மஹாலோகத்தில் அநேககாலமாய்த் தான் ஆனந்தானுபவம் செய்து கொண்டிருந்த ஸ்திதியை விட்டு, அக்ஞானத்தாலும் துக்கத்தாலும் கட்டுண்டு பிறவிக் கடலில் ஆழ்ந்து வழிதெரியாமல் தவிக்கும் மானிடகோடிகளிடத்தில் அபாரமான கருணை பிறந்து, அவர்களுடைய மனதில் குடிகொண்ட இருளை நீக்கி ஞான ஸூர்யனை ப்ரகாசிக்கச் செய்து நிர்வாண ஸுகத்தைக் கொடுக்க நிச்சயித்து, ஜைன மத ஸ்தாபகர்களான தீர்த்தங்கார்களில் ஒருவராய் இந்தக் கர்மபூமிக்கு வந்து, ஆஷாட மாஸத்தில் அபர பக்ஷத்தில் ஷஷ்டி திதியில், தனக்குத் தாயா யிருக்கும் மஹாபாக்யத்தைப் பெற்ற ஸர்வ லோக பூஜிதையான உத்தம ஸ்த்ரீயின கர்ப்பத்தில் ப்ரவேசித்தார்.

ஜம்பூ த்வீபத்தில் பாரதவர்ஷத்தில் தக்ஷிண பாகத்தில் குந்தபுரமென்ற புண்ய க்ஷேத்ரத்தில்

ப்ராஹ்மணர்களால் வஸிக்கப்பட்ட ப்ரதேசத்தில், ஜாரந்தராயண கோத்ரத்தில் பிறந்த தேவநந்தா என்றவளுக்கும் கோடல கோத்ரத்தில் பிறந்த ரிஷபதத்தரென்ற ப்ராஹ்மணனுக்கும் புத்ரராய்ப் பிறக்க உத்தேசித்தார். தன் தாயின் கர்ப்பத்தில் ப்ரவேசித்து 82 தினங்கள் ஆன பிறகு 83-வது தினத்தில், தேவேந்த்ரன் தீர்த்தங்கரர்கள் லோகத்தில் அவதாரஞ் செய்யும் பொழுது அனுஷ்டிக்கும் க்ரமத்தை நினைத்து வர்ஷருது 3-வது மாஸம் ஐந்தாவது பக்ஷம் (அதாவது ஆச்வின க்ருஷ்ணபக்ஷம்) திரயோதசி திதியில் உத்தரபால்குனி நக்ஷத்ரத்தில், அந்த கர்ப்பத்தைக் குந்தபுரத்தின் தெற்கு பாகத்தில் ப்ராஹ்மணர்களால் வஸிக்கப்பட்ட ஸ்தலத்திலிருந்து வடதுபாகத்தில் க்ஷத்ரியர்களால் வஸிக்கப்பட்ட பாகத்திற்கு ஆகர்ஷித்து, ஞாதிருவம்சத்தில் காச்யப கோத்ரத்தில் பிறந்த ஸித்தார்த்தரென்ற க்ஷத்ரியருடைய பார்யையான வஸிஷ்ட கோத்ரத்தில் பிறந்த த்ரிசலாவென்ற உத்தமியின் கர்ப்பத்தில் வைத்து, அவளுடைய கர்ப்பத்திலிருந்த சிசுவை தேவாநந்தையின் கர்ப்பத்தில் ஆகர்ஷித்து வைத்தானென்று ஆசாராங்க ஸூத்ரத்திலும் கல்பஸூத்ரத்திலும் சொல்லப்படுகி

றது. இந்த ச்வேதாம்பரர்களின் கொள்கையைத் திகம்பரர்கள் முற்றிலும் ஆக்ஷேபிக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றி ஜைன மதத்தில் விசேஷ பரிசீலனை செய்தவரும் நிபுணரென்று ஒப்புக்கொள்ளப்பட்ட வருமான ஜாகோபி யென்ற பண்டிதர் அடியிற் கண்டபடி எழுதியிருக்கிறார். "இது வெகுகாலமாய் வழங்கிவருகிறதென்பதில் ஆக்ஷேபமில்லை. இவ்வளவு அசட்டுத்தனமான ஓர் கதை எந்தக் காரணத்தால் கற்பிக்கப்பட்டுப் பரவிப், பலரால் நம்பப்பட்டதென்று தெரியவில்லை. ஆனால், இதைப்பற்றி என் அபிப்ராயத்தை இங்கே சொல்லுகிறேன். ஸித்தார்த்தனுக்கு தேவநந்தாவென்ற ப்ராஹ்மண ஸ்த்ரீயும் த்ரிசலாவென்ற க்ஷத்ரிய ஸ்த்ரீயும் மனைவிகளாயிருக்கவேண்டும். இவர்களில் தேவநந்தையே மஹாவீரரின் தாய். த்ரிசலாவின் கணவனைச் சொல்லப்படுகிறவனுடைய ரிஷபதத்தனென்ற பெயர் ஸமீப காலத்தில் கற்பிக்கப்பட்டதாயிருக்கவேண்டும். புராதனமாய்த் தோன்றவில்லை. ஏனென்றால் ப்ராகிருத பாஷையில் அது உஸபதிண்ணவென்று எழுதப்படுமே யொழிய உஸபதத்தாவென்று வராது மேலும் இந்தப் பெயர் வழக்கமாய் ஜைன மதஸ்தனுக்கு வைக்கப்படலாமே யொழிய ப்ராஹ்மணனுக்கு வைப்பது வழக்க

மில்லை. ஆகையால் தேவநந்தைக்கு வேறொரு புருஷனை ஏற்படுத்துவதற்காக ஜைனர்களால் பிற்காலத்தில் ரிஷபதத்தர் கற்பிக்கப்பட்டா னென்பதில் யாதொரு ஸந்தேஹமு மில்லை. த்ரிச லாவை விவாஹஞ் செய்ததால் ஸித்தார்த்தன் உயர்குலமும் செல்வாக்கும் வாய்ந்த பலருடன் ஸம்பந்தப்பட்டிருந்தான். ஆகையால் அந்தப் ப்ரபுக்களின் ஆதரவை மஹாவீரர் பெறவேண்டு மென்று த்ரிசலாவின் புத்ரனென்ற கதை உண் டாக்கப்பட்டிருக்கலாம். மஹாவீரர் மத ஸ்தாப கராய் வந்த காலத்தில் அவருடைய பெற்றோர் கள் இறந்து பல வர்ஷங்களாயின. ஆகையால் இந்தக் கதையை ஜனங்கள் நம்புவதற் கிட முண் டாயிற்று. ஆனால் நிஜமான விஷயத்தை யறிந்த ஜனங்களும் அக்காலத்தில் இருக்கக்கூடுமாகை யால், ஒரு ஸ்த்ரீயிடத்தி லிருந்து வேறொருத்தி யிடத்தில் அந்தக் கர்ப்பம் மாற்றப்பட்ட தென்ற கதை சேர்க்கப்பட்டது. ஆயினும் இந்தக் கற் பனை புதியதல்ல. ஹிந்துமதத்தில் கிருஷ்ண னுடைய ஜனனத்தைச் சொல்லும் பொழுது நிஜ மான தாயான தேவகியின் வயிற்றி லிருந்து அந் தக் கர்ப்பம் ஆகர்ஷிக்கப்பட்டு ரோஹிணியென்ற வேறொரு பார்யை யிடத்தில் வைக்கப் பட்ட

தென்று பாகவத புராணம் சொல்லுகிறது. அதையே ஜைனர்களும் உபயோகித்திருக்கலாம்.

மேற்சொன்ன கதை கல்பஸூத்ரத்தை எழுதின வரால் கற்பிக்கப்பட்டிருக்கலாமென்பது நிஜமே. ஆயினும் ஜாகோபி சொல்லும் காரணங்கள் இந்த விஷயத்தில் பொருத்தமுள்ளதாயும் ந்யாயத்திற்கு ஒத்ததாயும் தோன்றவில்லை. ஸித்தார்த்தருக்கு ப்ராஹ்மண குலத்திலும் க்ஷத்ரிய குலத்திலும் பிறந்த இரண்டு மனைவிகளிருந்தார்களென்றும் மஹாவீரர் ப்ராஹ்மணியின் புத்ரனே யென்றும் சொல்வது ஸரியல்ல; க்ஷத்ரியனை ஜைனனை ப்ராஹ்மணப் பெண் விவாஹஞ் செய்வதற்கு ஒருவரும் ஸம்மதித்திருக்க மாட்டார்கள். ஸ்ம்ருதிகளை செய்வதில் மஹாவீரருடைய நடத்தையை வெகு நுட்பமாய்க் கவனித்து அனுஸரித்து வந்த ஜைன ஸ்ம்ருதி கர்த்தாக்கள், மேற்சொன்ன விஷயம் வாஸ்தவமாயிருந்தால் ப்ராஹ்மணப் பெண் க்ஷத்ரியப் பையனை விவாஹஞ் செய்யக் கூடாதென்று தடுத்திருக்கவே மாட்டார்கள். மேலும் மஹாவீரர் த்ரிசலாவின் புத்ரரென்றே மஹாவீர புராணத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லி யிருக்கிறது. ஆகையால் அக்காலத்திலுள்ள ஜைனர்களுக்கு ப்ராஹ்மணர்க

ளிடத்திலிருந்த த்வேஷத்தாலும் ஜைன ஆசார்யர்கள் ப்ராஹ்மணர்களைக் காட்டிலும் க்ஷத்ரியர்களையே மேலாக வெண்ணி ஆதரித்ததாலும் இந்தக் கதை அவர்களால் கல்பிக்கப்பட்டிருக்கலாமென்று நாம் எண்ண இடமுண்டு. இவ்விஷயமாய் வேறொரு கதையையும் நாம் கவனிக்கலாம்.

குஜராத் தேசத்தில் த்ருவஸேனனென்று ஓரரசனுண்டு. அவனுடைய ஸபையில் ஜைன கல்பஸூத்ரங்களை எழுதின பத்ரபாகுவும், அவனுடைய ஸஹோதரனும் பிருஹத்ஸம்ஹிதையை எழுதினவனுமான வராஹமிஹிரனும் பண்டிதர்களாயிருந்தார்கள். இவ்விருவரும் ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தில் மஹாநிபுணர்கள். ஒரு ஸமயத்தில் அரசனுக்கு ஓர் குழந்தை பிறந்தபொழுது அவன் வராஹமிஹிரனையழைத்து "இந்தக் குழந்தையின் ஆயுர்பாவம் எப்படி" யென அவன் "இது சிரஞ்ஜீவியாயிருக்குமெ"ன்றான். அதைக்கேட்டு அரசன் புத்ரோஸ்வத்தைக் கொண்டாடுவதற்கு ஓர் பெரிய தர்பார் கூட்டினான். தன் ஸபையிலுள்ளவர்களில் பத்ரபாகு இல்லையென்றறிந்து அரசன் அவனை யழைத்து "நீ இந்த முக்யமான ஸமயத்தில் ஸபையில் ஆஜராகாததற்குக் காரணம்

பா''தென்று கேட்க, அவன் ''மஹாராஜ! தங்களுக்குப் பிறந்திருக்கும் குழந்தை பத்து தினங்களில் உயிரிழக்குமென்று எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால், இப்பொழுது உங்களுடன் வந்து ஸந்தோஷத்தைக் கொண்டாடுவதில் என்னப்ரயோஜன மெ''ன்றான். அதைக் கேட்டு அரசன் இப்படித் தன் ஸந்தோஷத்தைக் கெடுத்து எதிர்த்துப்பேசின அந்தப் பண்டிதனைச் சிறையிலடைத்தான். ஆனால் பத்து தினங்களுக்குப்பிறகு அந்தக் குழந்தைக்குக் கடுநோய் கண்டு என்ன சிகித்ஸை செய்தும் பலிக்காமல் இறந்தது. உடனே அரசன் மிகுந்த பச்சாதாபமடைந்து, அந்யாயமாய் பத்ரபாகுவை அவமானஞ் செய்து சிறையிலடைத்ததற்காக வருந்தி, அவனை விடுவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, விசேஷ வெகுமதிகள் செய்து, வராஹமிஹிரனை ராஜ்யத்தை விட்டுத் துரத்தினான்.

பத்ரபாகு ஜைனன் வராஹமிஹிரன் ப்ராஹ்மணன். ப்ராஹ்மணரிடத்தில் வைத்திருந்த பரமத்வேஷத்தால் பத்ரபாகு இப்படி யுக்திசெய்து தன் உடன் பிறந்தானென்பதையும் மறந்து, வராஹமிஹிரனைத் தண்டனைக் காளாக்கினான்.

ஆகையால் அதே பத்ரபாகு ப்ராஹ்மண த்வேஷ த்தால் கர்ப்பங்கள் மாற்றப்பட்டனவென்ற கதையை உண்டாக்கித், தன் மத கூடஸ்தர் ப்ராஹ்மணனுக்குப் பிறந்தவரென்ற அவமானத்தை விலக்க வேண்டுமென்றே ஏனிப்படிச் செய்திருக்கக் கூடாது? ஆகையால் மஹாவீர புராணத்தில் சொல்லியிருக்கிறபடி, வர்த்தமானர் தேவாநந்தையின் புத்ரனல்லவென்றும் த்ரிசலாவின் புத்ரனேயென்றும் நாம் நிச்சயிக்கலாம். மேலும், பாகவதம் முதலிய புராணங்களிலிருந்து இந்தக் கதை எடுக்கப்பட்டிருக்கலாமென்றால், ப்ராஹ்மணர்களே ஏன் இதை ஜைன க்ரந்தங்களிலிருந்து எடுத்திருக்கக்கூடாது? மஹாவீரருடைய பிதாவான ஸித்தார்த்தருக்கு சரேயாம்சரென்றும் யசாம்சரென்றும் பெயருண்டென்று சுவேதாம்பர க்ரந்தங்கள் சொல்லுகின்றன. ஆதியில் பாவமென்றும் பிற்காலத்தில விதேஹம் அல்லது மகதமென்றும் சொல்லப்படும் தேசத்திலுள்ள குண்டலபுரத்தில் இவர் அரசனாய் விளங்கினார். இந்த குண்டல க்ராமம் விதேஹதேசத்தின் ராஜதானியான வைசாலி நகரத்தின் வெளிப்புறத்திலுள்ள ஓர் ஸ்தலம். இவர் பிறந்த ஞாதிருக வம்சம் பூர்வ காலம் முதல மிகுந்த செல்வாக்கைப் பெற்று

மேன்மை வாய்ந்திருந்தது. பிற்காலத்தில் ப்ரவ
த்தி பெற்ற அநேக ராஜவம்சங்கள் இதிலிரு
துண்டாயின. அக்காலத்திலுள்ள அநேக அரச
களும் இவருடையபந்துக்களாகவே யிருந்தார்கள்
ஆகையால் பௌத்த க்ரந்தங்கள் மஹா வீரரை
ஞாதிருபுத்ரனென்றும், திகம்பர க்ரந்தங்கள் இவ
ரை ஹரிவம்சி நாதவம்சி யென்றும் சொல்லுகின்
றனர். இவர் காச்யப கோத்திரத்தைச் சேர்ந்தவ
ரென்பதைப்பற்றி ஜைனகிரந்தங்கள் ஒரேமன
தாய்ச் சொல்லுகின்றன. பௌத்த க்ரந்தங்களில்
இவர் அக்னிவைச்யாயன கோத்ரத்தைச் சேர்
ந்தவரென்று சொல்லியிருக்கிற தென்றால்
இவருடைய சிஷ்யனான ஸுதர்மாசார்யரு
டைய கோத்ரத்தை இவருடையதாகப் பிசகாய்ச்
சொல்லபபட்டிருக்கிற தென்றே நாம் எண்ண
வேண்டும். மிகுந்த செல்வமும் செல்வாக்கும்
பொருந்தின விதேஹ அரசனான சேதகன், தன்
ஸஹோதரியான த்ரிசலையை ஸித்தார்த்தருக்கு
விவாஹஞ் செய்து வைத்தான். ஆகையால் திகம்
பர சாஸ்த்ரங்களில் இவளுக்கு விதேஹதத்தை
யென்றும் பெயருண்டு. இவ்விருவர்க்கும் குழ
ந்தைகள் பிறந்தார்கள். அவர்களில் நந்திவர்த்
தனர் மூத்தவர், ஸுதர்சனவென்ற பெண்

இரண்டாவது மூன்றாவது வர்த்தமானர். ஸுபார்ச்வரென்று ஸித்தார்த்தருக்கு ஒரு தம்பி யுண்டு. ஆனால் இவ்விஷயங்கள் திகம்பர சாஸ்த்ரங்களில் காணப்படவில்லை. ஜைன க்ரந்தங்களின் படி துஷமா ஸுஷமா கல்பத்தில், நான்காவது காலத்தின் முடிவிற்கு 72 வருஷங்களுக்கு முன், சைத்ரமீ அபரபக்ஷ த்ரயோதசி திதியில் பிறந்தாரென்று ஒப்புக்கொள்ளுகின்றன. இது B C 599க்கு ஸரியாயிருக்கிறது. இந்த காலவரையறை பலகாரணங்களால் நிச்சயிக்கப் படலாம் (1) பௌத்தக்ரந்தங்களான மஹா வர்க்கம் மஹாபரி நிர்வாண ஸூத்ரங்களில், மஹா வீரரும் புத்தரும் ஒரே காலத்திலிருந்தவர்களென்றும், புத்தருடைய மதத்திற்கு விரோதிகளான ஆறு ஆசார்யர்களில் அவரொருவரென்றும், அவருடைய பெயர் ப்ராகிருதத்தில நாதபுத்தனென்றும் (ஞாதிபுத்ரன்) சொல்லப்பட்டிருக்கிறது.

ஏகோத்தர நிகாயம், தீர்க்கநிகாயத்தில் ச்ரமண பல ஸூத்ரம், தீர்க்க நிகாயத்தில் பிரஹ்மஜால ஸூத்ரத்திற்கு பத்தகோஷரால் எழுதப்பட்ட ஸுமங்கல விலாஸினியென்ற வ்யாக்யானம், மத்யம நிகாயமென்ற க்ரந்தங்களிலும், மஹாவீரர்,

புத்தருக்கும் பௌத்த மதத்திற்கும் பரம விரோதியென்று சொல்லப்படுகிறது. "நிர்க்ரந்த ஞாதிருபுத்ரன் புத்தருடன் வாதஞ் செய்யும்படி அபயகுமாரனென்றவனைத் தயார் செய்து அனுப்பினான். அவன் புத்தரைக் கேட்ட கேள்வி மிகவும் சாதுர்யமாயும் மோசடியாயு மிருந்தது. அதற்கு ஆம் என்றாவது இல்லையென்றாவது பதில் சொன்னாலும் முன்பின் விரோதத்தில் மாட்டிவிடும். ஆனால் இந்த யுக்தி புத்தரிடத்தில் பலிக்கவில்லை. முடிவில் அபயகுமாரன் புத்தரைச் சரணமடைந்து பிக்ஷுவாக்கப்பட்டா" னென்று மத்யம நிகாயத்தில் காணப்படுகிறது.

லிசசாவி ஜாதியரின் ஸேனபதியும் ஞாதபுதாருடைய லௌகிக சிஷ்யருமான ஸிம்ஹன், ஓர் ஸமயத்தில் கௌதமபுத்தரைத் தரிசிக்க விரும்பினான். அவனை ஞாதிபுத்ரர் பலதடவை தடுத்து "நமது மதம் க்ரியாவாதத்தைக் கொண்டாடுகிறது. புத்தனோ அக்ரியா வாதத்தைக்கொண்டாடுகிறான். ஆகையால அவனைப்பார்ப்பதும் அவனுடன்பேசுவதும் மஹாபாபமெ"ன்றுபோதித்தார். ஆயினும் ஸிம்ஹன் தன்குருவின்கட்டளையை மதிக்காமல் கௌதமபுத்தரிடத்தில் சென்று, அவரு

டன் வாதஞ் செய்து தன் ஸந்தேஹங்களை நீங்கி அவரைச்சரணமடைந்தா" னென்று மஹா வர்க்கத்தில் காண்கிறோம். மேலும், நிர்க்ரந்த மதத்தைச் சேர்ந்தவனுடைய புத்ரனை சக்யகனென்றவன் புத்தருடன் வாதஞ் செய்த தாயும், ஆனால் அவன் நிர்கிரந்தன் அல்லவென்றும், ஞாதிருபுத்ரனுடன் வாதஞ் செய்து அவரை ஜயித்ததாயும் மத்யம நிகாயத்தில் சொல்லப்படுகிறது.

மேலும், பார்ச்வநாதருடைய சிஷ்யனை மௌத்கல்யாயன், மஹாவீரருடைய உபதேசத்தால் திருப்தியடையாமல், புத்தருடைய சிஷ்யனாய் பௌத்தமதத்தை ப்ரசாரம் செய்ய ஆரம்பித்தானென்று, அமிதகதி ஆசார்யரென்ற ஜைனரால் 1070 ஸம்வஸரத்தில் எழுதப்பட்ட தர்ம பரிக்ஷா யென்ற காவ்யத்தில் சொல்லியிருக்கிறது. இதனால் மஹாவர்க்கத்தில் புத்தருடைய முக்ய சிஷ்யரென்று சொல்லப்படும் மௌத்கல்யாயனர் இவரேயென்று எண்ணலாம். இதைப் போன்ற காரணங்களால் மஹாவீரரும் புத்தரும் ஒரே காலத்திலிருந்து மதப்ரசாரம்செய்திருக்கவேண்டுமென்றுஏற்படுகிறது.புத்தருடைய நிர்வாண கால

ம் B. C. 560 என்று ஒப்புக்கொண்டால் அதற்கு முன் மஹா வீரர் மதாசாரியராய் ப்ரஸித்தி யடைந்திருக்கவேண்டும்.

தேவானந்த ஆசாரியரால் ஸம்வத் 990ல் உஜ்ஜயினியில் எழுதப்பட்ட தரிசனஸாரத்தில் பார்சுவநாதருடைய காலத்திற்கும் மஹா வீரருடைய காலத்திற்கும் நடுவில் பார்சுவநாதருடைய சிஷ்யனுன புத்த கீர்த்தி என்ற ஸந்யாஸி மஹான் பண்டிதனுய் பலிர்சநகா மென்ற நகரத்திற்கு ஸமீபத்திலுள்ள ஸரயு நதி கரையில் தபஸ்செய்து கொண்டிருந்தான். ஒரு நாள் சில செத்த மீன்கள் மிதந்து போவதைக் கண்டு அவைகளைத் தின்றால் ஹிம்ஸை யல்லவென்று நினைத்து தன் தபஸை விட்டு சிவப்பு வஸ்திரங்களைத் தரிக்க ஆரம்பித்து பௌத்த மதத்தை உபதேசித்து வந்தான். என்று சொல்லப்படுகிறது. ஆகையால் மஹா வீரருடைய காலத்திற்கு முந்தியே புத்தர் தன் மதத்தை பரவச் செய்ததாய் ஏற்படுகிறது. புத்தருடைய ஜனன காலம் B. C. 640யா யிருந்தால் அவர் 605ல் மதப்ரசாரம் செய்ய ஆரம்பித்திருக்க வேண்டும். அதற்குப் பிறகே மஹா வீரருடைய மதம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

நேமிசந்திர ஆசாரியரால் செய்யபட்ட திரிலோ கஸாரத்தில் "சகாப்தத்திற்கு 605 வருஷங்கள் முந்தி மஹாவீரர் முக்தி யடைந்தா" ரென்று சொல்லப்படுகிறது. சகாப்தம் A. D. 78ல் ஆரம் பித்தால் மஹா வீரருடைய நிர்வாணம் சுமார் B. C. 527 நடந்திருக்க வேண்டும்.

ஆர்ய வித்யாஸுதாகர மென்ற கிரந்தத்தில் மஹா வீரர் விக்ரமாதித்த ராஜனுடைய காலத் திற்கு 470வருஷங்களுக்குமுன் நிர்வாணத்தை யடைந்தாரென்று எழுதப்பட்டிருக்கிறது. விக்ர மார்க்கனுடைய காலம் B. C. 57 என்றால் மஹா வீரருடைய நிர்வாணத்தின் காலம் B. C. 527 ஆக இருக்க வேண்டும்.

திகம்பர வகுப்ரன்ஸாரஸ்வத கச்சத்தைச் சேர்ந்தவர்களால் பிரசுரிக்கப்பட்ட பட்டாவளி களே இதற்கு முக்யமான ஆதாரம். ஸம்ஸ்கிருத ஏட்டுப்பிரதிகளைத் தேடினதைப் பற்றி ரிபோர்ட் டில் டாக்டர் பந்தார்க்கர் இவைகளை விஸ்தார மாய் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்தியன் ஆன்டி குவரி யென்ற பத்திரிகையில் (வால்யூம் 20, 341-வது பக்கம், வால் 21, பக்

கம் 57ல்) டாக்டர் ஹொர்ன்லே என்பவரால் வெளிப்படுத்தப் பட்ட இரண்டு பட்டாவளிகள் காணப்படுகின்றன. அவைகளில் ஒன்று "மஹா வீரருடைய ஜனனத்திற்கு 470 வருஷத்திற்குப் பின் விக்ரம அரசன் பிறந்தா"னென்று காணப் படுகிறது. இதனால் மஹா வீரருடைய நிர்வா ணம் B. C. 527. வேறொரு பட்டாவளியின் பீடி கையில் "470 வருஷங்களுக்குப் பிறகே விக்ர மன் பிறந்தானென்று காணப்படுகிறது.

கல்ப ஸூத்ரம் மஹாவீர புராணம் பகவதி யென்ற கிரந்தங்களால் மஹாவீரர் 72 வருஷங் கள் ஜீவித்திருந்தாரெனறும் அதில் 30-வது வயதில் இல்லறத்தைத் துறந்தாரென்றும் 32-வதில் கோஸலரைக் கண்டாரென்றும் 38வது வயஸ் வரையில் அவருடன் வஸித்துக் கொண்டி ருந்தா ரென்றும், 40-வது வயஸ் வரையில் கோஸலர் ஜைனபதவியை அடையாமல் தனியே வஸித்தாரென்றும், 56-வது வயஸ் வரையில் கோஸலர் ஜைனராய் இருந்தாரென்றும் அதற் குப்பிறகு 16 வருஷங்கள் வரையில் அதாவது மஹா வீரருடைய 72-வது வயஸில் அவர் நிர் வாணத்தை யடைந்தாரென்றும் சொல்லப்படு

கிறது. ஆகையால் மஹா வீரர் B. C. 599-ல் பிறந்திருக்க வேண்டும்.

## II. இல்லறம்.

இவருடைய பால்ய தசையைப் பற்றியும் அவர் கற்றறிந்த வித்யைகளையும் கலைகளையும் பற்றியும் நமக்கு விசேஷமாய் யாதொன்றும் தெரியவில்லை. ஆனால் சுவேதாம்பர கிரந்தங்களால் மஹா வீரர் தன் மாதா பிதாக்களுடன் அளவற்ற ஐசுவரியத்தையும் போக போக்யத்தையும் அதிகாரத்தையும் அடைந்து ஸுகமாய்க் காலங்கழித்து வந்தாரென்றும் ஆனால் அவருடைய புத்தியும் ஞானமும் தன்னடக்கமும் நாளுக்கு நாள் விருத்தியாயின வென்றும் தாம மார்க்கத்திலிருந்து தவறாமல் இல்லறத்தைத தர்ம பத்னியுடன் நடத்தி வந்தாரென்றும் கௌண்டின்ய கோத்ரத்தைச் சேர்ந்த யசோதா வென்ற ராஜ புத்ரியை தருந்த காலத்தில் மணம் புரிந்தாரென்றும் அவருக்கு ப்ரிய தர்சனா வென்ற ஓர் பெண் பிறந்ததென்றும் அவளைத் தன் சிஷ்யனான ஜமாலி யென்பவருக்குப் பார்யையாய்க் கொடுத்தாரென்றும் அவர்களுக்கு யசோவதி யென்ற ஓர் பெண் பிறந்த

தென்றும் சொல்லுகின்றன. இதை அனுஸரி த்தே அடியிற் கண்ட வம்ச விருக்ஷம் ஜாகோபி பண்டிதரால் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் திகம்பர ஆசாரியர்களால் செய்யப் பட்ட கிரந்தங்களில் இவர் இல்லறத்தையே கொள்ளவில்லை யென்றும் பால்ய முதல் லோக வாழ்க்கையில் மிகுந்த வெறுப்படைந்தவராய் எட்டாவது வயதிலேயே 12 பிரதிக்ஞைகளைச் செய்து சிராவகன் அதாவது லௌகிக சிஷ்யன் அனுஸரிக்க வேண்டிய ஆசாரத்தையும் விதி களையும் அனுஷ்டித்து வந்தாரென்றும் சொல்லு கின்றன. தீர்த்தங்கரர்களில் ஒருவராயும் லோ கத்தில் அக்காலத்தில் வழங்கின மத ஆபாஸத் தையும் அக்ரமத்தையும் அந்யாயத்தையும் கண் டித்துச் சுத்தமான ஆசாரத்தையும் ஜீவகாருண் யத்தையும் வைராக்யத்தையும் போதிக்க அவ தாரம் செய்த மஹா வீரர் கிருஹஸ்தராயிருந்து லௌகிக ஸுகங்களை யனுபவித்து வெறுப் படைந்து ஸந்யாஸியானாரா அல்லது பால்யம முதற்கொண்டே துறவறம் பூண்டாரா என்ப தை நிச்சயிப்பது ஸுலபமல்ல. நமது தேசத்தில் விளங்கின மத ஸ்தாபகர்கள் இவ்விரு விதமாயும்

அனுஷ்டித்திருக்கிறார்கள். புத்தர் ராமாநுஜா சாரியார் நானக் முதலியவர்கள் கிருஹஸ்தர்களா யிருந்து துறவறம் பூண்டவர்கள். சங்கராசாரி யர் மத்வாசாரியார் முதலியவர்கள் பால்யத்தி லேயே ஸந்யாஸம் பெற்றவர்கள். ஆனால் ஜைன தீர்த்தங்கரர்களுடைய அனுஷ்டானம் இன்ன தென்று நமக்கு விளங்கவில்லை. ஆதி ஜைனரான ரிஷப தேவர் கிருஹஸ்தராயிருந்தே வானப்ரஸ் தாசிரமத்தில் பிரவேசித்து அதிலிருந்து ஸந் யாஸியானாரென்று பாகவதம் முதலிய புராணங் களில் சொல்லப்படுகிறது. மேலும் நைஷ்டிக பிரஹ்ம சர்யம் (பிரஹ்ம சாரியாகவே ஆயிஸ் முழுதும் இருந்து விடுகிறது) பிரஹ்ம சர்ய ஸன் யாஸம் (கிருஹஸ்த வானப்ரஸ் தாசிரமங்களைப் பெறாமல் பிரஹ்மசாரியாகவே ஸந்யாஸம் பெறு வது) என்ற கிரமங்கள் பிராஹ்மணர்களுக்குள் ளே அதிகமாய் வழங்கினதென்று தெரிகிறதே யொழிய க்ஷத்ரியர்களுக்குள் அவ்வித ஆசாரம் இருந்ததென்பதற்கு பிரமாணம் அதிகமாய்க் காணப்படவில்லை. மேலும் நான்கு ஆசிரமங் களையும் பூண்டு அனுபவித்தவருக்கே மனுஷ் யர்களின் விருப்பு வெறுப்புகளும் குற்றங்கள், குறைகளும் நன்கு விளங்கும். அவர்களே லோகா

சாரியர்களாயிருக்கத் தகுந்தவர்கள். இவ்விஷயத்தைச சங்கராசாரியருடைய சரித்ரத்தில் வெகு சாதுரியமாய் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதாவது சங்கராசாரியர் மண்டன மிச்ரரை சாஸ்திர வாதத்தில் ஜெயித்த பொழுது அவருடைய பார்யையான ஸரஸ்வதி தேவி குறுக்கிட்டுச சங்கரருடன் வெகு நேரம் சாஸ்திரவாதம் செய்தாள். அவர் தோல்வியடையாததைக் கண்டு, பால்யத்திலேயே பிரஹ்மசர்யாசிரமத்திலிருந்தே ஸந்யாஸம் பூண்ட இவர் கிருஹஸ்தாசிரமத்தின் அனுபவம் சற்றுமில்லாதவரென்று நினைத்து சிருங்கார ·சாஸ்திரத்தைப் பற்றின அனுபவத்தால அறியவேண்டிய பல விஷயங்களைப் பற்றிக் கேட்டாள். அவைகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் சங்கராசாரியர் ஒரு மாஸம் தவணைகேட்டுக்கொண்டு தன் இருப்பிடத்திற்கு வந்து ஞான திருஷ்டியால் பார்க்கும் பொழுது ஒரு தேசத்தில் அமருகனென்ற அரசன் அப்பொழுதே இறந்ததாயும் அவனுடைய தேஹத்தை தஹனம் செய்யப் போவதாயும் கண்டு தன் தேஹத்தைவிட்டு அதை ஓரிடத்தில் மறைத்து வைத்து சிஷ்யர்களைக் காவலிட்டு அமருக ராஜனுடைய தேஹத்தில் பிரவேசித்து

அவனுடைய அந்தப்புரத்தில் வஸித்துக்கொண்டிருந்து தான் அறியவேண்டிய சிருங்கார விஷயங்களை அநுபவத்தால் அறிந்து மறுபடியும் தன் தேஹத்தில் வந்து ஸரஸ்வதிக்குத் தக்க பதில் அளித்தாரென்று சங்கர விஜயங்களில் சொல்லப்படுகிறது.

மேலும் இவருடைய ஜீவசரிதம் அநேக பாகங்களில் கௌதமபுத்தருடைய ஜீவசரிதத்தை ஒட்டியிருக்கிற தென்ற விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாய் மேலேயிடத்தில் விசாரிப்போம். கௌதமபுத்தர் 29-வயஸ்வரையில் கிருஹஸ்தராயிருந்து பிறகு உலகத்தைத் துறந்தாரென்று சொல்லப்படுகிறது.

ஆகையால் மஹாவீரர் விவாஹஞ் செய்து கொண்டு கிருஹஸ்தாசிரமத்தில் வெகுகால மிருந்த பிறகே ஸந்யாஸம் பூண்டாரென்று எண்ணவேண்டி யிருக்கிறது.

இவர் மற்ற மனுஷ்யர்களைப் போல் வேதசாஸ்திரங்களையும் வித்யைகளையும் கலைகளையும் கிரமமாய் ஆசாரியர்களிடத்தில் கற்றாரென்று சொல்லப்படவில்லை. ஆனால் இவருக்குப் பால்யத்

திலேயே அபூர்வ ஞானமிருந்ததாக திகம்பர சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. (கேவல ஞானிகளான ஜகத் குருக்கள் அடையும் ஞானபதவிகள் ஐந்து:— (1) மதி விருஷ்டிக்கப்பட்டு அறியாமலிருக்கும் பதார்த்தங்களைப் பற்றின ஞானம்; இது இந்திரியங்களாலும் மனதாலும் அடையப்படும். (2) சுருதி—இப்பொழுதிருக்கும் ஸகல பதார்த்தங்களையும் முன்னிருந்தவைகளையும் இனி இருக்கப் போகிறவைகளையும் பற்றின ஞானம். முதலாவது வகுப்பு ஞானத்தைத் தவிர இது யுக்தியாலும் ஜெயின கிரந்தங்களைப் படிப்பதாலும் அடையப்படும். (3) அவதி— வெளிடங்களில் நடக்கும் வியவஹாரங்களை அங்கே போகாமலே அறிவது. (4) மனஸ் பர்யாயம்— பிறருடைய எண்ணங்களைத் தெளிவாய் அறியும் சக்தி (5) கேவல ஞானம் — ஸகல விஷயங்களையும பற்றி ஸாமான்யமாயும் விசேஷமாயும் அவைகளின் ஸகல மாறுதல்களுடனும் பூர்ணமாய் அறிவது.— தத்வார்த்தாதி கமஸூத்ரம் 13 முதல் 30-வது சுலோகங்கள்.) இவைகளில மதி, சுருதி, அவதிஞான மென்றவை வர்த்தமானருக்கு இயற்கையாகவே அமைந்திருந்தன. ஆனல் சுவேதாம்பர சாஸ்திரங்களில் இவருக்கு

அவதி ஞானத்திற்குத் தாழ்ந்த அபோகிக ஞான வரையில் உண்டென்று சொல்லப்படுகிறது. (கௌதம புத்தரும் இப்படியே ஸகல பாஷை களையும் ஸகல லபிகளையும் வேத சாஸ்திர புரா ணங்களையும் வித்யைகளையும் தொழில்களையும் இயற்கை யாயறிந்து அவைகளில் நிபுணர்களு டன் எதிர்த்து ஜெயித்தாரென்று பௌத்த கிரந் தங்கள் சொல்லுகின்றன;

## III. துறவறம்.

பால்யம் முதற்கொண்டே லோகவாழ்கை யிலும் இந்திரிய ஸாதகங்களிலும் பரம வைராக் யம் பிறந்து துறவறம் பூண்டு ஸம்பூர்ண ஞானத் தைப் பெற்று மனுஷ்யர்களுக்குப் பரமோ பகா ரம் செய்ய வேண்டு மென்றிருந்தார். ஆனால் அவருடைய பெற்றோர்கள் அவரைத் தடுத்துப் பலகாரணங்களைச் சொல்லிலோக வாழ்க்கையி லேயே நிலை நிறுத்தி யிருந்தார்கள். இவர் ஸந்யா ஸம் கொண்ட விஷயத்தைப் பற்றி திகம்பர கிரந்தங்கள் பின் வருமாறு வர்ணிக்கின்றன;— இவருக்கு 30வது வயஸில் ஒருநாள் ஆத்மத்யா னஞ் செய்து கொண்டிருக்கும் பொழுது திடீ

ரென்று தன் ஆயுஸின் பரிமாணம் அவருக்கு ஞானதிருஷ்டியால் தோன்றிற்று. தான் இவ் வுலகத்தில் 72 வருஷங்களுக்கு மேல் இருக்க முடியாதென்று கண்டு நெடுநாளாய்க்கொண்ட கொள்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற வெகு தீவிரமான இச்சையுண்டாயிற்று. தன் மாதா பிதாக்களிடத்தில் சென்று "நான் உங்க ளுடைய வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு இது வரையில் உங்களுடனிருந்தேன். நான் இந்த ஜன்மத்தை எடுத்துச் செய்யவேண்டிய காரியத்தைக் குறைவற முடிப்பதற்கு அவசிய மான ஸந்யாஸ ஆசிரமத்தில் பிரவேசிக்கும்படி இனியாவது எனக்கு அநுமதிகொடுக்கவேண்டு" மென்றார். அதைக் கேட்டு அவருடைய தாய் "குழந்தாய்! வர்த்தமானா! உனக்கோ இன்னும் 30-வயஸாகவில்லை. உன் ஐசுவரியத்தையும் அதி காரத்தையும் போக போக்யங்களையும் வீடு வாசலில்லாமல் அநாதையாய்ப் பரதேசியாய் உண் ணச் சோறில்லாமல் படுக்க இடமில்லாமல தபிக் கும்படியான காரணம் என்ன நேர்ந்தது? லோக வாழ்க்கையில் இப்பொழுதுதான்பிரவேசித்திருக் கிறாய் இன்னும் உனக்கு லோகஞானம் கொஞ்ச மும் ஏற்படவில்லை. கிருஹஸ்தாசிரமத்திலிருந்து

அனுபவிக்க வேண்டிய விஷயங்களை அனுபவித்து அறிய வேண்டிய விஷயங்களை அறிந்து நானும் உன் பிதாவும் பரகதியடைந்த பிறகு எங்களுக்குச் செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்து நமது வம்ச விருத்திக்கு ஓர் புத்திரனைப் பெற்று பிறகல்லவா ஸந்யாஸம் பூணவேண்டும்" என்று பலவிதமாய்த் தடுத்தாள். ஆனால் மஹாவீரர் "அம்மா! நீ சொல்வதெல்லாம் ஸாதாரண மனுஷ்யர் களுக்குச் சொல்லவேண்டிய வார்த்தைகளே. நான் அவர்களைப் போலல்ல, பூர்வ ஜன்மங்களில் நான் யாரென்றும் என்ன பரிபக்வ ஸ்திதியை அடைந்திருக்கிறேனென்றும் என்ன காரியத்திற்காக இந்த ஜன்மத்தை எடுத்தேனென்றும் இதில் இன்ன பதவியை அடையப் போகிறேனென்றும் உங்களுக்குத் தெரிந்திருந்தால் நீங்கள் இப்படி என்னைத் தடுக்க மாட்டீர்கள். மேலும் உங்களுடைய வார்த்தையைத் தள்ள இஷ்டமில்லாமல் 30 வருஷங்களை வீணாக்கினேன். இனியாவது என்னை நிர்ப்பந்தப் படுத்த வேண்டா" மென்று வற்புறுத்திப் பெற்றோர் களிடத்தில் அனுமதி பெற்றுக் கொண்டு உலகத்தைத் துறந்தார்.

ஆனல் ச்வேதாம்பர கிரந்தங்களில் வேறு விதமாய்ச் சொல்லியிருக்கிறது— பல தடவை மஹா வீரர் லோகவாழ்க்கையை விட்டு ஸந்யாஸியாக வேண்டுமென்று நினைத்தார். ஆனல் வயஸ்சென்ற அவருடைய மாதாபிதாக்கள் அதற்குச் சற்றும் ஸம்மதிக்கவில்லை. அவருடைய பார்யையிடத்தில் அவர் வைத்திருந்த ப்ரீதியும் அவரைத் தடுத்தது. இப்படி 28 வருஷங்களான பிறகு அவருடைய மாதாபிதாக்கள் பரகதியடைந்தார்கள். மஹாவீரர் தன் தடையற்ற ஞான திருஷ்டியால் தான் உலகத்தை துறந்து தன் அவதார கார்யத்தை ஆரம்பிக்க ஸமயம் வந்து விட்டதெனறறிந்தார். ஆனல் அவருடைய தமயனை நந்திவர்த்தனன் "நமது பெற்றோர்கள் நம்மை விட்டுப் பிரிந்ததுக்கம் நமக்கு இன்னும் மாறவில்லையே. நீயும் என்னை விட்டுப் போனல் நான் அந்தக் கஷ்டத்தை எப்படித் தாங்க முடியும். ஆகையால் என் வேண்டுகோளுக் கிணங்கி இன்னும் கொஞ்ச காலம் என்னுடனிரு" வென்று தடுத்தான். அப்படியே மஹாவீரர் இன்னுமிரண்டு வருஷங்கள் வரையில் தன் தமயனுடனிருந்து பிறகு 30வது வயஸில் அவனுடைய அனுமதியைப் பெற்று கிரு

ஹஸ்தாச்ரமத்தை விட்டு ஸந்யாஸத்தைக் கைக் கொண்டார்.

இந்த முக்யமான விஷயம் மார்க்கசிர்ஷ மாஸம் அபரபக்ஷம் தசமி திதியில் நடந்த தென்று இருவகை ஜெயினர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். மஹாவீரர் இரண்டு தினங் களும் ஓர் இரவும் உபவாஸ மிருந்து தன் அளவற்ற ஐசுவரியத்தைப் பிரஜைகளுக்குத் தானஞ் செய்தார். மத்யாஹ்ன ஸமயத்தில் அவர் அரண்மனையிலிருந்து புறப்பட்டு 1000 ஸேவர்களால் சுமக்கப்பட்ட சந்திர ப்ரபை யென்ற தன் பல்லக்கில் ஏறி குண்டல புறத் தின் க்ஷத்ரிய பாசத்திற்கு வெளியிலுள்ள ஓர் தோட்டத்திற்குச் சென்றார். அதற்குத் திகம்பரர்கள் ஸார்த்தி கண்டமென்றும் சுவே தாம்பரர்கள் ஞாதிருஷண்ட மென்றும் பெய ரிடு கிறார்கள். அங்கே பாண்டுசிலை யென்ற ஓர் விசித்ரமான ஆஸனம் அமைக்கப் பட்டிருந்தது. அதாவது ஒன்றைக்காட்டிலும் ஒன்று குறைந்த ஐந்து ஆஸனங்களை ஒன்றின் மேலொன்று அடுக்கி அதை நான்கு புறங்களிலும் மாலைகளா லும் ஆபரணங்களாலும் அலங்கரித் திருந்தார்

கள். அது ஓர் விசாலமான சந்தன விருக்ஷத்தின் நிழலில் போடப் பட்டிருந்தது. மஹா வீரர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்து தன் ஆபரணங்களையும் மாலைகளையும் வஸ்திரங்களையும் எடுத்து விட்டு 24பரிக்ரஹங்களை (பற்றுகளை) நீக்கி 28 மூல குணங்களை கைக்கொண்டு ஜைன நிர்கிரந்தமுனி யென்ற ஆசிரமத்தில் பிரவேசித்தார். (பாஹ்ய பரிக்ரகங்கள் 10. அந்தரங்க பரிக்ரகங்கள் 14. வெளிப்படையான 10 பரிக்ரஹங்களாவன—பூமி, வீடுகள், தனம், தான்யம் வேலைக்காரர்கள், ஆடுமாடுகள், ஆஸனங்கள், வாஹனங்கள், உடைகள், பாத்திரங்கள். அந்தரங்கமான 14 பரிக்ரஹங்களாவன—விபரீத கொள்கை, ஸ்திரீகள் புருஷர்களைப் போலும் புருஷர்கள் ஸ்திரீகளைப்போலும் இருவர்களும் நபும்ஸர்களைப்போலும் நடக்க வேண்டுமென்ற ஆசை, பரிஹாஸம், காமம், துக்கம், பயம், கோபம், தற்புகழ்ச்சி, வஞ்சனை, லோபம், பொறாமை, ஆசை, காரணமற்ற வெறுப்பு, சக்தியின்மை. 28 மூல குணங்களில் மஹா வ்ரதங்கள் 5, ஸமதிகள் 5, இந்திரிய தமனங்கள் 5, மித்ய விதிகள் 13 அடங்கியிருக்கின்றன. கொல்லாமை, உண்மை, திரு

டாமை, பிரஹ்மசர்யம், பரிக்ரஹங்களை விடுவது என்ற இவ்வைந்தும் மஹா வ்ரதங்கள். ஜாக்கிர தையாய் நடப்பது, பேசுவது, உண்பது, பதார்த் தங்களை எடுத்து வைப்பது, மல ஜலங்களை விடு வது இவ்வைந்தும் ஜாக்ரதையாய்ச் செய்ய வேண்டிய ஸமிதிகள். கண், செவி, மூக்கு, வாய் முதலிய இந்திரியங்களையும் விஷய இச்சைகளை யும் அடக்குவது ஐந்து இந்திரிய தமனங்களா கும். ஸர்வ ஸமோஹாதர பாவம் தீர்த்தங்கரர்க ளுடைய மஹிமையையும் புண்ய கர்மங்களையும் தியானம் செய்வது, ஐந்து பரமேஷ்டிகளைக் குறித்து ப்ரார்த்திப்பது, பாபங்களைக் குறித்துப் பச்சாத்தாபப்படுவது, மதக் க்ரந்தங்களைப் படிப் பது, போகாப்யாஸஞ் செய்வது, வஸ்த்ரங்களை நீக்குவது, தலைமயிரை எடுப்பது, மிதமாய்ப் புஜிப் பது, நாளுக்கு ஒரு வேளை புஜிப்பது, நின்று கொண்டே புஜிப்பது, பல் தேய்க்காமலிருப்பது, ஸ்நாநஞ் செய்யாமலிருப்பது இந்தப் பதின் மூன் றும் நித்ய கர்மங்கள்) பிறகு மஹாவீரர் தனக்கு முன் நிர்வாண பதவியை அடைந்திருக்கும் ஸித் தர்களுக்கு நமஸ்காரஞ் செய்து "12 வருஷங் கள் வரையில் இந்தத் தேஹத்தைப் பற்றி சற் றும் கவனிக்கமாட்டேன். மிருகங்களாலும் மனி

தர்களாலும் தேவ கணங்களாலும் எனக்கு நேரக் கூடிய ஸகல அபாயங்களையும் கஷ்டங்களையும் இடையூறுகளையும் பொறுமையுடனும் சாந்தியுடனும் ஸஹிப்பேன்'' என்று பிரதிக்ஞை செய்தார். அதே காலத்தில் எண்ணிறந்த ஜனங்கள் உலகத்தைத் துறந்து ஸந்யாஸியானார்களென்று சொல்லப்படுகிறது. மஹாவீரர் கேவல க்ஞானத்தை அடைவதற்கு 12 வருஷங்களாயின. அவர் ஒவ்வொரு வருஷத்திலும் எட்டு மாஸங்கள் வரையில் யாத்திரை செய்து கொண்டும், அங்கங்கே ஜனங்களுக்கு உபதேசஞ் செய்து கொண்டும், தன் கர்மபந்தம் ஒழிந்து தான் கேவல ஞானத்தை அடைவதற்கு ஸாதனமான கடும் தபஸ் செய்து கொண்டிருந்தார். மழைக்காலமான நாலு மாஸங்களில் ஏதாவது ஓரிடத்தில் தங்கியிருப்பார். ஸந்யாஸம் பூண்ட பிறகு கும்மாரமென்ற கிராமத்திற்கு வந்து அங்கிருந்து யாத்திரை செய்யப் புறப்பட்டார். முதலாவது, சாதுர் மாஸத்தை ஆஸ்திக கிராமத்திலும், அடுத்த மூன்றை சம்பா, பிருஷ்டிசம்பா என்ற இடங்களிலும் பாக்கியிருந்த எட்டைவைசாலி, வணிஜ்க்ராமமென்ற ஸ்தலங்களிலும் கழித்தாரென்று கல்பஸூத்ரங்கள் சொல்லுகின்றன. மழைக்

காலமான 4 மாஸங்களில் பல நுட்பமான ஜந்துக்கள் வழிகளில் ஸஞ்சரிக்குமாகையால், தவறுதலாய் அவைகளைக் கொல்வதாலுண்டான பிராணி ஹிம்ஸை கூடாதென்கிற சாதுர்மாஸ்ய விரதம் ஏற்பட்டது. திகம்பர கிரந்தமான மஹாவீர புராணத்தில் வேறுவிதமாய்ச் சொல்லியிருக்கிறது. மஹாவீரர் தான் ஸந்யாஸங் கொண்ட காலத்தில் நான்காவது ஞானபதவியை அடையவில்லை. ஆகையால், 6 மாஸங்கள் வரையில் இடைவிடாமல் சற்றும் அசையாமல் கடும் தபஸ் செய்தார். ஆறு மாஸங்களான பிறகு குலபுரமென்ற ஸ்தலத்திற்குப்போனார். அதற்கு அதிபதியான குலாதிபன் அவரை மிகுந்த பக்தியுடன் உபசரித்தான். அங்கே மஹாவீரர் 6 மாஸ உபவாஸத்தை முடித்துப் பாரணை (போஜனம்) செய்தார். அங்கிருந்து தாஸபுரமென்ற ஸ்தலத்திற்கு அவர் போனார். அதை யாளும் குலனென்ற அரசன் அவரை எதிர்கொண்டழைத்து பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து, பாதங்களைக்கழுவி, அன்னமும் பாலும் சமர்ப்பித்தான். அதை அங்கீகரித்து மஹாவீரர் காட்டிற்குத் திரும்பி விட்டார். இப்படிப் பல விடங்களுக்குப் போய் 12 வகையான கடும் தபஸையும் யோகத்

தையும் அநுஷ்டித்து அதின் மூலமாய் எட்டு வித ஐசுவரியத்தையும் எண்ணிறந்த லிப்திகளையு மடைந்தார். 22 பரிஸஹங்களைப் பொறுத்து, ஐந்து மஹா விரதங்களையும், ஐந்து ஸமிதிகளையும், மூன்று குப்திகளையும், 84 உத்தர குணங்களையும் அநுஷ்டித்தார். ஒரு தடவை உஜ்ஜெயினிக்குப் போய், அங்கே ஓர் சமசானத்தில் தபஸ் செய்து கொண்டிருந்தார். பிறகு, கௌசாம்பி நகரத்திற்குப் போய் அங்கிருந்து காட்டிற்கு வந்து, மறுபடியும் தபஸ் செய்து மனஸ்பர்யாய ஞானமென்ற நான்காவது பதவியையடைந்தார். அதற்சப்பிறகு 12 வருஷங்கள் வரையில் மௌன விரதத்தைக் கைக் கொண்டு மறுபடியும் கடுந் தபஸ் செய்தார். இதனால் ஒரே இடத்தில் 12 வருஷங்கள் வரையிலிருந்து தபஸ் செய்தாரென்றும் அதற்கு முந்திய யாத்திரைகள் செய்யப்பட்டனவென்றும் எண்ண வேண்டியிருக்கிறது. மேலும், தான் ஸந்யாஸம் வாங்கிக் கொண்டே இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, கோஸாலர் என்பவரை ராஜ கிருஹத்திற்கு ஸமீபித்த நாலந்தா வென்பவரை மஹாவீரர் ஸந்தித்ததாயும் இருவரும் பானீய பூமியென்ற விடத்தில் 6 வருஷங்கள் சேர்ந்திருந்ததாயும் பகவதீ

யென்ற கிரந்தத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால், கேவல க்ஞானமடைந்த பிறகே மஹாவீரர் மேற்சொன்னவிடத்திற்குப் போய், அங்கே ஒரு சாதுர்மாஸ மாத்ரம் இருந்தாரென்று கல்ப ஸூத்ரத்தில் சொல்லியிருக்கிறது. தான் துறவியாய் ஒரு வருஷம் வரையில் மஹாவீரர் வஸ்திரங்களை தரித்துக்கொண்டிருந்தா ரென்றும் அதற்குப் பிறகு நிர்வாணமா யிருந்தா ரென்றும், சுவேதாம்பர கிரந்தமான கல்ப ஸூத்ரத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால் "அவர் ஸந்யாஸம் செய்த பொழுது 24 பரிக்ரஹங்களைத் தள்ளிவிட்டதால் அவைகளில் ஒன்றான வஸ்திரங்களையும் தள்ளியிருக்க வேண்டு"மென்று திகம்பர கிரந்தமான மஹாவீர புராணத்தில் காணப்படுகிறது.

இப்படி 12 வருஷங்கள் வரையில் கடுமையான தபஸைச் செய்து தியானத்தில் ஆழ்ந்திருந்து, மஹாவீரர் தன் 43 வது வயசில் வைசாக மாதத்தில் அபரபக்ஷத்தில் தசமிதிதியில் பிர்சுவநாதமலைக்கு ஸமீபத்திலுள்ள ருஜுபாலிகா வென்ற நதிக்கரையில் ஜிரும்பக கிராமத்தில் ஸமகன் என்ற குடியானவனுடைய வயலில், ஓர்

சால விருக்ஷத்தின் கீழ் போடப்பட்ட ரத்ன சிலையில் வஜ்ராஸனத்தில் ஸூர்ப னுக் கெதிரே உட்கார்ந்திருக்கும் பொழுது தர்சனவர்ணீயம், ஞானவர்ணீயம், மோஹனீயம், அந்தராயமென்ற நாலுவித கர்மங்களை யொழித்து, அகண்டமாயும், ப்ரமமாயும், எல்லையற்றதாயும், பூர்ணமாயும் இருக்கும் ஸர்வோத்தமமான கேவல ஞானத்தை யடைந்தார்.

## IV. மத ப்ரசாரம்.

மஹாவீரர் தன்னுடைய 42 வது வயஸ் முதல் 30 வருஷங்கள் வரையில், ஹிந்துஸ்தான மெங்கும் யாத்திரை செய்துகொண்டு, தான் அடைந்த ஞானத்தை ஸகல மனுஷ்யர்களுக்கு உபதேசித்து கோடானுகோடிகளை அக்ஞானத்தி லிருந்தும், ஸம்ஸார துக்கத்திலிருந்தும் தப்பு வித்து, எல்லையற்ற ஞானத்தையும், துயரற்ற ஆனந்தத்தையும் அடையச் செய்தார். தான் லோக குருவாய் எல்லோராலும் பூஜிக்கப்படு வதற்குத் தகுந்த குணங்கள் இவரிடத்தில் பூர்ண மாயிருந்தன. உத்தம புருஷ லக்ஷணங்கள்யாவும் இவரிடத்தில் குறைவற விளங்கின. நிகரற்ற அழ கும் எல்லையற்றதேஹபலமும், ஸாமுத்ரிகா சாஸ்

திரத்தின்படி அமைக்கப்பட்ட அங்கங்களும்பார்ப்பவர்களின் மனதை அபகரித்து, அவர்களை வசப்படுத்தக் கூடிய பார்வையும் பொருந்தினவர். உலகத்தில் வழங்கும் ஸகல மதங்களின் பரமரஹஸ்யங்களை யறிந்தவர். வேத சாஸ்திர புராணங்களிலும், வித்யைகளிலும், கலைகளிலும், ஈடில்லாத திறமையுடையவர். வைராக்கியம்,சமம், தபம், பொறுமை, கருணை முதலிய ஸத்குணங்களால் அலங்கரிக்கப் பட்டவர். கூர்மையான புத்தியும், மதுரமான வார்த்தையும், கேட்பவர்களின் ஸம்சயங்களை விளக்கித் தத்வத்தைப் போதிக்கும் சக்தியுமுடையவர். ஸகல லோகங்களிலும ஸகல பதார்த்தங்களின் ஸாமான்ய விசேஷ தர்மங்களை யறிந்தவர். காலத்தாலும், தேசத்தாலும், வஸ்துவாலும், அவருடைய ஞானத்திற்குத் தடையில்லை. பலவிதமான யோக மார்க்கங்களை அப்யஸித்து, ஸகல ஸித்திகளையும் ஸம்பாதித்தவர். இவ்விதமான உத்தம குணங்களுடன பலாபேக்ஷை யன்றியில் அபார கருணையால் லோகத்தில் எல்லோரும் ஸ்திரீ, புருஷர்கள்;ஏழைகள்,தனவான்கள்,பண்டிதர்கள், பாமரர்கள், பிராஹ்மணர்கள் சண்டாளர்களென்ற பேதமில்லாமல், தான் அடைந்த நிலையை அவர்

களும் அடைய வேண்டுமென்று தனக்கு இயற்கையாயுள்ள ஸகல போகங்களையும் ஸுகங்களையும் துறந்து, எண்ணிறந்த கஷ்டங்களையும் அசௌகர்யங்களையும் அனுபவித்து, 30 வருஷங்கள் வரையில் ஓரிடத்திலில்லாமல் அலைந்து கொண்டேயிருந்தார். புத்திமான்களும், பண்டிதர்களும், அரசர்களும் இவருடைய உபதேசத்தால் வசப்பட்டு இவருக்குச் சிஷ்யராய் இவருடைய மதத்தை ப்ரசாரம் செய்வதில் உதவி செய்தார்கள். தான் 12 வருஷங்கள் வரையில் கடும் தபஸ் செய்ததும், யோகமுறைகளை அனுஷ்டித்ததும் வீணல்ல வென்றும், அதனால் தனக்குக் கிடைத்த ஒன்பது லப்திகளும், அனந்த சதுஷ்டயமும் லோகத்தார்க்கு அளவற்ற பிரயோஜனத்தைக் கொடுத்தன வென்றும் அவருக்கு நன்ருய்த் தெரியும். (ஒன்பது லப்திகளாவன—(1) அனந்த தர்சனம்,—தடையற்றகொள்கை; (2) அனந்த ஞானம்—தடையற்ற ஞானம்; (3) கர்மங்களிலிருந்து விடுப்பட்ட பிறகு ஸம்பாதிக்கப்பட்ட ஞானத்தில் சிரத்தை, (4) ஸமாதி (5) லௌகிக வியாபாரங்களை விடுவது; (6) அனந்த சதுஷ்டயத்தை யடைவது: (7) எல்லையற்ற ஆனந்தம்; (8) ஸமாவஸரணர்களின்

தேஜஸையடைவது; (9) ஸகல கர்மங்களையும் ஜயிக்கும் சக்தி. அனந்த சதுஷ்டயங்களாவன:— பூர்ணமான சிரத்தை; ஞானம்; ஆனந்தம்; சக்தி.) இவர் கேவல ஞானத்தை யடைந்தவுடனே கௌதம இந்திர பூதி யென்பவர் இவருக்கு சிஷ்யரானார். இவரை விட்டு ஒரு பொழுதும் பிரியாமல் 30 வருஷங்கள் வரையில் கூடவிருந்து மஹாவீரர் நிர்வாணத்தை யடையும் ஸமயத்திலேயே இவரும் கேவல ஞானத்தை யடைந்தார். முதலில் மஹாவீரர் கௌதமருக்குத் தன் மத தகையை உபதேசித்துப் பிறகு, அவ்விடத்திலிருந்த ஜனங்களைச் சிஷ்யர்களாக்கிப், பிறகு யாத்திரை செய்யப் புறப்பட்டார், அக் காலத்தில் வழங்கின பல மதங்களைக் கண்டித்து அம் மதாசாரியர்களுடனும் பண்டிதர்களுடனும்வாதம் செய்து அவர்களை ஜயித்து தன் மதத்தை அவர்களுக் குபதேசித்து அவர்களால் பலவிடங்களிலும் பிரசாரம் செய்வித்தார். கங்கையின் இரு கரைகளிலுமுள்ள தேசங்களில் அவர் அடிக்கடி யாத்திரை செய்தார். ஆரம்பத்தில் மகத தேசத்திலும் குண்டல புறத்தைச் சுற்றி யிருக்கும் இடங்களிலும் மதபிரஸங்கம் செய்து, அங்கிருப்பவர்களால் கொண்டாடிப் பூஜிக்கப்பட்டுப்

பிறகு பேகார் தேசத்திக்குச் சென்று சிராவஸ்தி, வைசஸ்தி முதலிய பலவிடங்களில் தங்கி ஹிமாலயமலை வரையில் பிரயாணஞ் செய்தார். "வைசாலியிலும் வணிஜக்ராமத்திலும் நான்கு சாதுர்மாஸங்களும் ராஜகிரஹத்திலும் நாலந்தா விற்கு ஸமீபத்திலும் 14 சாதுர் மாஸங்களும் மிதிலையில் 6-ம், பத்ரிகையில் 2-ம், அலபிகையில் 1-ம், பானிய பூமியில் 1-ம், சிராவஸ்தியில் 1-ம், ஹஸ்திபாலனால் ஆளப்பட்ட பாபா வென்ற ஸ்தலத்தில் கடைசி சாதுர்மாஸ்யமும் மஹா வீரரால் கழிக்கப்பட்டன" வென்று கல்ப ஸூத்ரத்தில் சொல்லி யிருக்கிறது. விதேஹதேசத் தரசனை சேதகன் தனக்குப் பந்து வாகையால் அவரை மிகுந்த ப்ரீதியுடனும் மர்யாதையுடனும் ஆதரித்தான், அங்கதேசத் தரசனை கூனிகனும் கௌசாம்பிக்கு அதிபதியான சதாநீகனும் இவரை ப்ரார்த்தித்து அழைத்து சிஷ்ய கணங்களுக்கு விசேஷ மர்யாதை செய்து, இவருடைய மதத்தை அவலம்பித்தார்கள். இந்த 30 வருஷங்களில் மஹாவீரர் மகதம், பேஹார், பிரயாகை, கௌசாம்பி, சம்பாபுரி முதலிய பல தேசத்து ஜனங்களை ஜெயின மதத்தில் பிரவேசிக்கச் செய்தாரென்று

சொல்லப்படுகிறது. ஆனால், மகத தேசத்தின் ராஜதானியான ராஜகிரஹத்திலேயே இவர் வெகு காலம் வஸித்துக் கொண்டிருந்தார். ஸிரேணிகனென்ற மகதாதிபதி மஹாவீரருடைய உபதேசத்தைக் கேட்டுப் பலஹிதமாய் அவரைப் பரீக்ஷித்து கௌதம இந்திரபூதி யென்ற சிஷ்யன் சொன்ன ஸமாதானங்களால் திருப்தியடைந்து, ஜெயின மதத்தைச் சேர்ந்து வெகு தீவிரமாய் அதை ப்ரசாரம் செய்தான்.

மஹாவீரர் மற்ற ஸந்யாஸிகளையும் ஸாதுக்களையும் போல் ஒண்டியாய்ப் யாத்திரை செய்வதில்லை. தன் மதத்தைச சேர்ந்த எண்ணிறந்த ஸந்யாஸிகளும் சிஷ்யர்களும் அவருடன் சென்றார்கள். அந்தச் சிஷ்ய ஸங்கத்திற்கு ஸமவஸரணமென்று பெயர். உலகத்தைத் துறந்து ஸந்யாஸம் பூண்டமுனிகள் 14,000 எப்பொழுதும் அவருடன் யாத்திரை செய்தார்கள். அவர்கள் போகுமிடங்களில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு இடங்கொடுக்கும் படியான ஓர் பெரிய ஸபா மண்டபம் அமைக்கப்பட்டது. அதின் தூண்கள் தங்கத்தாலும் ரத்னங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. முத்துகளாலும் ரத்னங்களாலும்

விசித்ரமாய் வேலை செய்யப்பட்டு விளங்கும் ஓர் விலை யுயர்ந்த ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்தே மஹாவீரர் பிரசங்கம் செய்தார். அவருடைய சிஷ்யர்களில் ஆர்ஜிகர்களென்ற பெண் துறவிகளுமுண்டு; மஹாவீரர் ஸம்ஸ்கிருதத்திலேயே உபதேசஞ் செய்தார் (இதற்கு அனக்ஷரீ வாணி யென்று ஜெயின கிரந்தங்களில் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.) இது ஸாதாரண ஜனங்களுக்குத் தெரியாததால் கௌதம இந்திரபூதியென்ற சிஷ்யர்கூடவிருந்து உபந்யாஸங்களை மாகதி யென்ற ஜனங்களின் பாஷையில் மொழி பெயர்த்தார்.

மஹாவீரர் தன் உபதேசத்தைக் கேட்டு ஜெயின மதத்தின் கொள்கைகளை ஸ்திரமான சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறவர்களையே சிஷ்யர்களாய் ஒப்புக்கொண்டார். ஜாதியையும் வர்ணாச்ரம தர்மங்களையும் லௌகிக ஸ்திதியையும் அவர் கொஞ்சமேனும் கவனிக்கிறதில்லை.

## V நிர்வாணம்.

(மஹாவீரர் நிர்வாணத்தை யடைந்தது.)

மஹாவீரர் கோடிகோடி வருஷங்களாய் எண்ணிறந்த ஜன்மங்களை யெடுத்து பலவிடங்

களில் பல காலங்களில் பிறந்திருந்து முடிவில் இந்த ஜன்மத்தில் கடுந்தபஸ் செய்து ஸமாதியில் ஆழ்ந்து கேவல ஞானத்தை யடைந்து 30 வருஷங்கள் வரையில் தன் ஞானத்தையும் ஆனந்தத்தையும் உலகத்தார்க்குத் தடையில்லாமல் அளித்து, தான் இவ்வுலகத்தில் வந்தவதரித்த காரியத்தைக் குறைவற நிறைவேற்றினார்.

பாவபுரியின் அரசனான ஹஸ்திபாலனென்பவன் மஹாவீரரிடத்தில் மிகுந்த அபிமான முள்ளவன். அவரைப் பிரார்த்தித்து அழைத்து அவருடைய உபதேசங்களை எல்லோரும் கேட்டுக் கடைத்தேற வேண்டுமென்று விசேஷ ஏற்பாடுகளைச் செய்திருந்தான். ஓர் வனத்தில் பெரிய ஏரிக்கரையில் விஸ்தாரமான மண்டபத்தை அமைத்து, இந்திர ஸபையைப்போல் அதை அலங்கரித்தான். மஹாவீரர் வீற்றிருந்து பிரஸங்கம் செய்வதற்காக ஓர் உயர்ந்த ரத்ன ஸிம்ஹாஸனத்தைப் போட்டிருந்தான். தன் பந்துக்களும் மித்ரர்களுமான பல அரசர்களையும் பிரபுக்களையும் பண்டிதர்களையும் தருவித்தான். பல விடங்களிலிருந்து எண்ணிறந்த ஜனங்கள் அங்கே வந்து கூடினார்கள். ஸ்திரீகளும், புருஷர்

களும், பரதேசிகளும், அரசர்களும், அந்த மஹா மண்டபத்தில் நிறைந்திருந்தார்கள். அவரவர்களுடைய அந்தஸ்திற்குத் தகுந்தபடி ஜனங்கள் 12 வகுப்புகளாய்ப் பிரிக்கப்பட்டார்கள். மஹாவீரர் அந்த ஸபையில் தன் சிஷ்ய கணங்களுடன் பிரவேசித்து 6-நாள்கள் வரையில் ஓயாமல் பிரஸங்கம் செய்தார். 7-வது தினம் கார்த்திகை மாஸம் பூர்வ பக்ஷம் அமாவாஸயை திதி ஸ்வாதி நக்ஷத்ரம் ராத்ரியில் இருட்டாயிருந்ததால் அந்த ஸபையில் எங்கும் பிரகாசிக்கும்படியான எண்ணிறந்த தீபங்கள் போடப்பட்டிருந்தன. கௌதம இந்த்ர பூதியைத் தவிர மற்ற சிஷ்யர்கள் எல்லோரும் அவரைச் சுற்றி யிருந்தார்கள். கௌதமர் ஏதோ ஒரு காரியமாய் மஹாவீரரால் அனுப்பப்பட்டிருந்தார். இரவு முழுவதும் மஹாவீரர் பிரஸங்கம செய்துகொண்டே யிருந்தார். நான்காவது ஜாமத்தில் அங்கிருந்த எல்லோர்க்கும் தடுக்கமுடியாத தூக்கம் பிடித்து அயர்ந்து பிரக்ஞையற்று நித்திரைசெய்தார்கள். மஹாவீரர் தன்சுக்லஞானத்தால்தான்நிர்வாணத்தை யடைய வேண்டிய ஸமயம் வந்து விட்டதென்றறிந்தார். சலம்பர்யங்க மென்ற ஓர் யோகாஸனத்தில் இருந்து, ஸமாதியில் ஆழ்ந்து ஸந்தியாகாலம் ஆரம்பிக்

கும் ஸமயத்தில் நிர்வாண பதவியை யடைந்தார். காலையில ஜனங்கள் எழுந்து பார்க்கையில் லோக குரு தேஹத்தைத் துறந்ததைக் கண்டு எல்லோரும் கோவென் றலறிப் புலம்பினார்கள். அப்பொழுது கௌதமர் அங்கே வந்து ஸமாதானஞ் செய்து அவருடைய உக்ர க்ரியைகளை வெகு விமர்சையாய் நடப்பித்தார். தங்களுடைய குரு அநித்யமான இந்த ஸம்ஸாரத்திலிருந்தும், துக்கத்திலிருந்தும் விடுபட்டதைப்பற்றி வருந்தக் கூடாது. ஸந்தோஷிக்க வேண்டுமென்று அவர் உபதேசித்ததைக் கேட்டு ஜனங்கள் பல விடங்களில் ஸபைகளைக் கூட்டினார்கள். உத்சவங்களைக் கொண்டாடினார்கள். தீபங்களை ஏற்றினார்கள். தற்காலத்தில் வட தேசத்தில் வழங்கும் திவாலியென்ற உத்ஸவம் அதிலிருந்து உண்டாயிற்றென்றும், தீபங்களை வரிசையாய் ஏற்றுவதால் அதற்கு தீபஆவளி யென்று வந்ததென்றும் சொல்லப்படுகிறது. தீபாவளிக்குச் சில தினங்களுக்கு பிறகு ஹாயி ஹாயி அல்லது ஹத்ரி யென்று சொல்லப்படும் பூஜையும் அக்காலத்திலேயே ஏற்பட்டதென்றும் மஹாவீரர் நிர்வாணத்தையடைந்த அந்த ஸபையின் ஞாபகமாகவே இப்பொழுதும் அமைக்கப்படுகிறதென்று சொல்வதுண்டு.

## அவருடைய சிஷ்யர்கள்

மஹாவீரரிடத்தில் நமக்குள்ள மதிப்பும் கௌரத்தையும் ஜெயின மதாசாரியர்களாலும் மதக்ரந்தங்களாலும் ஏற்பட்டதென்றாலும் அவருடைய சிஷ்யர்களும் மதஸ்தர்களும் அவரிடத்தில்வைத்திருந்த சிரத்தையே விசேஷ காரணமாகும். மஹாவீரர் தான் உள்ளவரையில் தன் சிஷ்ய கணங்களுடனே பல விடங்களுக்கு யாத்திரை செய்துகொண்டிருந்தார். அந்தக்கூட்டம் நான்கு வகுப்பாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு தலைவனும் வெவ்வேறு ஆசாரங்களுமுண்டு. முதலாவது வகுப்பில் சிரமணர்கள் அல்லது முனிகளென்ற 14,000 மனுஷ்யர்களுண்டு. அவர்கள் ஜெயினமதஸ்தர்களுக்குள் மிகுந்த மேன்மை வாய்ந்தவர்கள். வெகு கடுமையான ஆசாரமும் நியமமும் உள்ளவர்கள். ஜைன கிரந்தங்களில் இவை விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும், இவ்வகுப்பு 9 கணங்களாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு கணநாதர் நியமிக்கப்பட்டிருந்தார். அவை யாவன:—(1) இந்த்ரபூதி 500 முனிகளுக்குத் தலைவன்; (2) அக்னிபூதி 500, (3) வாயுபூதி

500; (இம் மூவரும் ஸஹோதரர்கள்,) (4) ஆர்ய வியக்தர் 500; (5) ஸுதர்மா 500; (6) மண்டிதபுத்ர 250, (7) மௌர்யபுத்ர 250; (8) அகம்பிதர் 300, அசலவிருதர் 300, (9) மைத்ரேயர் 300; பிரபாஸர் 300; இப்படி ஒன்பது கணங்களும் 11 கணதரர்களும் இவர்களெல்லோருக்கும் தலைவராய் கௌதமைந்திர பூதியும் ஏற்படுத்தப்பட்டது. இந்த 11 பிரதம சிஷ்யர்களில் இந்திரபூதியும் ஸுதர்மாவுமே மஹா வீரருக்குப் பின் உயிரோடிருந்தார்கள். மற்றவர்கள் அவருடைய காலத்திலேயே கேவல ஞானம் பெற்று தேஹத்தை விட்டார்கள். மேற்சொன்ன கணக்கில் 14,200 முனிகள் அடங்கியிருக்கிறார்கள். இந்தப்பாக்கி 200-ம் முனி ஸங்கத்தில சேராதவர்களும் அல்லது சிஷ்யர்களுமாயிருக்கலாம். இதைத் தவிர அவர்களுடைய யோக்யதையையும் ஞானத்தையும் பற்றி வேறொரு வகுப்பு கல்ப ஸுத்ரங்களில் சொல்லப்படுகின்றது. ஜைன வேதத்தின் 14 பூர்வங்களையும் 12 அங்கங்களையும் பூர்ணமாய் அறிந்தவர்கள் 300 முனிகள்; அவதி ஞானத்தையும மேலான சக்திகளையும்உடையவர்கள் 300; கேவல ஞானம் பெற்றவர்கள் 700; விகிர்த்தவுடன் விகி-

த்த ரூபங்களை எடுக்கக் கூடியவர்களும் தேவர் களில்லாவிட்டாலும் தேவர்களுடைய சக்திகளைப் பெற்றவர்களும் 700. ஸகல பூதங்களின் மனோ பிப்பிராயங்களையும் அறியக் கூடியவர்கள் 500. இதர மதஸ்தர்களுடன் வாதம் செய்து ஒரு பொழுதும் தோல்வியடையாத பண்டிதர்கள் 400. பூர்ணமான யோக்யதையையுடைய ஆண் சிஷ்யர்கள் 700, பெண் சிஷ்யர்கள் 1400, இதர முனிகள் 800, இந்த 6800 போக பாக்கி அவ்வளவு மேலான யோக்யதையில்லாதவர்கள். திகம்பிர சாஸ்திரங்களின் பிரகாரம் 12 அங்கங்களையும் 14 பூர்வங்களையும் மனப்பாடமாய் அறிந்தவர்கள் 300, முனிவர்கள அவதிஞானம் பெற்றவர்கள் 1300; கேவல ஞானிகள் 700; காம ரூபமெடுக்கக் கூடியவர்கள் 900, நாலுவித ஞானம் பெற்றவர்கள் 500, வாதஞ் செய்யும் பண்டிதர்கள் 1200, சாதாரண முனிகள் 9900, இந்தக் கணக்குப்படி 14,800 முனிகள் ஆகிறது.

மஹா வீரருடைய பதினொரு பிரதம சிஷ்யர்களும் இதர மதங்களிலிருந்து ஜெயின மதத்தில் சேர்ந்தவர்கள். எல்லோர்க்கும் தலைவரான இந்திர பூதி ஹிந்து மதத்தில் விசேஷ பாண்டித்ய

முள்ளவனும் அநேக பிரமாண கிரந்தங்களை இயற்றினவனுமான ஒரு பிராஹ்மணன்; வஸுபூதியின் புத்ரன், வித்தையிலும், ஞானத்திலும் தனக்கீடில்லை யென்று கர்வங் கொண்டவன்; 500 சிஷ்யர்களையுடையவன். ஒரு நாள் ஒரு கிழவன் அவனிடத்தில் வந்து ஸ்வாமி! என் குருவான மஹாவீரர் எனக்கு ஒரு சுலோகத்தை யெழுதிக் கொடுத்தார். ஆனால் அதற்கு அர்த்தஞ் சொல்வதற்குள் ஸமாதியில் ஆழ்ந்து விட்டார். அதைப் பலரிடத்தில் காட்டியும் அர்த்தம் விளங்கவில்லை. தங்களுடைய ஒப்பற்ற வித்தையும் ஞானத்தையும் பற்றி நான் விசேஷமாய்க் கேள்விப்பட்டுத் தாங்களே அதற்குப் பொருள் விளக்கக் கூடியவர்களென்று தங்களை ஆசிரயித்தேன் என்றான். இந்திர பூதி அப்படிச் செய்வதாய் ஒப்புக்கொண்டு சுலோகத்தை வாங்கிப் பார்க்கையில் ஒன்றும் விளங்கவில்லை. அதில் கண்டிருக்கும் பல விஷயங்கள் புதிதாயும் சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கின ஸங்கேதமாயுமிருந்தன. ஆகையால் மஹா வீரரிடத்தில் போய்த் தனக்கு விளங்கின வரையில் அதற்கு அர்த்தஞ் சொல்லுவோமென்று தன் ஸஹோதரர்களான அக்னிபூதி, வாயுபூதியையும், 500

சிஷ்யர்களை யழைத்துக் கொண்டு மஹாவீரரிடத்திற்கு வந்தார். அந்த மஹா யோகியின் தேஜஸையும், காந்தியையும், சாந்தியையும் கண்டு ஆச்சரியங் கொண்டு, தன் கர்வமழிந்து அந்தச் சுலோகத்திற்குத் தனக்குப் பொருள் விளங்கவில்லை யென்று ஒப்புக் கொண்டு அவரைச் சரணமடைந்தார். அப்பொழுது மஹா வீரர் தன் மதக் கோட்பாடுகளை அவருக்கு விஸ்தாரமாய் உபதேசிக்க இந்திரபூதி தன் ஸஹோதரர்களுடனும் 500 சிஷ்யர்களுடனும் ஜெயின மதத்தில் பிரவேசித்தார். மஹாவீரரிடத்தில் அவருக்கு மிகுந்த ப்ரீதி. கிரமக்ரமமாய் அவரை கணதரராயும் எல்லோருக்கும் அதிகாரியாயும் தனக்குப் பிறகு ஜெயினமதாசாரியராயும் நியமித்தார். மஹா வீரருடைய நிர்வாண ஸமயத்தில் அவர் ஏதோ காரியமாய் வேறோரிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தார். தன் குரு நிர்வாணத்தையடைந்த ஸமயத்திலேயே இவருக்கும் கேவல ஞானம் பிறந்தது. இவர் 92 வருஷங்கள் ஜீவித்திருந்தார். அதில் 50 வருஷங்கள் ஸங்யாஸியாயும் அதில் 12 வருஷங்கள் ஜெயினமதாசாரியராயுமிருந்தார்.

மஹா வீரருக்குப் பிற்காலத்திலிருந்த மற்றொரு சிஷ்யர் ஸுதர்மா வென்பவர் கொல்லகா வென்ற ஸ்தலத்திலுள்ள ஓர் பிராஹ்மணனென்று பட்டாவளிகளில் சொல்லப்படுகிறது.

இந்திரபூதிக்குப் பிறகு இவர் முக்ய கணதரரானார். மதப்ரஸங்கம் செய்வதில் விசேஷ திறமையுள்ளவர். இவருடைய சிஷ்யரான ஜம்பூ ஸ்வாமி இவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தார். கேவல ஞானிகளின் பரம்பரை அவருடன் ஒழிந்துவிட்டது. அவர் மதுரைக்கு ஸமீபத்தில் நிர்வாணத்தை யடைந்தார்.

ஆர்ஜிகர்களென்ற பெண் துறவிகள் அக்காலத்தில் 36,000. லௌகிக வியவஹாரங்களில் அவர்கள் பிரவேசிப்பதில்லை. முனிகளைப்போல் கடுமையான விரதங்களும் நியமங்களுமுள்ளவர்கள். சந்தனா என்றவள் அவர்களுக்குத் தலைவி. இவள் வைசாலி நகரத்தரசனான சேதகனுடைய பெண். மஹாவீரருக்கு ஸமீப பந்து. சிறு குழந்தையாயிருக்கும்பொழுது இவள் தோழிகளுடன் அரண்மனைத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். ஓர் வித்யாதரன் இவளுடைய அழ

கைக் கண்டு இவளைத் தூக்கிக் கொண்டு போனான். வழியில் தன் பார்யையின் ஞாபகம் வந்ததால் இவளைக் காட்டில் விட்டுப் போனான். அங்கே இவள் அழுது கொண்டு நிற்கையில் ஓர் வேடன் இவளைக் கண்டு கௌசாம்பி நகரத்திற்குக் கொண்டுபோய் விருஷபஸேனனென்ற ஓர் தனிகனிடத்தில் விற்றான். அங்கே வெகு காலம் வேலைக்காரியா யிருந்தாள். இவளுடைய அழகையும் புத்தி கூர்மையையும் கண்டு அந்தத் தனவானுடைய மனைவியான ஸுபத்ரை இவளைப் பலவிதமாய் ஹிம்ஸித்து அடித்து வேளா வேளையில் அன்ன ஆஹாரமின்றி உடுக்கக் கந்தையும் குடிக்க ஓடுமாய் வைத்தாள். இப்படியிருக்கையில் மஹா வீரர் அவ்விடத்திற்கு வந்து பிரஸங்கம் செய்யும்படி நேர்ந்தது. அதைக்கேட்டு அவள் லோகவாழ்க்கையில் வெறுப் புற்றுத் துறவியாய் ஜெயினமதத்தில் சேர்ந்து படிப்படியாய் ஆர்ஜிகர்களுக்குத் தலைவியானாள். இதே இரண்டாவது வகுப்பு.

முனிகளல்லாத லௌகிக சிஷ்யர்கள் 1,59,000 இவர்களே மூன்றாவது வகுப்பு. இவர்களுக்கு சாங்கசதகனென்றவர் தலைவர், இவர்கள் கிரு

ஹஸ்தர்கள். சிரர்வகர்களென்று சொல்லப்படு வார். முனிகளைப்போல் அவ்வளவு கடுமையான ஆசார நியமங்களுள்ளவர்களல்ல.

சிராவி கைகளென்ற ஸ்திரீ சிஷ்யர்கள் 300000. ஸுலஸை ரேவதி யென்றவர்கள் இவர்களுக்குத் தலைவிகள். இதே நான்காவது வகுப்பு. இந்தச் சிஷ்ய கணங்களா எல்லோருக்கும் மஹாவீரருக்குப் பிறகு கௌதம இந்திர பூதி 12 வருஷங்கள், பிறகு ஸுதர்மா 12 வருஷங்கள், ஜம்பூஸ்வாமி 24 வருஷங்கள் வரையிலும் தலைவர்களா யிருந்தார்கள். பிற் காலத்து குரு பரம்பரையைக் கல்ப ஸூத்ரங்களில் காண்க.

## மஹா வீரருடைய மேன்மை.

பல பராக்ரமத்திலும் புத்தியிலும் ஆசாரத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் மேலானவரே லோக குருவாயிருக்க தகுந்தவர். மஹாவீரர் தீர்த்தங்கர ரானதால் 46 உத்தம குணங்களால் அலங்கரிக்கப்பட்டவரென்று அறிகிறோம். அவருடைய தேஹம் 7 முழம் உயரமுள்ளது; உருக்கியோடவிட்ட தங்கத்தைப் போன்ற பளபளப்புள்ளது; ஸமமாயும் பொருத்தமாயும் அமைக்கப்

பட்ட அங்கங்களை யுடையது. ஸௌந்தர்யமான மணத்தை யுடையது; அதிமானுஷ்யமான பலத்தையுடையது. 32 உத்தம புருஷ லக்ஷணங்களால் அலங்கரிக்கப் பட்டது. லோக ரீதிப்படி இவர் வேத சாஸ்திரபுராணம் முதலியவைகளைக் குருவிடத்தில் அப்யாசம் செய்ததாய்க் காணப் படா விட்டாலும் பூர்வ ஜன்ம புண்யத்தாலும் யோகாப்யாஸத்தாலும் மதி, சுருதி, அவதி, மனப் பர்யாயம், கேவல மென்ற ஞானங்களை யடைந்தவர். முதல் மூன்றும் பிறக்கும் பொழுதே யிருந்தன. நான்காவது ஸந்யாசம்பெற்ற காலத்திலும் ஐந்தாவது 43வது வயஸிலும் அடையப் பட்டன. உபன்யாஸம் செய்வதிலும் வாதஞ் செய்வதிலும் இவருக்கு நிகரில்லை. இவருடைய ஆசாரத்தைப் பற்றி நாம் எவ்வளவு சொன்னாலும் போதாது. இவர் ஏற்படுத்தின நியமங்களையும் ஆசார விதிகளையும் நாம் கவனித்தால் இது நன்கு விளங்கும். மேலும் உபதேசத்தைக் காட்டிலும் அனுஷ்டானமே பெரிதென்று நன்குணர்ந்த மஹா வீரர் தான் ஏற்படுத்தின ஒவ்வொரு விதியையும் நடத்திக் காட்டி யிருக்கிறார். ஜைன மதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதில் வஜ்ர பூமி சுத்தபூமி முதலிய தேசங்களில் ஜனங்கள்

இவரை தூஷித்ததையும் ஹிம்சித்ததையும் மிகுந்த பொறுமையுடன் கோபமின்றிப் பொறுத்து அவர்களை ஸமாதானத்தாலும் தன் உபதேசத்தாலும் வசப்படுத்தினர். பெற்றோர்களிடத்தில் எல்லையற்ற பிரியமும் பக்தியும் வைத்தார். அவர்களுடைய வார்த்தைக் கிணங்கியே தான் அவதாரம் செய்த காரியத்தை வெகுகாலம்வரையில் நிறுத்தி வைத்தார். எவ்வித ஆபத்திலும் இடையூறுலும் ஹிம்ஸையாலும் பயத்தாலும் அபஜயத்தாலும் பரிஹாஸத்தாலும் நிலைகலங்காமல் லக்ஷ்யந் தவருமல் தன் உத்தேசத்தை நிறைவேற்றும் வரையில் தளராத விடாமுயற்சி யுடையவர். இவ்விதமான உத்தம குணங்கள் வாய்ந்திருந்த படியால் இவர் லோக குருவாய் விளங்கிப் பூர்வ மதங்களின் ஆபாஸங்களை எடுத்துக் காட்டி ஜெயின மதத்தை ஸ்தாபித்து, எண்ணிறந்த ஜனங்களை உத்தம கதியடையச் செய்தார்.

## ஜெயின மதக்ரந்தங்கள்.

மஹாவீரர் 30 வருஷங்கள் வரையில் மஹோபதேசஞ் செய்தார். ஆனால் அந்த உபதேசங்கள் நமக்கு எவ்வளவு வரையில் கிடைத்திருக்கின்றன வென்பதைப் பற்றித் தகுந்த பிரமாணம்

நமக்கு கிடைக்க வில்லை. பிற்காலத்திலுள்ள ஆசாரியர்கள் சொல்வதே நமக்குப் பிரமாணம். நாங்கள் சொல்வதெல்லாம் ஸர்வக்ஞரான மஹா வீரரால் உபதேசிக்கப்பட்டதேயென்று அவர்கள் சொன்னாலும் இதை எப்படி பிறர் நம்பும்படி ருஜூப்படுத்த முடியும். ஜெயின மதக் கிரந்தங் களின் சரித்திரத்தை அந்த ஆசாரியர்கள் சொல் லுகிற படியே ஒப்புக் கொண்டாலும் மஹா வீர ருடைய உபதேசங்களையே சொல்லிக் கொண்டு வருகிறார்களா வென்பது அவர்களாலும் ஒப்புக் கொள்ள முடியாது. ஸியாத்வாத ஆகமம் அல்லது ஜினவாணி யென்ற ஜெயின மதக்கிரந்தங்கள் 12 அங்கங்களாயும் 14 அங்கபாஹ்ய ஸூத்ரா ங்களாயும் பிரிக்கப்பட் டிருக்கின்றன. 12 வது அங்கத்தில் 5 பிரகரணங்களும் ஸூத்ரமும் பிரதமானு யோகமும் ஐந்து சூலிகைகளும் 14 பூர்வங்களும் அடங்கி யிருக்கின்றன. துவாத சாங்கமென்ற இந்த சாஸ்திரம் ஒரு பொழுதும் எழுதி வைக்கப் படாததால் ஒருவராலும் பார்க்க ப்பட்டதில்லை. தீர்த்தங்கரர்கள் அதை அந்தந்த காலத்தில ஜனங்களுக்கு உபதேசித்து வந்தார்கள். ஜனங்களும் அதை மனவில் வைத்துக் கொண்டி ருந்தார்கள். மஹா வீரரும் அப்படியே செய்

தார். அவருக்கு பிந்தின கண்ரர்களும் குருவின் உபதேசங்களைக் குறைவற மனஸால் தரித்து ஞாபகத்தில் வைத்து வாய் மொழியாய் சிஷ்யர் களுக்கும் மற்றவர்களுக்கும் உபதேசித்து வந்தார் கள். இப்படி 62 வருஷங்கள் ஆன பிறகு சுருத கேவலர்களென்று ஐந்து குருக்கள் 500 வருஷ ங்கள் வரையில் உபதேசஞ் செய்தார்கள். இவர் களுடைய ஞாபக சக்தி சற்றுக் குறைவானதால் 14 அங்கபாஹ்ய ஸூத்ரங்களை மறந்தார்கள். அவை மறைந்தன. அவர்களுக்குப் பிறகு தச பூர்விகளென்ற பதினொரு ஆசாரியர்கள் 181 வரு ஷங்கள் விளங்கினார்கள். அவர்களுடைய காலத் தில் 4 பூர்வங்கள் மறைந்தன. பிறகு பீடத்திற்கு வந்த ஏகாதசாங்கிகளென்ற ஐந்து குருக்கள் 123 வருஷங்கள் விளங்கினார்கள். அவர்களுடைய கால த்தில் 14 பூர்வங்களும் 12வது அங்கத்தின் மற்ற பாகங்களும் மறைந்தன. அதற்குப்பிறகு வந்த சதுரங்கிகளென்ற 4 பீடாதிபதிகள் 99 வருஷங் கள் உபதேசஞ் செய்து வந்தார்கள். அவர்களு டைய காலத்தில் நான்கு அங்கங்களே மிகுந்தன. அவர்களுக்குப் பிறகு 118 வருஷங்கள் பீடத்தி லிருந்த ஏகாங்கிகளான ஐந்து குருக்களின் காலத் தில் ஒரு அங்கம் மாத்திரம் மிகுந்தது. அவர்

களுக்குப்பிறகு அந்த ஒரு அங்கத்தையும் பூர்ணமாயறிந்தவர் களில்லை. இப்படித் தங்களுடைய ஞாபகசக்தி வரவரக் குறைவதைக் கண்டு ஆசாரியர்கள் கவலைகொண்டு தங்களுக்குத் தெரிந்ததை சுமார் A D 57 காலத்தில் எழுதிவைத்து நிலை நிறுத்தினார்கள். இப்படி திகம்பர சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. இதைப் படிப்பவர்களுக்கு எப்படி நம்பிக்கை யுண்டாகும், பிற்காலத்தில் ஜெயினாசாரியர்களால் எழுதப்பட்ட கிரந்தங்களுக்கு ஓர் மேன்மையும் மஹிமையும் ஏற்பட வேண்டுமென்றே இந்த ஓர் பரம்பரையை அவர்கள் கற்பித்திருக்கிறார்களென்றே சொல்வார்கள். ஆகையால் தகுந்த பிரமாணம் கிடைக்கும் வரையில் ஜெயினசாஸ்திரங்கள் மஹாவீரரால் உபதேசிக்கப்பட்டவையே யென்று நம்புவது கடினம். ஆசாரியர்களுடைய கிரந்தங்கள் ஏகாங்கிகளால் செய்யப்பட்ட உபதேசங்களை ஆதாரமாய்க் கொண்டவையாயிருந்தாலும் ஸமுத்ரம் போன்ற ஜெயினசாஸ்திரம் முழுதும் தற்காலத்தில் மறைந்ததென்றும் ஜெயினமத விரோதியான சங்கராசாரியரால் ஸமுத்ரத்தில் எறியப்பட்டதென்றும் நம்புவது ஸுலபமல்ல.

## ஜெயினமதக் குறிப்புகள்.

மஹாவீரருடைய சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் விஷயங்களாவன:—(1) நமது பூர்வஜன்மங்களில் செய்த கர்மங்களாலேயே நமக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் ஸ்திதியும் குணதோஷங்களும் வந்திருக்கின்றன. நாம் இப்பொழுது செய்யும் கர்மங்களுக்குத் தகுந்தபடியே இனி நமக்குக் கிடைக்கும் பதவியும் குணதோஷங்களும் ஏற்படும். ஆகையால் நாம் முன்னுக்கு வருவதும் கெடுவதும் நம்மாலேயே. வேறு மனுஷ்யர்களாலும் தேவதைகளாலும் த்ரிமூர்த்திகளாலும் நமக்கு லாபமுமில்லை நஷ்டமுமில்லை. நாம் செய்யும் கர்மங்களுக்கு நமக்குத் தகுந்த பலன்களைக் கொடுப்பதிலும் அருமையான நூல்களாலும் அனுஷ்டானத்தாலும் நமக்கு வழி காட்டி உதவி செய்கிறவர்களை யொழிய ஸகல பிரயத்தனங்களும் நம்மாலேயே செய்யப்பட வேண்டும். நமக்குப் பதிலாய் அவர்கள் செய்ய முடியாது. நாம் பிரயத்தனம் செய்யாமல் அவர்கள் பலத்தைக் கொடுக்கவும் முடியாது. செய்த பிரயத்னங்களின் பலத்தைப் போக்கவும் முடியாது.

(2) ஞானத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்று மஹா வீரருக் கிருந்த ஆசையும் விடாமுயற்சியும் எல்லையற்றவை. நூல்களைக் கற்பதாலும் லோகத்தை கவனிப்பதாலும் ஆழ்ந்து யோசிப்பதாலும் ஐம்புலன்களை யடக்கி ஸமாதி செய்வதாலும் பூர்ணமான ஞானத்தையும் நிர்வாண ஸுகத்தையும் அடைந்தார். இவ்விதமான அபாயங்களும் இடையூறுகளும் பயங்களும் ஸந்தேஹங்களும் அவரைத் தடுக்க வில்லை.

(3) மஹாவீரருடைய தாராளமான புத்தியும் உதாரமான ஸ்வபாவமும் ஸகல மதஸ்தர்களும் ஜாதியர்களும் நாகரீகமுள்ளவர்களும் தடையின்றி வந்து சேரும்படியான கொள்கையை ஏற்படுத்தினர். பிராஹ்மணர்களாலும் பிரபுக்களாலும் க்ரூரமாயும் அலக்ஷ்யமாயும் நடத்தப்பட்ட தாழ்ந்த ஜாதிகளையும் ஸ்திரீகளையும் முன்னுக்குக் கொண்டு வர வேண்டு மென்பதே அவருடைய கருத்து. மோக்ஷம் எல்லோருக்கும் பொது. எல்லோருக்கும் ஸ்வாதீனம். அவரவர்களுடைய பிரயத்னத்திற்குத் தகுந்தபடி மேலான பதவிகள் கிடைக்கும்.

(4) காலத்திற்கும் தேசத்திற்கும் மற்ற விஷயங்களுக்கும் தகுந்தபடி நடத்தையையும் கொள்

கையையும் மாற்றிக்கொண்டு பிறர்க்குபகாரஞ் செய்வதே நோக்கமாய் இருப்பது இது மஹா வீரருடைய சரித்திரத்திலும் அவருடைய மதத்திலும் தெளிவாய்க் காணப்படுகிறது.

(5) ஸ்திரீகளுக்கு விசேஷஸ்வதந்திரமும் ஆதரவும் அவரால் ஏற்படுத்தப்பட்டது. (தற்காலத்தில் திகம்பர ஜெயின மதத்தில் ஸ்திரீகளுக்கு நிர்வாணம் கிடைக்காதென்று சொல்லப்படுகிறது).

(6) நாம் ஜன்ம மெடுத்துச் செய்யவேண்டியதென்ன வென்றதைத் தீர விசாரித்து நிச்சயித்துக் கொண்டு அதை நிறைவேற்றும் விஷயத்திலேயே நமது காலத்தையும் புத்தியையும் சக்தியையும் உபயோகித்து இதர விஷயங்களை முற்றிலும் தள்ளவேண்டுமென்பதை மஹா வீரருடைய சரித்திரத்தில் காணலாம்.

ஜெயினர்களுக்குள் இரண்டு வகுப்புகள் ஏற்பட்டதற்குக் காரணம் பின்வருமாறு ஜெயின கிரந்தங்களில் சொல்லப்படுகிறது. மஹா வீரர் இறந்து 200 வருஷங்களுக்குப் பிறகு மகத ராஜ்யத்தில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. ஆகை-

யால் பரத்பாஹுவென்பவர் பல ஜெயினர்களுடன் கர்ணாடக தேசத்திற்குச் சென்றார். அக்காலத்தில் சந்திரகுப்த மௌரிய சக்ரவர்த்தி ஆண்டு கொண்டிருந்தார். பஞ்சந் தெளிந்து தேசமெங்கும் செழித்த பொழுது ஜெயினர்கள் ஹிந்து ஸ்தானத்திற்குத் திரும்பி வந்தார்கள். அதற்குள் அங்கிருந்த ஜெயினர்கள் தங்களுடைய மத கிரந்தங்களை ஒழுங்குபடுத்தி 12 அங்கங்களாய் வகுத்து, ஜெயின ஸந்யாஸிகள் நிர்வாணமாயிருக்கக் கூடாதென்றும் வெள்ளை உடை தரிக்க வேண்டுமென்றும் விதித்தார்கள். அன்று முதல் ஒரு வகுப்பினர் சுவேதாம் பரர்களென்றும (வெள்ளை உடை தரிப்பவர்கள்) மற்றொரு வகுப்பினர் திகம்பரர்கள் (உடையில்லாதவர்கள்) என்றும வழங்கலாயிற்று. 12 அங்கங்களடங்கிய மத கிரந்தங்களைத் திகம்பரர்கள் ஒப்புக கொள்வதில்லை. A. D. 82 ல் இந்தப் பிரிவு ஸ்திரமாயிற்று. காலக்ரமத்தில் சுவேதாம்பரர்களின் கிரந்தங்கள் மலினத்தை யடைந்து வர வர மறைவதைக் கண்டு A. D. 454ல் குஜராத் தேசத்தில் வல்லபியென்ற விடத்தில் ஓர் மஹா ஸபை கூடி ஜெயின கிரந்தங்களை எழுதி வைத்தார்கள்.

B. C. 7வது நூற்றுண்டில் விளங்கின நிர்கிரந்தர்களென்ற மதத்தாருடைய கொள்கைகளை தற்காலத்தில் காணப்படும் ஜெயின கிரந்தங்களில் அடங்கியிருக்கிற தென்று நம்புவது ஸாத்யமல்ல. சந்திரகுப்தனுடைய காலத்தில் ஜெயின கிரந்தங்கள் மகத தேசத்தில் ஒழுங்கு படுத்தப்பட்டு ஸ்திரமாய்ச் செய்யப்பட்டதென்று சொல்வது பொருந்தவில்லை. அப்படி யிருந்தாலும் B. C. 3வது நூற்றுண்டில் நிச்சயிக்கப் பட்ட மதக் கோட்பாடுகள் A. D. 5-வது நூற்றுண்டில் வலபீ ஸபையில் நிச்சயிக்கப்பட்ட கொள்கைகளுக்கு மாறுகவே யிருக்கும். நிர்கிரந்தங்களின் பூர்விக மதம் முற்றிலும் மாறி ஏறக் குறைய மறைந்தது. அக்காலத்தில் ஜெயினர்களுக்குள் கல்விமான்களும் நாகரீக முள்ளவர்களுமான சுவேதாம்பிரர்கள் B. C. 3வது நூற்றுண்டிற்குப் பிறகு இந்தியா முழுவதும் ஒரே மதமாய் விளங்கின. பௌத்த மதத்திலிருந்து நீதிகளையும் உபதேசங்களையும் விதிகளையும் ஆசாரங்களையும் பரம்பரா கதைகளையும் சரித்ரங்களையும் எடுத்து ஜெயின மதக் கொள்கைகளாய் வெளியிட்டார் களென்று பல பண்டிதர்களுடைய அபிப்பிராயம். இப்படி அநேக நூற்றுண்டுகள்

சென்று A. D. 5வது நூற்றாண்டில் ஜைன க்ரந்தங்கள் எழுதப்படும்பொழுது, 7நூற்றாண்டு களுக்கு முன் எழுதி வைக்கப்பட்ட பௌத்த மத க்ரந்தங்களைப் போலவே இருந்தனவென்பது ஆச்சர்யமல்ல. B. C. 7வது நூற்றாண்டில் நிர் க்ரந்தகளென்ற மதத்தினர் தனியே இருந்திருக்கலாம். ஆனால் A. D. 7வது நூற்றாண்டில் ஹியூன்தஸாங் என்ற சீனஸந்யாஸி இந்தியாவிற்கு வந்து பார்க்கும்பொழுது, ஜைன மதம் பௌத்த மதத்தின் ஓர் கிளையாகவே காணப்பட்டதென்பது உண்மையா யிருக்கலாம். தற்காலத்திலும் அப்படியே தோன்றுகிறதென்று நடு நிலைமை வாய்ந்த பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். ஏனெனில் (1) மஹா வீரரும் ஸித்தார்த்தரும் ஏறக்குறைய ஒரே காலத்திலிருந்தவர்கள். (2) இவரும் வட இந்தியாவிலுள்ள பல நாடுகளிலேயே தங்களுடைய மதங்களை பிரசாரம் செய்துகொண்டிருந்தார்கள். ராஜ கிருஹத்தில் அநேக சாதுர் மாஸங்களை மஹாவீரர் கழித்தாரென்று சொல்லப்படுகிறது. ததாகதரும் அவ்விடத்திலேயே பலசாதுர்மாஸ்ய காலங்களில் தங்கினாரென்று அறிகிறோம். மேலும் மஹாவீரருடைய சிஷ்யர்களுக்கும் ததாகதரு

க்ஷேம மத ஸம்பந்தமாய் வாதஞ்செய்து அவர்கள் கௌதமருடைய மதத்தில் சேர்ந்தாரென்று பௌத்த க்ரந்தங்களில் சொல்லியிருக்கின்றன. இப்படியே பௌத்தர்கள் மஹாவீரருடன் வாதஞ்செய்து தோற்று அவருடைய மதத்தில் பிரவேசித்ததாக வெருவாய் சொல்லப்படவில்லை.

இவ்விரு மதங்களும் வெகுகாலமாயுள்ளவையென்றும், 24 ஜைன தீர்த்தங்கரர்களைப் போல் 21 புத்தர்கள் அந்தந்தக் காலங்களில் மதப்ரசாரஞ் செய்தார்களென்றும், அவர்களில் முதலானவர் முறையே ஆதி ஜினரென்றும் ஆதிபுத்தரென்றும, மஹாவீரருக்கு முந்தினவர் பார்ச்சுவநாதரென்றும், அதைப்போல் கௌதம புத்தருக்கு முந்தினவர் காச்யப புத்தரென்றும் சொல்லப்படுகின்றன. மேலும், மஹாவிஷ்ணு அஸுரர்களை வஞ்சிக்க புத்தாவதார மெடுத்த பொழுது, அவர் உபதேசித்த கொள்கைகள் புராணங்களில் காணப்படுகிறபடி ஜைனமதமென்றும் பௌத்தமதமென்றும் பிரித்துச் சொல்வது ஸாத்யமல்ல. தமிழ் நூல்களில் ஜைன மதம் அருகமதமென்றும் ஜைன குருக்கள்

அருக அருக என்ற பக்த்ரக்ஷகனே ஜபித்து
மயில் தோகைகளை அடித்துக்கொண்டிருந்தார்
களென்றும் சொல்லப்படுகிறது. அர்ஹத் என்ற
வார்த்தை, பௌத்த ஞானிகளில் ஓர் வகுப்
பினரைக் குறிக்கும். சமணரும் சாக்யருமென்று
சைவ வைஷ்ணவ ஸமயாசாரியர்களால் குறிப்
பிடப்படுகிறவர்கள் ஜைனரும் பௌத்தருமென்
றால், சாக்யர்கள் புத்தருடைய சிஷ்யர்களென்
பது நகரிக்கறமில்லா விட்டாலும், ச்ரமணன்
என்ற வார்த்தை பௌத்த ஸந்யாஸியையும்
ஜைன ஸந்யாஸியையும் [illegible] குறிக்கிறது. மேலும்
ஜைனர்களை அப[illegible] சொல்லப்பட்ட
நிகண்டில் விஷ்ணுவிற்கும் அவருடைய அவதா
ரங்களுக்கும் பிரதிபதங்கள் சொல்லுமிடத்துக்
கௌதம புத்தருக்கு ஜினரென்ற பெயர் கொடுக்
கப்பட்டிருக்கிறது. இரண்டு ப்ரஸித்தி பெற்ற
மதஸ்தாபகர்கள் ஒரே காலத்தில் ஒரே தேசத்
தில் ஏறக்குறைய ஒரே விதமான கொள்கை
களை உபதேசித்துக்கொண்டிருப்பது ஸாத்ய
மல்ல அவசியமுமல்ல. ஜனங்களால் ஆதரிக்கப்
படவுமாட்டார்கள். தற்காலத்தில் நமக்குக்
கிடைத்திருக்கும் மஹாவீர சரித்ரமும் புத்த
சரித்ரமும் ஜைன பௌத்தமதக் கொள்கை

களும் பெரும்பாலும் ஒன்றைப் பார்த்து ஒன்று ஏற்பட்டதாகவே தோன்றுகின்றன. ஆனால் தற்காலத்தில பௌத்த மதம் இந்தியாவில் அழிந்து போயிற்று. ஜைனமதமோ, இந்தியாவின் வடக்கு பாகத்திலும் மேற்கு பாகத்திலும், தக்ஷிணத்தில் மைசூர் கடலூர் தஞ்சாவூர் முதலிய விடங்களிலும் பரவியிருக்கிறது. பௌத்த காலச் சில்பங்களும் கட்டடங்களும் அழிந்து போயின. பௌத்தமத ஸம்பந்தமான ஸ்தலங்களைக் கண்டுபிடிப்பது ஸுலபமல்ல. ஆனால் ஜைனமத சில்பங்களும் கட்டடங்களும், அபூ மலை, கிர்நார், மைசூர் முதலிய விடங்களில் அதிகமாய் விளங்குகின்றன. மேலும் ஜைனர்கள் ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் ப்ராகிருதத்திலும் விசேஷ பாண்டித்யத்தை யடைந்து, ப்ரஸித்தி பெற்ற பல காவியங்களையும் நிகண்டுகளையும் கணித நூல்களையும் வான சாஸ்த்ர க்ரந்தங்களையும் இயற்றி யிருக்கிறார்கள். ஜைன மதம் பௌத்த மதத்தின் ஓர் பிரிவேயல்லாது ஒருநாளும் தனிமதம் அல்லவென்று சிலர் சொல்வதும் பொருந்தாது. ஏனெனில் அதற்கு விரோதமான பௌத்த க்ரந்தங்களில் காணப்படும் வாக்யங்களால் புத்தருடைய காலத்தில் நிர்க்ரந்தங்க

ளென்ற ஓர் வகுப்பினரும் அவர்களுக்குத் தலைவராய் ஞாதிருபுத்ரனென்ற மஹாவீரரும் இருந்ததாயும், ஜைனமதத்தில் திருப்தியில்லாத பலர் புத்தருடன் வாதஞ்செய்து அவருடைய மதத்தில் சேர்ந்தார்களென்றும் ஸந்தேஹமின்றி விளங்குகிறது. மேலும், நிர்க்ரந்தர்களே நிர்வாணமாய் ஸஞ்சரித்துக்கொண்டிருந்த திகம்பர ஜைனர்களென்ற ஆதி வகுப்பினரென்பது, புத்தருடைய கண்டங்களாலும் அசோகனுடைய கல்வெட்டுகளாலும் தெரிகின்றது, ஆகையால் மஹாவீரர் கௌதமருடைய காலத்தில் நிர்கிரந்தர்களுக்குத் தலைவனாயிருந்தாரென்றும், அவர்களே ஜைனர்களென்றும், புத்தருடைய கொள்கைகளும் மஹாவீரருடைய கொள்கைகளும் ஒன்றிற்கொன்று விரோதமானவை யென்றும், இவ்விரு எதிரியான மதங்கள் அசோகனுடைய காலமான B. C. மூன்றாவது நூற்றாண்டு வரையில் தனித்தனியாய் வழங்கி வந்தனவென்பதும் எல்லோராலும் ஆக்ஷேபிக்க முடியாத விஷயங்கள். ஆனால் மஹாவீரருடைய நிஜமான சரித்ரமும் நிஜமான மதோபதேசங்களும் அதற்குப்பிறகு எக்காரணத்தாலோ மறைந்து போயின. பௌத்தமதம் தலையெடுத்துத் தேசமெங்கும் பரவ, ஜைன

மதம் இருந்தவிடந் தெரியாமல் ஒளிந்திருக்கலாம். கால கதியாலும் ஜனங்களின் சக்திக்குறைவாலும் எல்லா மதங்களுக்கும் [illegible] போல், பௌத்த மதமும் ஆபாஸம் நிறைந்து சீரழியும் காலத்தில், மஹம்மதியர்களுடைய உபத்ரவத்தால் இந்தியாவிலிருந்தே மறைந்த பொழுது, அது வரையில் அடங்கியிருந்த சில ஜைனர்களும் பௌத்தமதஸ்தர்களும், புத்த சரித்திரத்தையும் முக்யமான மதக்கொள்கைகளையும் அதிக மாறுதலின்றி கைக்கொண்டு, தற்காலத்தில் காணப்படும் ஜைன மதத்தையும் மதாசார்யரின் சரித்ரத்தையும் மதக்ரந்தங்களையும் ஏற்படுத்தி யிருக்கலாம். ஆனால் பல நூற்றாண்டுகளாய் கர்ண பரம்பரையாய் வழங்கி வந்த ஆதி ஜைனமத ஸம்பந்தமான விஷயங்கள் மா[illegible]றையவில்லை. எப்படி யென்றால் கௌதம புத்தர் பல, வருஷங்கள் வரையில் யோகமார்க்கங்களை அனுஷ்டித்து, வெகு கடினமயான விரதங்களையும் நியமங்களையும் தபஸையும் செய்து வந்து அவைகளால் யாதொரு பிரயோஜனமுமில்லை யென்று கண்டு, அவைகளை விட்டு, கேவலம் தியானத்தாலும் விவேகத்தாலும் ஸம்பூர்ண ஞானமடைந்து, ஸந்தேஹ மற்று விளங்கினர். மஹாவீரரோ 12

வர்ஷங்கள் வரையில் காயக்லேசம், வ்ரதம், உபவாஸம், நியமம், யோகம் முதலிய தபஸையே செய்து வந்து, அதினால் கேவல ஞானத்தை யடைந்து, அதையே பிறர்க்கு உபதேசித்தார் கேவலம் தேஹத்தை வாட்டி இந்த்ரியங்களை யடக்கும் முறைகளாலும் ஜடை வளர்ப்பதாலும் மொட்டை யடிப்பதாலும் நிர்வாணமாய் ஸஞ்சரிப்பதாலும் மனத்தூய்மையும் சாந்தியும் ஞானமும் கிடைக்காதென்று புத்தர் பல விடங்களில் கண்டித்திருக்கிறார். தற்காலத்தில் ஜைனர்கள் ஆசாரம், ஒழுக்கம், தன்னடக்கம், பரோபகாரம் முதலிய குணங்களை ஸம்பாதிப்பதைக் காட்டிலும் கோடிக் கணக்காய்த் திரவ்யத்தை ஸம்பாதிப்பதும், ஜீவஹிம்ஸையை விலக்கவேண்டுமென்ற கொள்கையை அளவிற்கு மிஞ்சிப் பரிஹாஸத்திற்கிடமாகும்படி அநுஷ்டித்து ப்ராணி ஹிம்ஸையை விலக்க விரும்பிப் பல் தேய்க்காமலும் ஸ்நாநம் செய்யாமலும் உடை தரிக்காமலும் நடக்குமிடங்களெல்லாம் மயிற் றோகையால் துலக்கிக்கொண்டிருப்பதும், வஸ்த்ரத்தால் முகத்தை மூடிக் கொண்டு மூச்சு விடுவது, இன்னும் இதைப் போன்ற அல்ப விஷயங்களில் காலத்தைச் செலுத்தி வீண்வாதம் செய்து

ஜைனர்களுக்குள் கணக்கில்லாத உட்பிரிவுகளை ஏற்படுத்துவதும், மேற்சொன்ன விஷயத்தை விளக்குகின்றன. ஆகையால் புத்தர் கேவல கர்ம மார்கத்தையும், யக்ஞம் யாகம் தபஸ் விரத நியமங்கள் முதலியவைகளைக் கண்டித்து, ஆர்ய அஷ்டாங்க மார்க்கமென்ற நடு நிலையான ஆசாரத்தையே மேலாய் உபதேசித்தாரென்றும், மஹாவீரர் கேவலம் கர்ம மார்கத்தையும் அதைச் சார்ந்த தபஸையும் மோக்ஷ ஸாதனமென்று உபதேசித்தாரென்றும், ஆகையால் ஜைன மதம் கேவல கர்மமார்க்கமே, ஆனால் அதற்கு முந்தியிருந்த ஹிந்து மதத்திலுள்ள கர்ம காண்டத்தில் முக்யமாய் விளங்கின யாக யக்ஞம் முதலிய ப்ராணி ஹிம்ஸையை விளைவிக்கும் கர்மங்களை மாத்திரம் விலக்கி, மற்ற ஜீவ ஹிம்ஸையில்லாத யோக முறைகளையும் நியமங்களையும் மாத்ரம் கைக்கொண்டு, ஹிந்து மதத்தைச் சீர்திருத்தும் ஓர் தனிமதமாய் விளங்கிற்றென்றும், சில மேற்றிசை வித்வான்களும் பண்டிதர்களும் எண்ணுவதை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது.

ப்ராணி ஹிம்ஸை முற்றிலும் கூடாது. ஜீவ காருண்யமே பரம தர்மமென்பதும், ப்ராஹ்மணர்

களுடைய வேதங்களைப் பிரமாணமாய்க் கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லையென்பதும், பிறப்பும் செல்வமும் படிப்புமே மேன்மைக்குக் காரண மாகாது. ஜாதி வர்ணாச்ரமங்களும் ஏற்றத் தாழ்வுகளும் நடத்தையையும் பரோபகாரத்தை யும் பொறுத்திருக்கின்றன வென்பதும், நிர்வாண த்தை யடைவதற்கும் அந்த மார்க்கத்தை அனு ஷ்டிப்பதற்கும் எல்லோர்க்கும் யாதொரு பேத மின்றி அதிகாரமுண்டென்ற விசாலமான கொள் கையும், ஸகல தர்மங்களையும் தாமே அனுஷ் டிக்க வேண்டும், மனுஷ்யனாலும் தேவனா லும் கடவுளானாலும் நம்மை ரக்ஷிக்கவாவது கெடுக்கவாவது முடியாதென்றும், அவர்களைப் பூஜிப்பதால் யாதொரு பயனுமில்லை யென்பதும், இன்னும் இத்தகைய பல கொள்கைகளும் இவ் விரு மதத்திற்கும் பொதுவாயிருக்கின்றன. இரு வரும் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள். இரு வரும் கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து ஸந்யாஸங் கொண்டவர்கள். புண்ய விருக்ஷத்தின் கீழ் தபஸ் செய்து கொண்டிருக்கையில் அகண்டமான ஞானத்தைப் பெற்றார்கள். அரசர்களாலும் ப்ராஹ்மணர்களாலும் மர்யாதையும் பூஜையும் நன்மதிப்பும் பெற்றார்கள். இன்னும் இதைப்

போன்ற பல பொதுவான விஷயங்கள் காணப் படுகின்றன. ஆயினும் அசோகனால் இந்தியா முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டு ஐரோப்பா ஆசியா ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களில் பரவச் செய்யப்பட்ட பௌத்தமதம் ஜனனபூமியான இந்தியாவில் வேரற்று அழிந்தது. ஆனால் அதே காலத்திலுண்டாய் அதைப்போல் இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் பரவியிருந்த ஜைனமதம் அழியாமல் தற்காலத்திலும் பலகோடி ஜனங்களால் அனுஷ்டிக்கப்படுகிறது இதற்குக் காரணம் தெரியவில்லை. பௌத்தமதத்தைக் காட்டிலும் ஜைனமதத்தின் கொள்கைகள் மேலானவென்றாவது குறைகள் அற்றதென்றாவது நடுநிலைமையுள்ள இதர மதஸ்தர்களால் வெகுமதிக்கப்பட்ட தென்றாவது சொல்ல விடமில்லை. ஜைன மதம் இந்தியாவைத்தவிர வேறிடங்களில் ப்ரசுரம் செய்யப்பட்டதாயாவது பரவினதாகவாவது தெரியவில்லை. மேலும், சங்கராச்சாரியரால் பௌத்தமதமும் ஜைனமதமும் இந்தியாவில் அழிக்கப்பட்டன வென்று வழங்கும் கொள்கைக்கும் யாதொரு ஆதாரமுமில்லை. ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தில் காணப்படும் பௌத்தமத கண்டனமும் ஜைனமத கண்டன

மும் B. C. 500 லிருந்த ஆதிசங்கரரால் செய்யப்பட்ட தென்று எண்ண ந்யாயமில்லை. ஒருவேளை அவருடைய காலத்திற்கு முன்பிருந்த ஜைன பௌத்தமதாசார்யர்களின் கொள்கைகளைக் கண்டித்திருக்கலாம், அல்லது சங்கராசார்யரென்று பெயர் வைத்துக்கொண்டிருந்த அந்த பீடாதிபதிகளாய் பிற்காலத்தில் வந்த யாராலாவது எழுதப்பட்டிருக்கலாம். இதற்கு ஒரு காரணம். புத்தரால் சொல்லப்பட்ட உபதேசங்களடங்கிய க்ரந்தங்களில் இன்ன பாகத்தில் இன்ன வாக்யங்களைக் கண்டிக்கிறேனென்று ஸூத்ரபாஷ்யத்தில் ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. ஜைன க்ரந்தங்களில் ஆசாராங்க ஸூத்ரம் கல்பஸூத்ரமென்ற பிற்காலத்திய க்ரந்தங்களிலுள்ள சில கொள்கைகளையெடுத்துரைத்துக் கண்டித்திருக்கின்றன. இவை கி. பி. 5வது நூற்றாண்டில் நிச்சயித்து எழுதிவைக்கப்பட்டனவென்று தோன்றுகிறது. மஹாவீரருடைய உபதேசங்கள் இன்னதென்று ஜைனர்களுக்கும் தெரியவில்லை. ப்ரம்ஹ ஸூத்ர பாஷ்யம் எழுதினவர்க்கும் தெரியவில்லையென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. அப்படிச் சமணர் சாக்யரென்று சைவ வைஷ்ணவ மதாசார்யர்களால் தூஷிக்கப்படும்

இவ்விரு மதத்தினர் அவர்களால் அழிக்கப் பட்டாலும் ஜைனமதம் மாத்திரம் மிகுந் திருக்கக்காரணமென்ன ? இந்தியாவில் படை யெடுத்து வந்த மஹம்மதியர்களால் பௌத்த மதம் ஏ. டி. 10வது நூற்றுண்டில் அழிக்கப்பட்ட தென்று சொன்னல் அதே கதி ஜைன மதத் திற்கும் ஏன் வரவில்லை? மேலும் இஸ்லாமியரின் படையெடுப்பும் ஆளுகையும் தக்ஷிணத்தில் பர வினதாய்ச் சொல்லப் படவில்லை. ஜைன மத க்ரந்தங்களின் பரிசிலனையில் தன் ஆயுள் முழுவதையும் கழித்து ஜைன பண்டிதர் களால் கொண்டாடப் பட்ட ஜாகோபி யென்ற மேற்றிசை வித்துவான் ஜைன பௌத்த மதங் களின் தாரதம்யத்தைப் பற்றிப் பின் வருமாறு எழுதுகிறார். "இந்தியாவில் பல மதங்களை ஸ்தா பித்துப் பரவச் செய்தவர்களுக்குள் மஹாவீரர் ஸாமான்யரென்று காணப்படுகிறது. மத விஷய ங்களைப் பரிசீலிப்பதிலும் ஒழுங்கு படுத்து வதிலும் ஓர் வித திறமையுள்ளவரென்று ஒப்புக் கொள்ளலாம். ஆனல் புத்தரிடத்தில் ஸந்தே ஹமின்றி விளங்கின அபாரமான புத்தியும் சக்தி யும் மஹாவீரருக்கில்லை. சில முக்யமான தத்வ ங்களை ஆதாரமாய் வைத்துப் புத்தர் எல்லோரும்

வியக்கத்தக்க ஓர் லோகமகத்தை ஏற்படுத்தினார் மஹாவீரர் ஏற்படுத்தின மதம் அப்படிப் பட்டதல்ல. பல விஷயங்களைப் பற்றின அபிப்ராயங்களின் தொகுதி யென்றே சொல்லத் தகும். மானஸ தத்வ சாஸ்த்ரத்தை ஏராளமாய் வளர்த்து வெகுவாய் விஸ்தரித்து அதையே ஓர் மதமாய் உபதேசித்ததற்கு ஆதாரமான தத்வங்களைக் காணமுடியாது. நாம் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எந்த நிலைமையிலும் அனுஷ்டிக்க வேண்டிய ஆசாரத்தைத் தெளிவாயும் பூர்ணமாயும் நுட்பமாயும் வகுத்துரைப்பதில் கௌதம புத்தருக்கு மற்ற எந்த மதஸ்தாபகரும் ஈடல்ல. ஜைன மதத்தில் ஆசாரமும் அனுஷ்டானமும் தத்வ சாஸ்த்ரத்திற்கு அங்கமாய் விளங்குகிறதே யொழிய முக்யமானதல்ல.''

மஹாவீரருடன் பல வர்ஷங்கள் வரையில் சேர்ந்திருந்து அவருக்கு முன் கேவல ஞானத்தை யடைந்த கோஸாலரென்பவர் ஆஜீவிகர்களென்ற மதத்தை ஏற்படுத்தினரென்று பௌத்த க்ரந்தங்களிலும் அசோகனுடைய கல் வெட்டுகளிலும் சொல்லப் படுகிறது. அவர்கள்

மிகவும் கடினமான நியமங்களையும் தபஸையு முடையவர்கள்.

## ஜைன கிரந்தங்கள்.

கல்பஸூத்ர மென்பது ப்ராகிருத பாஷையில் ஸ்ரீ பத்ர பாஹுஸ்வாமியால் எழுதப்பட்ட சுவேதாம்பர மதக்ரந்தம். இவருடைய காலம் B. C. 433 to 357 என்று சொல்லப்படுகிறது. திகம்பரஸூத்ரங்களில் சொல்லப்படும் முதலாவது பத்ரபாஹு வென்றும், மஹாவீரருக்கு 162 வர்ஷங்களுக்குப் பிறகு [illegible] B. C. 365ல் நிர்வாணத்தை யடைந்தா ரென்றும் சொல்லப் படுகிறவர் இவரா வென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆகையால் இந்த மஹாவீர சரித்ரம் வெகு புராதனமானது. பத்ரபாஹுவின் காலத்திலேயே பூர்வங்களென்ற ஜைன கிரந்தங்கள் எழுதப்பட்டன வென்று சுவேதாம்பரர்கள் சொல்லுகிறார்கள். திகம்பரர்களுக்குள் மஹா வீர புராணமே ப்ரமாணமாய்க் கொண்டாடப் படுகிறது. கௌதம இந்த்ர பூதியென்ற ப்ரதம சிஷ்யரால் மஹா வீரருடைய சரித்ரம் ச்ரேணிகனென்ற அரசனுக்குச் சொல்லப் பட்டதென்றும், அதை ஸ்ரீ ஸகல கீர்த்தி முனிராஜர்

MAHAMAHOPADHYAYA

மஹாவீரர்

ஸம்ஸ்கிருதத்தில் எழுதினாரென்றும், அதையே நவலஸாஹஸ்ரா வென்று, சந்த்ரசால அரசனுடைய காலத்தில் (ஸம்வத் 1825) ஆண்டில் கண்டு தேசத்தில் கடோல புரத்தில் விளங்கின ஓர் கவியால் ஹிந்தி பாஷையில் மொழி பெயர்க்கப் பட்டதென்றும் பரம்பரா கதை.

MAHAMAHOPADHYAYA DR U.V. SWAMINATHA IYER LIBRARY MADRAS ADYAR TIRUVANMIYUR

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், சென்னை.

# அணிந்துரை

"உலகத்து ஒருவனாய் நின்றாய் நீயே"—அப்பர்.

உலகம் பலவிதம் என்பது பழமொழி. இப்பொது மொழி அவரவர் உலகுக்கேற்ற பொருள் விளக்குவது. ஒவ்வொருவர்க்கு ஒவ்வோருலகுண்டு. எனக்கும் ஒருலகுண்டு. அவ்வுலகில் நின்று பலவிதத்தை இருவிதத்தில் அடக்க எண்ணுகிறேன். ஒரு விதம் "வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின், விளங்குபரம் பொருளே நின் விளையாட்டல்லால்—மாறுபடுங் கருத்தில்லை முடிவில்மோன, வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா" எனவரூஉந் தாயுமானர் திருவாக்கின்படி சமரச உணர்வு பெற்று வாழ்வது. மற்றொரு விதம் சமரசத்துக்கு மாறுபட்டு வாழ்வது. இவ்விரண்டையும் உலகில் காண்கிறோம். பின்னையதன் வளர்ச்சியே முன்னையதன் முடிவு என்பது எனது கொள்கை. கேணி, குளம், ஏரி, ஆறு, கடல் என்பன பெயரளவில் வேறுபட்டு நிற்பினும், அவைகளின் பொருளடக்கம் புனல் என்பதொன்றே யன்றோ?

சைவம் பல சமயங்களாகவும் முடிவில் தனித்த ஒரு பெருஞ் சமய மாகவும் நிற்றலால், அதன்கண் சமரச முடைமை அறிஞர்க்குப் புலனாகாமற்போகாது. சமரச

ஞானியாகிய தாயுமான சுவாமிகள், ஆகாரபுவனத்தில், பல சமயங்களைக் குறிப்பிட்டு "இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி" என்று வைதிக சைவத்தைப் போற்றி யிருத்தல் காண்க. இச்சமரச உண்மை தெரிப்பது இந் நூல்.

இச்சிறு நூல் வெளிவருதற்குக் காரணராயிருந்தவர் தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையாராவர். இச்சபையார் தஞ்சபையின் நாற்பத்தோராம் ஆண்டு நிறைவிழாவிற்குத் தலைமை வகிக்குமாறு சிறியேனைக்கேட்டனர்; கேட்ட போது எனது முன்னுரையை எழுதிக்கொணருமாறும் விரும்பினர். அவர் விருப்பத்துக்கிணங்கி இந்நூலுள் ளுறையாம் இக்கட்டுரையை எழுதிச்சென்றேன். இரத் தாட்சி ஆண்டு மார்கழித்திங்கள் கஉ, கஈ-ம் நாட்களில் (1924-ம்ஆ டிசம்பர்மீ 27, 28உகளில்) நடைபெற்ற ஆண்டுவிழாப பேரவையில், முதல் நாள் தொடக்கத்தில், முன்னுரையாக இக்கட்டுரையையொட்டிச் சுமார் இரண்டு மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினேன். அச் சொற்பொழிவைச் செவிமடுத்த சபையினரும், வேறு சில அன்பரும் அது நூல் வடிவாக வெளிவரல்வேண்டு மெனும் விருப்பத்தை அடியேற்குத் தெரிவித்தனர்.சைவ உலகிற்குப்பயன்படுமாறு இக்கட்டுரைக்குச் "சைவத்தின் சமரசம்" என்னும் பெயர் நல்கி,இந்நூல் வடிவாக இதை அச்சிடலானேன். இதற்குக் காரணராக உள்ள தூத்துக் குடிச் சைவசித்தாந்த சபையினர்க்கு எனது நன்றியறித லான வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இந்நூலின் உள்ளுறை ஒரு சபையின் ஆண்டுவிழாக் கூட்டத்தில் பேசிய முன்னுரையாகலான், பெரிதும் பேசுமுறைபற்றி, இயன்றவரை குறியீடுகளை நீக்கி, எளிய நடையில் இதை எழுதியிருக்கிறேன். கல்வி, அறிவு ஆராய்ச்சியில் குறைபாடுடைய எளியேன் எழுத்தில் கருத்தில் பிறவற்றில் பிழைகள் நிகழ்ந்திருக்கலாம். அப்பிழைகளைப் பொறுத்தருளுமாறு அன்பர்களை வேண்டுகிறேன். சைவ உலகம் இச்சிறு நூலை ஆதரிப்பதாக.

" குற்றநீ குணங்கள்நீ கோதில் ஆலவாயிலாய் "

—ஞானசம்பந்தர்.

சென்னை
இராயப்பேட்டை
14—1—25

திரு. வி. கலியாணசுந்தரன்.

திருச்சிற்றம்பலம்.

## தேவாரம்

நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பத் திருக்கரக் கோயிலான்
தன்கடனடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

## திருவாசகம்

அன்றேயென்றன் ஆவியும் உடலும்
உடைமை யெல்லாமுங்
குன்றேயனையாய் ! என்னையாட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோரிடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே !
நன்றேசெய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## பெரிய புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

திருவருட்டுணை

# சைவத்தின் சமரசம்

## எழுவாய்

சகோதரிகளே ! சகோதரர்களே !

சிவமணமுந் தமிழ்மணமுங் கமழுந் திருமந்திர நகரமென்னும் இத்தூத்துக்குடிக்கண், ஆண்டவன் அருணெறி வளர்த்துவரூஉஞ் சைவ சித்தாந்த சபையின் நாற்பத்தொன்றாம் ஆண்டு விழாவை இனிது கொண்டாடும் பொருட்டுக் குழுமியுள்ள இப்பெருங் கழகத்திடை நின்று, நீங்கள் பணித்த தொண்டாற்றச் சிறியேன் ஈண்டுப் போந்துளேன். அத்தொண்டாற்றும் பேற்றை வழங்கிய உங்களுக்கு எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன். அடியேன் ஆற்றப்புகுந் தொண்டில் குற்றங்குறைகள் நிகழுமேல் அவைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

## சமயம்

உலகில் வாழும் உயிர்கள் யாவும் இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் இயல்பாகக்

சொல்வதைக் காண்கிறோம்; இன்பம் பெற வேண்டி உயிர்கள் முயன்று பல துறைகளிலிறங்கி யுழைப்பதையுங் காண்கிறோம். இக்காட்சிகளான் நாம் பெறுவதென்னை? படைப்பு நோக்கம் இன்பப்பேற்றைக் குறிக்கொண்டு நிற்பதென்னும் உண்மை பெறுகிறோம். உயிர்கள் துன்பக்கடல் கடந்து இன்பக்கரை ஏறுவதெப்படி? அதற்கொரு நாவாய் வேண்டுமன்றோ? அதுவே சமய மென்னுஞ் செவ்விய நாவாய்.

சமய மென்னுஞ் சொற்குப் பலர் பலவாறு பொருள் கூறுப. அச்சொற்பொருள் குறித்து ஈண்டு ஆராய்வதில் நமது அரும் பொழுதைப் போக்க வேண்டுவதில்லை. உலக வழக்கையொட்டிச் சுருங்கக் கூறின், இன்பப் பொருளாம் இறைவனை யடைதற்கு உயிர்கள் கடைப்பிடித்தொழுகும் ஓர் அற வழியே சமயம் என்று கூறலாம். சமயமென்ப தொன்றில்லையேல் உலகில் அறமேது? அன்பேது? ஆன்ம உணர்வேது? மக்களை விலங்கினின்றும் பிரித்து, அவர்களைச் செந்நெறியில் நிறுத்தி ஆண்டு வருவது சமயமெனில், அதன் பெற்றியை யென்னென்று கூறுவது?

சமய மென்பது, நாட்டினும் மொழியினும் வகுப்பினும் வழக்க ஒழுக்கங்களினும் இன்னோரன்ன பிறவற்றினும் மக்கட்கு விழுப்பந் தருவது.

நாடும் மொழியும் பிறவும் மக்களைப் பிரிக்குந் தகையன. சமயமோ அப்பிரிவைப் போக்குந் தகையது. நாட்டுப் பற்றும் பிறபற்றுக்களும் அன்பைத் தம்மளவில் கட்டிப் பிணிப்பன. சமயப் பற்றோ அன்பைக் கட்டிப் பிணியாது பெருக்கு வது. நாடு முதலியன சில வேளைகளில்—பெரிதும் தம் வளம் அருகும் வேளையில் அல்லது பிற நாட்டு வளம் பெருகும் வேளையில்—அழுக்காறு அவா வெகுளி இத் தொடக்கத்துத் தீக்குணங்களாம் வெம்மையுமிழும் ஊற்றுக் கண்களாகும். சமயமோ எவ்வேளையிலும் அடக்கம் பொறை அருள் ஈகை ஒப்புரவு இத்தொடக்கத்து நறுங்குணங்களாந் தண்மை சொரியும் ஊற்றுக் களனாயிலங்கும். சமய ஞானமில்லாத நாட்டார் தந்நாட்டையே (Nation) கடவுளெனக் கொண்டு, அதன் வழி பாட்டுக்கெனப் பிறநாடுகளைப் பலியிடுவர். சமய ஞான நாட்டமுடையோர் அம்மறவினை யாற்ற ஒருப்படார். அவர் " நந்நாட்டுக்கும் பிறநாடுக ளுக்குமுள்ள வேற்றுமை என்னை? நந்நாட்டை யும் பிறநாடுகளையும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் கடல்களும் பிரித்திருக்கின்றன. நாட் டுக்கேற்பத் தட்ப வெப்பம் மக்கட்குப் பலதிற நிறம் மொழி வழக்க வொழுக்கங்களை வழங்கி யிருக்கின்றன. இவ்வேற்றுமை ஒரு நாட்டு மக்க ளுக்கும் மற்ற நாட்டு மக்களுக்குமுள்ள ஆன்ம

யே ஒருமைப்பாட்டை எங்ஙனங் கலலும்? எல்லாருள்ளத்தும் வீற்றிருப்பவர் ஒரு கடவுளே. எந்நாட்டினரும் எம்மொழியினரும் எவரும் எல்லாருஞ் சகோதரரே" என்று எவர்க்குந் தீங்கிழையாது சமயம் சேர்ந்தழி ஒல்லும்வகை நலமே புரிய முயல்வர். வேற்றுமை நாட்டமுடைய நாட்டார் வகுப்பார் முதலிய யாவரையும் ஒற்றுமைப்படுத்த வல்லது சமயமொன்றே. அத்தகைச் சமயம் மக்கட்கு இன்றியமையாதது என்று சொல்லவும் வேண்டுமோ?

உலகில் சில விடங்களில் சில வேளைகளில் போருக்கும் கொலைக்கும் பிற கொடுமைகட்கும் சமயமுங் காரணமாக நிற்றலான், அதுவும் வேண்டுவதில்லை என்று கூறுவோருமுளர். சமயப்பெயரால் போரிடுவோர் சமய ஞானிகளல்லர். அவர் சமய உண்மை கைவரப் பெறாத பித்தர்; உன்மத்தர். அவருள்ளத்தில் உண்மை ஞானம் விளங்கினால் அவர் பித்த மயக்கந் தீரப் பெற்றுத் தமது அறியாமையுணர்வர். சமயப்பெயரால் நிகழுங் கொடுமைகளைக் களையவுஞ் சமயஞானம் வேண்டற்பாலது. அன்புநெறி யோம்பவந்த எச்சமய குரவராதல் தங்கொள்கை தழுவ ஒருப்படாத பிறரை வருத்துமாறு அறைந்துள்ளாரா? அவ்வாறறையும் ஒருவர் சமயகுரவராவரோ? சமயஞானமின்றிச் சமயப்பெயரால் பித்துக்கொண்டு களிகளும் மடி

களும் நிகழ்த்தும் கொடுவினைப்பழிகளைச் சமயத்தின்மீது சுமத்துவது அறிவுடைமையாகாது. சமயஞானம் வேண்டாமென்று சாற்றுஞ் சகோதரர்கள், அன்னசாலை வைத்தியசாலை பாடசாலை முதலிய அறச்சாலைகள் அமைக்குமாறும், கூவல்குளந் தொட்டு வளம் பெருக்குமாறுந் தூண்டுவது எது என்று சிறிதுநேரஞ் சிந்திப்பார்களாக. தன்னலத்தை யறுத்துத் தனக்கும் பிறர்க்கும் வேற்றுமை யில்லையென்னும் ஆன்மஞானத்தை அறிவுறுத்துஞ் சமயமா வேண்டாம்? இந்நாளில் உலகில் சமயஞானம் அருகி வருதலாலன்றோ (ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டார் வருத்தியடக்கித் தாமின்ப நுகர) நாடுகளில் ஆலகாலமனைய நச்சுக் காற்றும், காலனும் அஞ்சத்தக்க கொலைக் கருவிகளும் இன்னோரன்ன பிறவும் காணப்படுகின்றன? மக்களிடை யரும்பியுள்ள இத்தீய விலங்குணர்வைச் செகுக்கச் சமயம் வேண்டுமா வேண்டாமா? உலகில் ஆன்ம நேயத்தையும் சகோதர உரிமையையும் அமைதியையும் நிலைபெறுத்தவல்லது சமயம் சமயமே.

## எச்சமயம்?

சமயம் இன்றியமையாததெனில் எச்சமயத்தைக்கொள்வது என்னும் வினா எழாமற்போகாது. உலகிலோ பல சமயங்களிருக்கின்றன. எச்சமயத்

தைக் கொள்வது? எச்சமயத்தைத தளவது? உலகிலுள்ள சமயங்களை எண்ணால் கணக்கிட்டு விடலாம். ஆனால் மக்கள் மனதிடையூருஞ் சமயங்களின் தொகையை எவ்வாறு கணக்கிடுவது? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயமுண்டு என்று கூறுவது மிகையாகாது. சமய உண்மை என்பது அவரவர் அறிவாற்றலுக்கும் அநுபவத்துக்கும் ஏற்றவாறு விளங்கித் தோன்றுவது. ஞாயிற்றைப் படம்பிடிக்க ஒருவன் புறப்பட்டதாக வைத்துக் கொள்வோம். அவன் ஞாயிறுபால் அணுகி அதன் உண்மை வடிவைக் கண்டுபிடித்தற்கு முன்னர், அவன் தங்குமிடந்தோறும் ஒவ்வொரு படிவமாக ஞாயிறு திகழ்வது நோக்கி, அவ்வப்போது புலப்படும் வடிவை அவன் பிடித்துவருவானாயின், ஒரு ஞாயிறே பல வடிவங்களாகத் தோன்றுவதுகண்டு அவன் வியப்புறுவன். கடவுள் நிலையும் இத்தன்மைத்தே. தெய்வமொன்றே பலவாக அவரவர் அறிவு ஆராய்ச்சி அன்பு நிலைக்கேற்றவாறு புலப்படுகிறது. இவ்வுண்மை யுணர்ந்த பெரியோருங் கடவுள் நிலையை மக்கள் அறிவு நிலைக்கேற்றவண்ணம் அறிவுறுத்தியுள்ளார். கிறிஸ்து ஒருவரே கடவுளை ஓரிடத்தில்,

"பரலோகத்துள்ள எங்கள் பிதாவே"

என்றும்,

மற்றோரிடத்தில்,

"பிதாவும் நானும் ஒன்றாயிருக்கிறோம்"

என்றும்,

இன்னோரிடத்தில்,

"பரலோக ராஜ்யம் உங்களுள்ளிருக்கிறது"

என்றும்,

உலகுய்ய ஓதியிருக்கிறார். நமது பெரியோரும்,

"அப்பன்நீ அம்மைநீ ஐயனுநீ
அன்புடைய மாமனும் மாமியுநீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளுநீ * * *"

என்றும்,

"வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்***"

என்றும்,

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்று மாகி * * *"

என்றும்,

"சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய்"

என்றும்,

"நின்னுவார் பிறரன்றி நீயேயானாய்"

என்றும்,

" இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணுதே"

என்றும்,

ஆண்டவன் நிலையைப் பலபட உலகோர்க்கு உணர்த்தி யிருத்தல் காண்க. எல்லாமா யல்லவு மாயிலங்கும் கடவுளை அன்பால் எப்படி யேத்தினு லென்ன?

" தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணுர் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னுன்
உருவுகண் டாரை யொத்தார்"

என வரூஉங் கம்பன் கருத்தும் ஈண்டுக் கவனிக் கற்பாற்று.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயரால் பல வடிவங்களாகப் போற்றிப் புகழ்கின்றன. இவ்வுணர்வோடு எச் சமயத்தை ஆய்ந்தாலும் அச்சமயத்தில் சமரச மணங் கமழ்வது காணலாம். அம்மணங் கமழப் பெருத சமய மொன்றிருப்பதாகத் தெரியவில்லை. இருக்குமேல் அது கடவுள் நெறிகாட்டுஞ் சமய

மாகாது. எச்சமயம் எல்லாச் சமயங்களையுஞ் சகோ தரசமயங்களாகத் தழுவுகிறதோ அதுசமரசநோக் குடைய சன்மார்க்க சமயமென்று போற்றப்படும். எச்சமயம் பிற சமயங்களைப் பொய்யெனக் கருதுகிறதோ பழிக்கிறதோ அதுசமரசசன்மார்க் கத்தை வளர்ப்பதாகாது. சமரச நோக்குடைய சமயமெதுவோ அது சாதி மத தேச பாஷை வேற் றுமை பாராட்டாது, எல்லா உயிர்களிடத்தும் ஒரேவித அன்பு செலுத்துமாறு மக்களை ஏவும். அச்சமயம் கைம்மாறுகருதாப் பணியாற்று மாறு போதிக்கும்; தனக்கென வாழாது பிறர்க் கென வாழுமாறு அறிவுறுத்தும்; தியாக உணர்வு நல்கும்; உயர்வு தாழ்வை யொதுக்கும். இன்னோரன்ன விழுமிய 'நோக்கங்களையுடைய சமயமெதுவோ அதுவே சமயம்.

உலகில் தோன்றிய மெய்க்குரவர் பலரும் அறி வும் அன்புஞ் செறிந்த ஒரு நெறியை அறிவுறுத்தி னர். அந்நெறி உயிர்கட்குத் துன்பமூட்டும் முனைப்பையறுத்து இன்பமூட்டுவது. துன்பமூட் டும் முனைப்புடையார்க்கு நெறிகள் பலவாகத் தோன்றுதல் இயல்பே. முனைப்பற்ற விடத்தி லன்றோ சமரசசன்மார்க்கம் மிளிரும்? முனைப்பை வளர்க்குமாறு எச்சமயமாவது சொல்கிறதா? ஒன்றேனுமில்லை. இதனால் சமயங்களின் ஒற் றுமை புலப்படும். பல முத்துக்கள் கோவை

பட்டு நிற்க, அவைகளினூடே ஒரு நூலிழை நுழைந்து நிற்றல்போலப் பல சமயங்களினூடே சமரசசன்மார்க்கமென்னு முயிர் நாடி புகுந்து நிற்கிறது. அச்சமரச சன்மார்க்கமே கடவுள் சமயம். அச்சமயமே, மேலே எச்சமயமென்றெழுந்த வினாவிற்குச் செவ்வனிறையிறுக்குஞ் சமயம்.

## சைவ சித்தாந்தம்

நாம் இன்று இவண் ஒரு சைவசித்தாந்தப் பெருங்கழக ஆண்டுவிழாக் கூட்டத்தில் அமர்ந்திருக்கிறோமாதலால், அச்சைவசித்தாந்தம் சமரச சன்மார்க்கத்துக்கு எவ்வளவு தூரம் அரண் செய்கிறதென்பதைச் சிறிது ஆராய்வோம். சைவசித்தாந்தத்தின் சமரச நுட்பத்தை ஆராயுமுகத்தான் அதன் வரலாற்றையும் ஊடே ஊடே சில உரைகளால் குறிப்பிட்டுச்செல்ல எண்ணுகிறேன்.

சைவசித்தாந்தம் மிகத் தொன்மையது. மக்களுள் மிகத்தொன்மை வாய்ந்த தமிழ்மக்களால் அந்நெறி காணப்பட்டது. தமிழ் மக்களின் தொன்மை சரிதத்தால் அளந்துரைக்கும் பான்மையதன்று. அவர்கள் தொன்மை, சரித்திரகாலத்தையுங் கடந்து நிற்பது. இப்பொழுது இந்துமகாசமுத்திரமென வழங்கப்படும் நீர்ப் பரப்பு நிலப்பரப்பாகவிருந்த ஞான்று, அதன்

கண் தமிழ்மக்கள் வதிந்து, தங்கள் நாகரிகத்தைத் வளர்த்து வந்தார்களென்று சொல்லப்படுகிறது. விரிவு ஆராய்ச்சிக்காரர் நூல்களிற் காண்க.

பழந்தமிழர்கள் இயற்கை நிலையமாகிய மைவரையில், இயற்கை யுணவுகொண்டு, இயற்கை யுடையணிந்து, உலகெனும் இயற்கை நூல் பயின்று, இயற்கையுடன் கூடி, இயற்கையைப் பாடி, இன்பவாழ்வு நடாத்திவந்தபோது, அவர்கட்கு இயற்கையினுள் பிரிவின்றி விரவி நிலவும் அழியா அழகு புலனாயிருத்தல் வேண்டும். இயற்கையுள் வாழ்வோர்க்குக் கைபுனைந்தியற்றாக் கவின்பெரு வனப்பு எளிதில் புலனாகும். அப்பேரழகை முருகெனும் முழுமுதற் பொருளாகத் தமிழ்மக்கள் போற்றிவந்தார்கள். முருகு என்னுஞ் சொற்கு அழகு இளமை மணம் என்று புலவர் பொருள் கூறுப. என்றும் மாறா இளமையும், நீங்கா மணமும், அழியா அழகுறையிடத்தில் அதனோடு நீக்கமின்றி நிலவுதலியல்பு. இம்மூன்றும் ஒன்றிய முருகே பழந்தமிழர்களால் இறையெனப் போற்றப்பட்டது. முருகு என்பது பின்னை அன்விகுதி பெற்று முருகன் என்று வழங்கலாயிற்று. பழைய கிரேக்கர் அழகு நாட்பங்தெளிந்து, அழகு வாழ்வை நடாத்தி, இன்பந்துய்த்ததும் நினைவிற்கு வருகிறது. இதுபோழ்தும் அழகோம்ப அமெரிக்க அறிஞருட் சிலர்

பெருமுயற்சி செய்து வருவதோடு நில்லாது, அதற்கெனக் கழகமுங் கண்டு வருகிறார். தமிழர்கள் அந்நாள் கண்ட அழகு, சமரச அன்பொழுகும் நன்மனதுக்குக் காட்சியளிக்கும். மாறுபட்டு வேறுபட்டுக் கலாம்விளைக்கும் உள்ளத்துக்கு இயற்கை யழகு எவ்வழியில் புலனாகும்? எவ்வறிஞரும் போற்றும் அழகையே பழந்தமிழர்கள் பொருளெனப் போற்றியது காண்க.

இயற்கை அழகை வெறுப்போர் இறையின்ப நுகராது, செயற்கை வெம்மையிலன்றோ வீழ்ந்து இடர்ப்படுவர்? இயற்கை விடுத்து இறைவனைத் தேடுவது காசிக்குச் செல்லவேண்டுமென்று கதிர்காமத்தை நோக்கி நடப்பதை யொக்கும்.

அழகாம் முருகைப் பொருளெனப் போற்றிய நந்தமிழ்ப் பெரியோர் பின்னைத் தாங்கண்ட உண்மைப்பொருளைக் கந்தழி என்னும் பெயரால் வழிபடலாயினர். (கந்து - கட்டு; அழி - அற்றவிடம்) முழுமுதற்பொருள் கட்டற்றது என்ற முடிவு அந்நாளிலேயே தமிழ் மக்கட்குத் தோன்றிற்று போலும்!

முருகு ஒருபோது தோன்றுவதும் மற்றொரு போது மறைவதுங்கண்டு, அத்தோற்ற மறைவை நம்முதறிஞர் ஆராயத் தலைப்பட்டிருப்பர். அவ்வாராய்ச்சியான் முருகிற்குத் தோற்ற ஒடுக்கமில்லையென்றும், தம்மாட்டுள்ள அறியாமையென்

னுங் கட்டு அதை மறைக்கிறதென்றும், அவ்வறி யாமை விலகும்போது அது தோன்றுகிறதென் றும் அவர்தம் பேரறிவு அவர்க்கு உணர்த்தியிருக் கும். அந்நாள் தொட்டுத் தமிழ்மக்கள் கட்டுடை யன உயிர்களென்றும், கட்டில்லாதது கடவுளென் றுங் கருதிக் கடவுளைக் கந்தழியெனப் போற்றி யிருப்பர். கந்தழி என்பதை ஆராய்ந்தால் இவ் வுண்மை பெறப்படுதல் காண்க.

மக்கட்குக் கட்டுண்டு என்பதும், ஆண்டவ னுக்கு அஃதில்லை என்பதும் எச்சமயத்தவரும் ஒப்பமுடிந்த உண்மை. கட்டைப் பொருளாகக் கொள்ளாத சமயத்தாரும் விவகாரத்தில் கட் டுண்மை மறுக்கிறாரில்லை. ஆதலால் கந்தழி, கட் டைப்பொருளாகக் கொள்ளாத சமயத்தார்க்கு முரியதாகும். கடவுளைத் தமிழ்மக்கள் கந்தழி என்று வழிபட்டமையான், அவர்கள் கட்டு, உயிர், கடவுள் என்னும் மூன்று பொருளுணர்வு பெற் றிருந்தார்க ளென்பது புலனாகிறது. நந்தமிழ் மக்கள் அவ்வுணர்வு பெற்றிருந்தார்களென்பதை அவர்கள் தமிழ் எழுத்துக்களுக்கிட்டுள்ள உயிர், மெய், உயிர்மெய் என்ற பெயர்களைக் கொண்டு நன்கு வலியுறுத்தலாம்.

உலகிலுள்ள சமயங்க ளெல்லாம் பொரு ளுண்மை கூறுவதில் பலதிறக் கருத்துடையன வாயினும், அவை யாவும் அறியாமை யொன்று

உண்டென்றும், அதனின்றும் ஆன்மா விலகி, அஃதில்லா ஆண்டவனோடு கலக்க வேண்டு மென்றுங் கூறுதொழிகின்றனவோ? அறியா மையை உள் பொருளாக் கொள்வோரும் இல் பொருளாக் கொள்வோரும் அதை யொழிக்க முயல்வ துண்மையே. பாரமார்த்திகப் பேச்சு இப்பொழுது இங்கிலேயில் வேண்டுவதில்லே. ஆகவே தமிழ்மக்கள் கண்ட முப்பொருளுண்மை எப்பொருள் பற்றியாதல் எங்கிலேயிலாதல் எச்சம யத்தவராலுங் கொள்ளப்படுவதே.

முப்பொருள் உண்மை கண்ட நம் முன்னோர் கள் வீடுபேற்றிற்கு இல்லற நெறியையே பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்ந்தார்கள். மிகமிகப் பழைய காலத்தில் தமிழ் நாட்டில் துறவற மென் ருெரு நெறியிருந்ததாகத் தெரியவில்லே. சமண பௌத்த மதங்கள் தோன்றிய பின்னரே நமது நாட்டில் துறவு என்னும் பிரிவு தோன்றிற்று என்று சில அறிஞர் கருதுகிருர். துறவு ஏற்பட்ட பின்னேயே இன்பம் சிற்றின்பமெனவும் பேரின்ப மெனவும் பிரிந்ததுபோலும்! பண்டைக் காலத் தில் இயற்கையோடு இயற்கையாய் ஒருவனும் ஒருத்தியும் வாழ்ந்து வந்தமையான், அவர்கள் நுகர்ந்த இன்பம் வீட்டுக்குரிய இன்பமாகவுந் துணை செய்தது.

* "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்
ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள"

எனவும்,

† "பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்"

எனவும் வரூஉம் ஆன்றோர் மொழிகளின் பொருளுண்மை யோர்ந்துணர்க. ஆணும் பெண்ணும் இயற்கை விடுத்துப் பிரிந்து தனிப்பட்டுச் செயற்கையாளராய் வாழும் இந்நாளில் பண்டைக்கால நிலை அறிதலரிதே. பழந்தமிழர்கள் தாம் போற்றிய அழகைப் பெண்ணென்றும் மாதரென்றும் அழைத்த நுட்பத்தை உலகோர் தேர்ந்தால், அவர் இல்லறத்தின் மாண்பு உணரப்பெறுவர் விரிவு களவியல், திருக்கோவையார் முதலிய நூல்களிற் காண்க. (பெண், மாதர், அழகு இவை ஒரு பொருட் சொற்கள்) அத்தகை இல்லறத்தைத் வெறுப்போர் அரியர். தமிழ்மக்கள் இல்லறவின்பம் பல சமயத்தார்க்கு முரித்தே. விரிப்பிற் பெருகும்.

முருகு கந்தழி என்னும் பெயர்களால் போற்றப்பட்டுவந்த கடவுட் பெயர் பின்னைப் பெரிதுஞ் சிவமெனுந் திருப்பெயரால் போற்றப்படலாயிற்று. சிவம் என்பது தென்மொழி யென்

* திருவள்ளுவர். † சுந்தரர்.

றும் வடமொழி யென்றும் வாது செய்குநருந் நந் தமிழ்நாட்டிலுளர். சிவம் என்பது செம்மையி னடியாகப் பிறந்த தனித்தமிழ்ச் சொல்லென் றும், அச்செழுஞ் சொல்லின் பொருட் செறிவு நோக்கி வடமொழியாளர் அதைத் தந்நூற்களில் நுழைத்துத் தம் மொழியாட்சியிற் கொணர்ந்தன ரென்றும் இந்நாளாராய்ச்சிக்காரர் சிலர் கூறுகி றார். வடமொழியாளர் சிவமெனுஞ் சொற்குக் காந்தி, மங்கலம், ஆனந்தம், அறவோர் உள்ளத் துறைவது, சராசரங்களின் தோற்ற ஒடுக்கத் துக்கு நிலைக்களனாகக் கிடப்பது, இருளைப் போக்கி அருளைத்தருவது, முற்றறிவுடையது, தூயது, இன்பந்தருவது முதலிய பல பொருள் விரித்துள்ளார். அப்பொருள்கள் அறிஞருள்ளத் தைக் கவருமென்பதில் ஐயமில்லை. விரிவு வட மொழி நூல்களிற் காண்க.

சிவமெனுஞ் செம்பொருளைச் "சாந்தம் சிவம் அத்வைதம்" என்று வேதாந்தம் வழுத்துகிறது; "சிவமெனு நாமந் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" என்று தமிழ்வேதம் புகழ்ந்துரைக் கிறது. சிலப்பதிகாரம் முதலிய நூலகளிலும் சிவ பெருமான் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று போற்றப்படுதல் காண்க. அடியார்க்கு நல் லாருள்ளிட்ட உரையாசிரியர் பலரும் சிவபெரு மானைக் குறிக்குமிடங்களிலெல்லாம் இறைவன்

என்ற சொல்லானே குறிப்பிட்டுச்செல்வதுங் கவனிக்கத்தக்கது. எச்சமயத்தவரும் போற்றுந் தாயுமான சுவாமிகளும் ஆண்டவனைச் சிவமெனும் நாமத்தாற் போற்றுகிறாரெனில் அத்திருநாமத்தின் மாண்பை என்னென்றியம்புவது?

"தெய்வம் வேறுள தென்பவர் சிந்தனை
நைவ ரென்பது நற்பர தற்பர
சைவ சிற்சிவ னேயுனைச் சார்ந்தவர்
உய்வ ரென்பதும் யானுணர்ந் தேனுற்றே"

என்பது சுவாமிகள் திருவாக்கு. சிவ என்னுந் திருநாமத்திலுள்ள தெய்வத்தன்மை நோக்கியே

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே"

என்று திருமூலநாயனாருந் திருவாய்மலர்ந் தருளினார். சி என்பது சூரிய கலை என்றும் வ என்பது சந்திரகலை யென்றும் யோக நூல்கள் கூறும். சிவமென்பது கடவுளியல்புக ளெல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கியுள்ள ஒரு பெருஞ் சொல்லாகலான், அதுவே சிறப்பாகச் சைவ நன்மக்களாலும் மற்றவர்களாலும் கொள்ளப்பட்டது. இச்சிவசம்பந்தமுடைய சமயமும் சைவம் என்னும் பெயர் பெற்றது.

நந்தமிழ் மக்கள் கண்ட சமயம் பின்னைத் திரு ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர், திருமூலர், சேக்கிழார் முதலிய பெரியோரால் வளர்க்கப்பட்டது. முதல் நால்வரைச் சைவத்திருவாளர் சமய குரவரெனப் போற்றி வருகிறார். இவர்கள் காலத்தில் தமிழ் நாட்டில் வேறு சில கொள்கைகளும் பரவலாயின. சிறப்பாகச் சமண பௌத்த மதங்களைக் குறிப்பிடலாம். நால்வர் அருளிய தேவார திருவாசக மென்னுந் தமிழ் வேதத்தில் சமரச சன்மார்க்கத்துக்கு வேண்டப்படுஞ் செம்பொருள் பலவுஞ் செறிந்து கிடக்கின்றன. தாலிபுலாக நியாயம் பற்றி ஈண்டு இரண்டொன்று எடுத்துக் காட்டுகிறேன். கடவுளைப்பற்றித் தமிழ் வேதம்,

" தேவராயு மசுரராயுஞ் சித்தர் செழுமறைசேர்
நாவராயு நண்ணு பாரும் விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னு
மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே "

என்றும்,

" இன்னவுரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது நீதிபலவும்
தன்னவுருவாம் "

என்றும்,

" விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான் "

என்றும்,

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ"

என்றும்,

"ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே"

என்றும் முழங்குதல் காண்க. அவ்வேதம் சமரச ஞானத்தைப்பற்றி,

"வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதே வனலால் தேவர்மற் றில்லையே"

என்றும்,

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்றதாகும்"

என்றும்,

"ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க்கு அப்பொருள்கள்
வேறொன்றிலாதன"

என்றும்,

"ஆறுசமயத் தவரவரைத் தேற்றுந் தகையன"

என்றும்,

"மிக்க சமயங்கள் ஆறினுருவாகி நின்றதழலோன்"

என்றும்,

ஓதுதல்காண்க. இச்செம்மை நல்லுரைகள் ஒரு கூட்டத்தார்க்கோ உரியனவாகும்? சமரச நாட்ட

முடைய அனைவர்க்கும் உரியனவாம். எவர் எக் கருத்தை நாடினும் அவர் அக்கருத்தைத் தேவார திருவாசகத்திற் காணலாம்.

" இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை அறிய கிற்பாரே "

என்னுமொரு திருப்பாட்டுத் தமிழ் வேதத்தில் மிளிர்கிறதெனில் அதன் மாண்பைக்கூற யான் அருகனாவனோ?

திருமூலர் திருவாக்கில் பல சமயக் கருத்துக் கள் ஒளி செய்வதை ஈண்டு விரித்துக்கூற இட மின்மை கருதி வருந்துகிறேன். திருமூலர் " அன்பே சிவம் " என்ற உண்மை கண்ட அன்பர்; ' ஒன்றது பேரூர் வழியாறதற்குள - என்றது போல இருமுச் சமயமும் - நன்றிது தீதிது என்றுரை யாளர்கள் - குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே " என்று சமரச ஞான அறிவுச் சுடர் கொளுத்திய அறிஞர் அவர்; " தேயமு நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்-காயமிந் நாட் டிடைக் கண்டு கொண்டேனே " என்று பொருளிடங் காட்டிய பெரியார் அவர். அவரை எவ்வறிஞர் எவ்

வன்பர் எவ்யோகி எந்நாட்டார் எச்சமயத்தார் போற்றுதொழிவர்?

தெய்வச் சேக்கிழார் அன்பை என்னென்று சொல்வேன்? "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் - மன்னியசீர் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே" என்றும், "மூவேந்தர் தமிழ் வழங்கு நாட்டேக்கப்பால் முதல்வனுர் அடிசார்ந்த முறைமையோ ரும்" என்றும் அப்பெரியார் அருளிய திருவாக்கு களை நோக்குழி அவர் பரந்த மனமும் விரிந்த நோக்கும் எவரை இன்புறச் செய்யா?

இவ்வன்புடைச் செல்வர்களால் வளர்க்கப்பட்ட சைவ வான்பயிர் பின்னை மெய்கண்டார், அரு ணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமா பதிசிவம் ஆகிய நால்வரால் ஓம்பப்பட்டு வந்தது. இந்நால்வருஞ் சந்தான குரவரெனச் சைவசித் தாந்திகளால் போற்றப்படுகிறார். இவர்கள் காலத் தில் தமிழ் நாட்டில் பல சமயக்கொள்கைகள் பரவி வேரூன்றின. பெரிதும் ஏகான்ம வாதக்கொள்கை பரவி வந்ததென்பது இவர்கள் நூற்களால் தெரிய வருகிறது. ஈண்டு வடமொழிக் கலைகளைப்பற்றிச் சிலவுரைகள் வழங்கலாமெனக் கருதுகிறேன்.

சைவ உலகத்துக்கு வேதம் பொது நூல்; ஆகமம் சிறப்பு நூல். வேதத்தை வேறாகவும் ஆகமத்தை வேறாகவும் சைவர்கள் கொள்வதில்லை.

இதனால் நம்மவர்கட்கு வைதிக சைவரென்னும் பெயரும் வழங்கிவருகிறது.

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாதன் உரையை நாடில் இரண்டந்தம்
பேதம தென்னில் பெரியோர்க் கபேதமே"

என்று திருமூலர் உண்மை விளக்குகிறார்.

"வேதத்திற்கும் ஆகமத்திற்கும் வேற்றுமை கண்டிலேன்" என்று நீலகண்டர் வாய்மை வெளியிட்டுள்ளார்.

"வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்"

என்று அருணந்தி சிவனாரும் மெய்ம்மை கூறியிருக்கிறார். இந்நாளில் தமிழ் நாட்டிலுள்ள சில அறிஞர் வடமொழி வேதந் தமிழர்க்குரிய தன்றென்றும், அஃது ஆரியர்க்கே யுரிய தென்றும் ஆராய்ச்சி யுலகிற்கு அறிவுறுத்துகிறார். ஒரு நூல் ஒரு கூட்டத்தார்க்கே உரியதாவ தெப்படி? அறிவும் ஆராய்ச்சியும் எல்லார்க்கும் பொதுவாயிலங்குவன. நியூட்டன் (Newton) என்னும் அறிஞர் கண்டவுண்மை அவரினத்தார்க்கு மாத்திரம் உரியதாகுமோ? ஆண்டவன் திருவருள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவர் அறிவில் விளங்கி ஒவ்வோர் உண்மையை வெளியிடுகிறது. சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய நாம் அவ்வுண்மை தேறாது பிணக்குற்றுப் போரிடுகிறோம்.

ஒழுங்குபட்ட வடமொழி வேதமும் வேதாந்த மும் பிறவும் எந்நாட்டிடைப் பிறந்தன? ஐந்து நதிபாயும் நமது அழகிய நாட்டிலன்றோ அவை பிறந்தன? சரித்திர ஆராய்ச்சிக்காரர் கூற்றுப்படி ஆரியர் குளிர்மிகுந்த வடபுலத்திருந்து வந்தவ ராயினும், அவர் நந்நாட்டிடைப் புகுதற்கு முன் னர் நந்நாட்டிடை மக்களாதல் நாகரிகமாதல் நிலவியிருக்க வில்லையோ? திராவிடர்கள் விந்திய முங் கடந்து இமயம்வரை கோலோய்ச்சி வாழ்ந் தார்கள் என்று கூறமுந்தும் நம்மாராய்ச்சிக்காரர் கள் வடமொழி ஒரு கூட்டத்தார்க்கே யுரிமை யுடைத்து என்று மன்றுடுவதன் பொருள் விளங்க வில்லை. குடிபுகுந்த ஆரியர் தன்னந்தனியராய்க் காடு திருத்தி நாடாக்கி அரசுகண்டு கலைகளை வளர்த்து வந்தாரென்று எப்படிச் சொல்லக்கூடும்? போந்த மக்களும் நிலையாக விருந்த மக்களும் ஒன்றுபட்டே வினைகளாற்றி யிருத்தல்வேண்டும்.

ஆரியர் நாகரிகமும் திராவிடர் நாகரிகமும் ஒன்றுபட்டு
நமது நாட்டிடை யமுனை கங்கைபோல் ஓடுகின்றன

என்னுங் கருத்துபட வங்காளக் கவியரசர் ரவீந் திரநாதர் வெளியிட்டுள்ள உரைகளும் ஆராயற் பாலன. ஆரியர் திராவிடர் என்னும் இருவரும் ஓரினத்தாராகி வேத வேதாந்த உண்மைகளை நமது நாட்டுக்குத் தந்தார் என்று கொள்வது சமய உலகத்துக்கு நலஞ்செய்வதாகும்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"

என்பது போன்ற பல கருத்துக்கள் தமிழ் வேதத்தில் செறிந்து கிடப்பதை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

பண்டை இந்திய மக்கள் திராவிடர்களா ஆரியர்களா என்று ஆராய்ந்து சில அறிஞர் தாம் தாம் கண்ட முடிவுகளை வெளியிட்டுள்ளார். ஆராய்ச்சி யுலகம் கணத்துக்குக் கணம் மாறுபடுவது. முதல் முதல் மக்கள் எங்கே படைக்கப்பட்டார்கள் என்பதைப்பற்றிப் பலதிற ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. மாறுபட்ட கருத்துக்கள் பலதிறத்தனவா யுலவுகின்றன. இப்பீடைகளைக் கொணர்ந்து சமய உலகில் நுழைத்து அன்பு நெறியைப் பாழ் படுத்தலாமோ? இதனால் ஆராய்ச்சி வேண்டுவதில்லை என்று நான் கூற முந்தவில்லை. ஆராய்ச்சிக்கரடி விடுத்துச் சமய உலகைக் கலக்கலாகாதென்பது எனது வேண்டுகோள். ஆராய்ச்சியிற் புகுவோர் நடுநிலை பிறழாத் தூயரா யிருத்தல்வேண்டும். அவர்க்கு ஒன்றனிடத்தில் காய்தலா தல் உவத்தலா தலிருத்தலாகாது. இப்பெருங்குணத்தோடு நமது நாட்டில் இந்நாளில் உண்மை ஆராய்வோர் எத்துணைபேர் என்று விரல்வைத்து எண்ணிவிடலாம். அபிமானப் பேய், ஆராய்ச்சி ஆண்டவனை வழிபடவிடுமோ? நமது தமிழ்நாட்டு அறிஞர் ஆராய்ச்சி திருஞான

சம்பந்தர் பிராமணர், திருநாவுக்கரசர் வேளாளர் என்ற உண்மைகாணும் அளவு இப்பொழுது எட்டியிருக்கிறது. இன்னும் அவ்வாராய்ச்சி எம் முகட்டைக் கிழித்து எவ்வானத்தை முட்டுமோ அறிகிலேன். சாதி பேதம் முதலிய பேதங்களைக் கடந்து சிவமாய் நின்ற பெரியோர்களைப் பற்றி அப்பேதங்களில் வீழ்ந்து தெளிவோர் என்ன கூறினும் நான் மயக்குறேன். என்னருமைச் சகோதரர்களாகிய நீங்களும் மயக்குறலாகாதென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். ஆராய்ச்சியுலகு வேறு, சமய உலகு வேறு என்று மீண்டும் வலியுறுத்தி மேலே செல்கிறேன்.

வடமொழிப் பொது நூலாகிய வேதமும், வேதாந்தமும் பல திறப்பட்ட கிடக்கைகளைக் கொண்டிருப்பது போலத் தோன்றினும் அவைகளை முற்றும் ஆராய்வோர்க்கு அவைகளில் பன்மை புலனாகாது ஒருமையே புலனாகும். வேத வேதாந்தம் மாயையையோரிடத்தில் மித்தையென்று கூறும்; மற்றோரிடத்தில் நித்தியமென்று கூறும். இம்மாறுபட்ட கருத்துக்கள் பலரை மருட்டுமென்பது திண்ணம். முழுமுதற் பொருளுண்மை காண்பதிலும் இத்தகை மருட்சி விளைதலுண்மை. எதையும் முற்றும் ஆராய்ந்து தெளிவோர் ஓரே உண்மை பெறுவர்.

பலபட பல [illegible]ளாகப் பார்த்து விரிந்து கிடக்கும் வேத வேதாந்தமெனும் பெருங்கடலில் வியாசர் என்னும் பேரறிஞர் தமது அறிவென்னுங் கோல்நாட்டிக் கடைந்து 'வேதாந்த சூத்திரம்' (பிரம சூத்திரம்) என்னும் அமுதை உலகிற்கு ஈந்தார். அச்சூத்திரம் உரையின்றி ஆட்சியிலிருந்த போது வேதாந்த சித்தாந்த துவைத அத்வைத பிணக்குகளெழவில்லை. பின்னர் அவ்வேதாந்த சூத்திரத்துக்கு நீலகண்டர், சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலியோர் உரைகள் கண்டனர். ஒரு மூலத்துக்குப் பலர் உரை காண்டல் ஆராய்ச்சி யுலகிற்குப் பெருவிருந்தளிப்பதாகும். நமது நாட்டில் உரைகள மதங்களாகிச் சமயவாதங்களைக் கிளப்பிக்கொண்டிருக்கின்றன. உரைகண்ட அறிஞர்களை நான் தொழுகிறேன். அவ்வுரைகளையாண்ட பின் சந்ததியார் குறுகிய நோக்கம் தேசத்துக்கே தீங்கிழைத்து வருகிறது.

வேதாந்த சூத்திரத்துக்கு உரைகாணப் புகுந்தோர் வதிந்த காலநிலையைச் சரித்திரக் கண் கொண்டு நோக்குவோர்க்கு எவ்வித திரிபும் நிகழாது. பல உரைகளையும் படித்து அவைகளில் தோன்றும் பன்மைகளில் ஒருமை காண்டல் அறிவுடைமை. வாதத்தில் நுழைந்து நம்மவர்கள் நாட்டைச் சாக்கடையாக்கியது நமது தீவினையே யாகும். மாறுபட்ட கருத்துக்களைக் காணும்போ

துங் கேட்கும்போதுஞ் சினந்து எரிந்து வேகாது, அன்புளங்கொண்டு அவைகளை ஏற்று உண்மை காண உழைக்கும் பெருந்தகைமையை நம்மவர்கள் என்று பெறுவார்களோ அறிகிலேன்.

அறிவே பொருளெனக்கொண்ட சங்கரர், அன்பே பொருளெனக்கொண்ட புத்தர் பெருமான் அறிவுறுத்திய அன்புச் சமயம் - அறக்கொள்கை-ஒழுக்க நிலை - மாறுபட்டு, எங்கும் "கடவுளில்லை; அறிவெனும் பொருளில்லை, பூதங்களே நித்தியம" என்ற நாத்திக உணர்வு பரவி வேரூன்றிய காலத்தில் தோன்றினவர். அந்நாத்திகத்தை யொழிக்க அப்பெரியார் புத்தர்கள் மெய்யெனக் கொண்ட சடம் பொய்ப் பொருளென்றும், அவர்கள் பொய்யெனப் புகன்ற சித்தொன்றே மெய்ப் பொருளென்றும் உறுதிப்படுத்துவதிலேயே தமது பெரும் பொழுது கழித்தார். அவர் உழைப்பும் அவர் போதனையும் அக்கால தேவைக்கு எத்தகை யின்பளித்திருக்குமென்பதை யான் இயம்ப வேண்டுவதில்லை.

பௌத்தர்கள், புத்தர் அறிவுறுத்திய அறநெறி விடுத்து நாத்திகம் போதிப்பதிலேயே எவ்வாறு கருத்துச் செலுத்தினரோ அவ்வாறு சங்கரர்க்குப் பின்வந்தவருட் சிலர், சகுண வழிபாடு அழியும் முறையில் தம்மதம் பரப்ப முயன்றனர். சங்கராச்சாரியார் ஒருமை ஞானத்தை உலகிற்கு

அறிவுறுத்தினாரேனும் அவர் சகுண வழிபாட்டினின்றுஞ் சிறிதும் வழாது சமய ஒழுக்கத்தைக் காத்துவந்தார். அவர் பின் வந்தார் சிலர் "நாம் பிரமம்" என்ற கொள்கையைப் பரப்புவதில் கண்ணுங்கருத்துமா யிருந்தமையால் சகுண வழிபாடு வீழ்லாயிற்று. அவ்வேளையில் இராமாநுஜ மத்துவ பாடியங்கள் தோன்றலாயின. அதுவுங் காலதேவதையின் வேண்டுதலென்றே நான் கொள்வேன். ஒரே உண்மையைக் காலமிடங்களுக்கேற்ற வண்ணம் பலவாறு அறிஞர் வாயிலாக ஆண்டவனே அறிவுறுத்துகிறான் என்னும் உண்மையில் உறுதியுடையார் எவரையும் எக்கொள்கையையுங் குறை கூறார்.

மக்கள் வேதாந்த உண்மை காணப்பெறாது பலதிறக் கருத்துடையவர்களாய் இடர்ப்படும் வேளையில் ஆண்டவனருளால் மெய்கண்டார் தோன்றிச் சிவஞானபோதமென்னுஞ் சீரிய நூலை உலகிற்குத் தந்தார். இந்நூல் பொது நூலாகிய வேதத்தையும் சிறப்பு நூலாகிய ஆகமத்தையும் உடன்பாடாகக்கொள்ளுஞ் சமரச இயல்புடையது. இச்சிவஞான போதத்தை யொட்டிச் செய்யுள்பாடியம் போன்ற சிவஞான சித்தியெனும் வழிநூலும், அதைத் தழுவிச் சிவப்பிரகாசம் முதலிய சார்பு நூல்களுந் தோன்றின. இவைகட்கு மெய்கண்ட சாத்திரமென்னும் பொதுப்பெயர் வழங்கி வருகி

றது. இதுவேதாந்த ஆராய்ச்சியில் சேர்ந்த பிணக்குகளையொழிக்க எழுந்த சித்தாந்த நூலென்பது,

> "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத்
> திறனிங்குத் தெரிக்கலுற்றும்"

என வரூஉம் உமாபதி சிவத்தின் திருவாக்கான் வலியுறுத்தப்படுதல் காண்க.

தன்னந்தனியராய்த தமிழ் மக்கள் கண்ட சமயம், முதல்முதல் சமணம், பௌத்தம் முதலிய சமயங்களோடு கூட்டுறவு கொண்டு, பின் வடமொழிக் கலைகளோடு நட்புபெற்று ஏகான்மவாதம் முதலிய சமயங்களோடு உறவாடி, முடிவில் மெய்கண்டார் வழிச் சித்தாந்த உருவடைந்து, உலகில் அருணெறியாகி வளர்ந்து வருகிறது.

இனி மெய்கண்ட சாத்திரம் தற்போதைய உலகம்விரும்பும் சமரசஞானத்தை எவ்வளவில் தழுவி நிற்கிறது என்பதைச் சிறிது ஆராய்வோம். மெய்கண்ட சாத்திரம் தத்துவம் முப்பத்தாறையும் பொருளாகக் கொண்டிருக்கிறது. (முப்பத்தாறின் விரிவு தொண்ணூற்றாறு; விளக்கம் தத்துவக் கட்டளைகளிற் காண்க.) ஒவ்வொரு தத்துவமும் ஒவ்வொரு சமயப் பொருளாக விளங்குவது. முப்பத்தாறையும் பொருளாக்கொண்ட மெய்கண்ட சாத்திரம் எத் தத்துவத்தை—எச் சமயத்தை ஒதுக்கக் கூடும்? எதைக் குறை கூறக்கூடும்? சைவ சித்தாந்தம் தனித்தும் எல்லாச் சமயங்களி

ளும் ஊடுருவிப் பாய்ந்தும் நிற்பது. எல்லாச் சமயங்களுஞ் சேர்ந்த ஒன்றே சைவ சித்தாந்த மென்றுங் கூறலாம். சைவ சித்தாந்தம் யானை கண்ட குருடர் பிணக்கைப் போக்கிய ஒருவனை யொத்திருக்கிறது. சைவ சித்தாந்தம் தனக்கு வேறாக ஒரு சமயமிருப்பதாக நினைக்க விடம் பெறவில்லை. சைவ சித்தாந்திகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுஞ் சிலர்பால் வேற்றுமை யுணர்விருக்கலாம். ஆனால் சைவ சித்தாந்தத்தில் வேற்றுமைக் கிடமில்லை. இவ்வுண்மை

"ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள் நூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கதின்றி
நீதியினால் இவை யெல்லாம் ஓரிடத்தே காண
நிற்பதுயா தொருசமயம் அதுசமயம் பொருணூல்"

எனவரூஉம் அருணந்தி சிவாச்சாரியார் திருவாக்கானுணர்க. மற்றுமோரிடத்தில் அவ்வறிஞர்,

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாஞ் சமயஞ்சாரும்
ஊழ் பெறலரிது"

என்னுஞ் செய்யுளில் சைவத்தின் நுண்ணியலை மக்கட்கு அறிவுறுத்தியிருக்கிறார். தாழ்வுள்ள விடத்தில், அதாவது முனைப்பற்றவிடத்தில் சைவம்

பொலிபுமென்று மெய்கண்ட சாத்திரஞ் சாற்றுகிறது. அந்நிலை பெற்றோர் எவராயினுமாக. அவர் தென்னாட்டாராக; வடநாட்டாராக; கீழ் நாட்டாராக; மேல் நாட்டாராக. எவருள்ளத்தில் சீவபோதமில்லாத் தாழ்வு ஏற்படுகிறதோ அங்கே சிவம் விளங்குமென்க. அச்சிவ சம்பந்தமாகிய சைவம் பிறப்பை யொட்டியதாமோ? மொழியை யொட்டியதாமோ? நாட்டை யொட்டியதாமோ? ஆகாது; ஆகாது. " நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ " என்றார் மணிவாசகனாரும். இந்நிலையை யுலகம் சைவமென் றழைப்பினும் அழைக்க அல்லது வேறேப்பெயரிட்டழைப்பினும் அழைக்க.

மெய்கண்ட சாத்திரத்தின் சமரச நுண்மை அது குறிக்குஞ் சமயவழிபாட்டு முறைகளானும் இனிது விளங்கும். அச்சாத்திரம் சமயவழிபாட்டுக்கெனச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு படிகள் வகுத்திருக்கிறது. இவைகள் முறையே உருவ வழிபாடு (சரியை) அருவுருவ வழிபாடு (கிரியை) அருவ வழிபாடு (யோகம்) இவைகடந்த ஒருபெரு நிலை (ஞானம்) எனப்படும். உலகிலுள்ள சமயங்களின் வழிபாடுகளை நோக்குழிச் சில உருவ வழிபாட்டையும், சில அருவுருவ வழிபாட்டையும், சில அருவ வழிபாட்டையும், சில ஞானவழிபாட்டையுங் கொண்டிருக்கக் காணலாம். சைவசித்தாந்தம் [illegible]

கொண்டிருப்பதால் அச்சமயங்களெல்லாம் சைவ சித்தாந்தத்துக்கு வேறாக எங்ஙனம் நிலவும்? மெய்கண்ட நூல் அறிவுறுத்துஞ் சமயம் உலகில் சரியாமதமாய் கிரியாமதமாய் யோகமதமாய் ஞான மதமாய் யாண்டும் பரந்து விளங்கும் ஒரு பெருஞ் சமரச சமயமென்பதை யோர்ந்துணர்க. சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய இவைகள் ஒன்றற் கொன்று இயைபின்றி யியங்குவனவல்ல. இந் நான்கும் அரும்பு மலர் காய் கனிபோல் ஒன்றற் கொன்று தொடர்புண்டு கிடப்பன.

"சரியா கிரியாயோகஞ் செலுத்தியபின்
ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"

என்று மெய்கண்ட சாத்திரம் புகலுதல் காண்க.

இனி மெய்கண்ட சாத்திரம் அறிவுறுத்தும் பொருளுண்மை மீது சிறிதுநேரங் கருத்தைச் செலுத்துவோம். மெய்கண்ட சாத்திரம் முப் பொருளுண்மை கூறுகிறது. உலகு உயிர் கடவுள் ஆகிய இம்மூன்றும் அநாதி நித்தியமென்னுங் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு சைவ சித்தாந்த மியங்குகிறது. இம்மூன்றனுள் ஒன் றையோ இரண்டையோ அல்லது மூன்றையுமோ சமயங்கள் பொருளாக் கொண்டிருக்கின்றன. சைவசித்தாந்தம் முப்பொருட்கும் உண்மை கூற லான், அதன்கண் எச்சமயப் பொருளுண்மையுங் காணலாம்.

முதலாவது கண்கூடாகத் தோன்றும் உலகை யெடுத்துக் கொள்வோம். உலகைச் சிலர் நித்திய மென்றும், சிலர் அநித்திய மென்றுங் கூறுகிறார். காரியத் தோற்றத்தை அநித்தியமென்று சொல்வதில் பலர்க்குக் கருத்து வேற்றுமையில்லை. காரணத்திற்கு நித்தியா நித்தியங் கூறுவதில் பல திறக்கருத்து வேற்றுமைகளுண்டு. உலகம் நாமரூபத்தோடு விளங்கலான் அஃது அழிதன் மாலையதே. அஃது அழிந்தொடுங்குங் காரணமெது என்பது ஆராயற்பாற்று. காரிய உலகம் சடமாயிருத்தலால் காரணமுஞ் சடமா யிருத்தல் வேண்டுமென்பது சிலர் கொள்கை. அஃது அணுவாயினுமாக; பரமாணுவாயினுமாக; அல்லது வேறு எச்சக்தியாயினுமாக. அது சடமாயிருத்தல் வேண்டுமென்பது அவராராய்ச்சியாற் போந்த உண்மை.

உலகம் பொய்த்தோற்றமுடைய தாகலின் அஃதொரு சடத்தினின்றுந் தோன்ற வேண்டுவதில்லையென்றும், அது சித்தெனுஞ் செம்பொருளின் சாயலையென்றுஞ் சில அறிஞர் வாதிப்பர். இஃது அறிவொன்றே பொருளென்போர் கூற்று. இதற்கு முற்றும் மாறாகச் சடப்பொருள் ஆராய்ச்சிக்காரர் கூறுகிறார். அவர் ஆகாயத்திற் கோட்டை கட்டுபவரல்லர். அவர்கூற்றுங் கவனிக்கற்பாலதே. அவ்வறிஞர், அறிவெனுஞ் செம்பொருட்குத் தனி

யிருப்பில்லை யென்றும், அவ்வறிவு சடத்தினின் றும் பிறக்கிறதென்றுந் தம்மாராய்ச்சி வழி நின்று பகர்கிறார். இவ்வாறே இவ்வாராய்ச்சித் துறையில் கைபோய ஆசிரியர் ஹெக்கல் உள்ளிட்ட கூர்த்த மதியினர் கருதுகிறார். இயற்கை ஆராய்ச்சியுலகில் ஆசிரியர் ஹெக்கலுக்குள்ள மதிப்பு எவர்க்கு மில்லையென்று கூறலாம். அவர் கண்ட பல உண்மைகளை அடிப்படையாகக் கொண்டே மேல் நாட்டு அறிஞர் பற்பலவாறு இயற்கையை யாய்ந்து வருகிறார். ஆசிரியர் ஹெக்கல் எழுதிய "திரிட்டில் ஆப் தி யூனிவர்ஸ்" (The Riddle of the Universe) என்ற நூலுக்கு மறுப் பெழுதப் புகுந்த அறிஞர் ஸர் ஒலிவர் லாட்ஜும் ஏனையோரும் சடத்தைப் பொய்யென்றுதல் அதுசித்தின் பரிணாமமென்றுதல் உரைத்தாரில்லை. அறிவெனுந் தனிப்பொருளுண்மையையே அன்னார் வலியுறுத்துகிறார். இயற்கையை ஆராய்வோர் தாங்கண்ட அளவு உண்மை கூறிக் காணாதவற்றை ஆராயுங் கருத்துடையார். அவர் தங் கருத்துக்குப் பொருளாகாத எதையும் உண்மையென்று கூற ஒருப்படார். அம்மெய்யர்கள் கண்ட வரை உண்மையென்று உலகமும் ஒப்பும். மேல் நாட்டு மனோதத்துவ சாத்திரிகளும் உலகு உயிர் கடவுளைப்பற்றிப் பலவாறு கூறியிருக்கிறார்கள். அக்கூற்றுக்கள் யாவும் பூதபௌதிக ஆராய்ச்சிக்

காரரால் வலியுறுத்தப்பட்டாலன்றி உண்மை யுலகம் அவைகளை யேற்றுக்கொள்ளாதென்க.

மெய்கண்ட சாத்திரம் இதைப்பற்றி என்ன சொல்கிறது? அந்நூல் அறிவினின்றுஞ் சடந் தோன்றுகிற தென்பதையாதல், சடத்தினின்றும் அறிவு தோன்றுகிறதென்பதையாதல் ஏற்றுக் கொள்ளவில்லை. சடம் தனியிருப்புடைய ஒரு பொருளென்றும், அஃது அறிவுப் பொருள் முயறசியால் தொழிற்படுகிறதென்றும் அந்நூல் சொல்கிறது.

உலகம் காரியமென்பதும் அது மாயையினின் றுந் தோன்றுகிறதென்பதும் இந்நாட்டறிஞர் பலர் ஒப்பமுடிந்த உண்மை. ஆனால், காரண மாய மாயை யுள்பொருளா இல்பொருளா என்ற பெரு வழக்கு நீண்ட காலமாக நாட்டில் நடை பெற்று வருகிறது. மித்தை அநிர்வசனியம் என்னுஞ் சொற்கள் நமது நாட்டில் உலவாத எந்த மூலைமுடுக்குகளுமில்லை. வழக்கெல்லாம் பாரமார்த் திக நிலையை - முத்த நிலையைப்பற்றியனவேயன்றி விவகாரத்தில் - பெத்த நிலையில் - ஒன்றுமில்லை. விவகாரத்தில் உலகம் பொய்யென்று கூறுவோர் எவருமில்லை. பாரமார்த்திகத்தில் மாயையிருக் கிறதா இல்லையா என்பதைப்பற்றிய விவாதம் அவசியமோ? பேச்சற்ற விடத்தில் வாதமேது? வழக்கேது?

யான் மாயையைப் பொய்யென்று கூறேன். அஃது என்னை விட்டுப் பொய்யாகப் போனாலுங்காலம் நேரின் நேர்க. அதைக் குறித்து எனக்குக்கவலையில்லை. யான் தோன்றத்துணை நின்று, என்னுடன் உடலாய், அவ்வுடல்வழி யான் அறிவு விளங்கப் பெறவும் இன்பநுகரவும் செஞ்ஞாயிற்றொளியாய், வெள்ளிய நிலவாய், எழின் மலையாய், மணி கொழிக்கும் அருவியாய், செழும்பொழிலாய், அழகிய மலராய், இனிய பெண்ணமுதாய், செம் பாவாய், பல்கலையாய் எனக்குறுதுணை செய்து வரும் எனது இயற்கை அன்னையை - மாயாதேவியை யான் எவ்வாறு பொய்யென்பேன்? இயற்கைத்தாயன்றோ தனது தலைவனாகிய இறைவனுண்மையை அறிவிக்கிறாள்? அவள் அளித்த வாழ்வன்றோ நமது வாழ்வு? அவ்வாழ்வோடிசைந்த இன்பமன்றோ இறைவின்பம்? "இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு" என்று நமது வன்றொண்டப் பெருந்தகையார் நமக்கு அறவுறுத்திப் போந்தார். இத்திருவாக்கின் பெருக்கே வங்காளக் கவியரசர் யாத்த "கீதாஞ்சலி" என்னும் உலகு புகழ்நூல் இறைவன் வடிவா யிலங்கும் இயற்கையைப் பொய் பொய்யென்று இன்பமிழந்து வாடுகிறோம்? நம்மாண் மக்களிடத்து ஆண்மை காணேம்; பெண்மக்களிடத்துப் பெண்மை

காணேம். மக்களில் மிக இழிநிலை எய்தியிருக்கிறோம். உலகம் பொய்யென்ற பேச்சும் எழுததும் போதும்! போதும்! திலகர் பெருமான் எழுதியுள்ள கீதாரகசியத்தை ஆராய்ந்து பார்க்க.

உலகுண்மையைப் பாரமார்த்திக நிலையில் மறுப்போரும் •விவகார நிலையில் மறாது நின்று உண்மைக்குத் துணைபோதலால், எச்சமயத்தாரும் மெய்கண்ட நூல் அறிவுறுத்தும் உலகுண்மையேற்பர் என்பது ஒருதலை.

இனி உயிரைப்பற்றிச் சைவசித்தாந்த மெய்கண்டநூல் என்ன உரைக்கிறது என்பதைக் கவனிப்போம். உயிர் ஒருவரால் படைக்கப்பட்டதன்று என்றும், அஃதென்று மிருப்பதென்றும், ஆனல் அஃது அறிவிலாச் சடப்பொருளுமன்று முற்றறிவுடைய சித்துப் பொருளுமன்று என்றும், பொருளுண்மையில் உயிர் இவைகளுக்கு வேறாக எண்ணப்படினும் அது தனித்து நிற்குமியல்பினதன்றென்றும், அது சடத்தொடு கூடும்போது சடமாகவும் சித்துடன் கூடும்போது சித்தாகவும் சார்ந்ததன் வண்ணமாயிருப்பதென்றும் மெய்கண்ட நூல் முழங்குகிறது. இவ்வாறெல்லாம் விளைந்து விளைந்து கூறாது உயிரைச் சித்தென்று கூறலாமே என்ற வினா எழலாம். சித்தாந்தம் உயிர்க்கு அறியாமையியல்பாய் அமைந்து கிடப்பதென்னும்உறுதியுடையதாகலான், அஃதுஉயிரை

முற்றறிவுடைய சித்தென்றுஎவ்வாறு சொல்லும்? உயிர்க்கு அறியாமையுண்டு என்று ஏகான்மவாதிகளுமொத்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைப் பொருளாகக் கொள்கிறார்களில்லை. அஃது இடையிற்றோன்றும் ஒரு பொய்த்தோற்றமென்று அவ்வறிஞர்கள் அறைகிறார்கள். அத்தோற்ற மற்றவிடமே வீடு என்றும் அவர்கள் சொல்கிறார்கள். சைவசித்தாந்தம், உள்ள ஒன்றினின்றும் ஒன்று தோன்றுமேயன்றி, ஒன்றுமில்லாத பாழினின்றும் எதுவுந் தோன்றாதென்னுங் கொள்கையில் உறுதியுடையதாகலின் அது பொய்த்தோற்றக்கூற்றை ஏற்பதில்லை. பொய்த்தோற்றம் எங்கிருந்து தோன்றிற்று என்று சித்தாந்தங் கேட்கிறது. உயிர்க்கறியாமை இயல்பாக உண்டு என்று சித்தாந்தந் தெரிப்பதால் முத்தியிலும் அதன் அறியாமையின் ஒடுக்கஞ் சொல்லுகிறதன்றி நீக்கஞ் சொல்வதில்லை. ஞாயிறு முன்னே தாரகைகளின் ஒளி விளங்கித் தோன்றாதிருப்பது போல முத்தியில் ஆணவம்(அறியாமை) தன்வினை குன்றிக் கிடக்கிறது என்று சொல்லப்படுகிறது. அறியாமை அநித்தியமென்போர் தங்கோளுக்கேற்ப வீடுபேறு விளம்புகிறார்; நித்தியமென்போர் தங்கோளுக்கேற்ப வீடுபேறு குறிக்கிறார். மனவுணர்வும் தருக்கநினைவும் உள்ளமட்டும் எல்லாம் பேதமாகத் தோன்றுத லியல்பு. இங்கே,

"உங்கள் பேத மன்றியே உண்மை பேத மில்லையே என்னுஞ் சிவ வாக்கியர் திருவாக்கு நினைவிற்கு வருகிறது.

உயிர் அறியாமை யென்னுங் கட்டால் பிணிக்கப்பட்டிருப்பதால் படைப்பு என்பதொன்று நிகழ்ந்து வருகிறது. படைப்பென்றால் சூந்யத்தினின்றும் ஒன்றைப் புதிதாக உண்டு பண்ணுவதன்று; உள்ள வொன்றையே காரியப்படுத்துவது. உயிர்கள் முற்றறிவுடைய கடவுளாயின் ஏன் உடல் தாங்கி உலகில் வருதல் வேண்டும்? உடல் உலகமெல்லாம் பொய்யென்றும் படைப்பு முதலியன யாவும் பாவனையென்றுஞ் சொல்லப்படுகின்றன. வாதத்தையும் விவகாரத்தையும் அவ்வறிஞர்கள் பாவனையாகக் கொண்டால் அவர்கட்குப் பெரிதும் நன்றியறிதலுடையவனு யிருப்பேன் (நிற்க) பாவனைத் தோற்றம் எங்கிருந்து முளைத்தது என்ற வினவிற்கு "அறிவுக் கெட்டாத கேள்வி; தர்க்கத்துக் குரியதன்று; அப்பா! இருந்துபார்" என்ற விடையெழுகிறது. இவ்வினவிற்குச் சைவசித்தாந்தம், உயிர் கட்டுடையதாகலின், அக் கட்டையறுத்துத் தன்னைப்போல் அதை (உயிரை) ஆக்க வேண்டுமென்னுங் கருணைமேலீட்டான் கட்டில்லா ஆண்டவன் (உயிரின்கட்டை - அறியாமையைப் போக்கி அதன் அறிவை விளக்க) உள் பொருளாகிய மாயையைத் தனுகரண புவன

போகங்களாகக் காரியப்படுத்தி உயிர்க்கு உதவு கிறான் என்ற விடையிறுக்கிறது.

" என்றுநீ அன்றுநான் உன்னடிமை யல்லவோ "

என்றும்,

" அருளுடைய பரமென்றே அன்றுதானே யானுளஞ்
எனக்கே ஆணவாதி பெருகுவினைக் கட்டென்றும் "**

என்றும்,

" காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த னைமை * "

என்றும், தாயுமானார் தமது அனுபவத்தைத் தெரிவித்திருக்கிறார். விவகாரத்தில் உயிருண்மையும் அதற்கு ஆணவமுண்மையும் ஏகான்ம வாதிகளாலும் மறுக்கப்படுவதில்லை.

அறியாமையோடு கூடிச் செயலின்றிக் கிடந்த உயிர், தனுகரண புவனபோகங்களைப் பெற்றதும் அறிவு விளங்கிச் செயல் பெறுகிறது. அச்செயலே வினையென்றுங் கர்மமென்றுஞ் சொல்லப்படுவது. உள்ளதற்கே தோற்றங் கூறும் அறத்தை அடிப்படையாகச் சைவசித்தாந்தங் கொண்டுள்ளமையால், கர்மமென்பதும் மாயையில் கரந்து நின்று மாயை காரியப்பட்டு உடலாம்போது விளங்கித் தோன்றுகிறதென்று அது (சித்தாந்தம்) பகர்கிறது. (ஆணவம் கர்மம் மாயை ஆகிய

மூன்றையுஞ் சேர்த்துப் பாசமென்ற ஒரு சொல் லான் சித்தாந்த நூல்கள் சொல்லும்).

உயிர் தனித்து நில்லாது சார்ந்ததன் வண்ண மாயிருப்பதென்று மெய்கண்ட சாத்திரம் மொழி வது பெரிதுங் கவனிக்கற்பாலது.

> "இந்த உடல் அறிவு அறியாமையும் நீயில்லை
> யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
> பந்தமறும் பளிங்கனைய சித்துநீ"

என்று, தாயுமானார் உயிரியல்பு தெரித்தல்காண்க. எவரெவர் எவ்வெவ்வழிபற்றி ஒழுகுகிறாரோ அவ ரவர் அவ்வவ்வழி யொழுக்க நீரராதலியல்பு. உண வுக்கேற்ற குணம் பெறுதலுங் கவனிக்கத் தக்கது. "சேரிட மறிந்துசேர்" என்னும் பழமொழி யின் உள்ளக்கிடக்கையும் சார்ந்ததன்வண்ணமென் னும் உண்மையை வலியுறுத்துவது. "நிலத்தியல் பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு - இனத்தியல்ப தாகும் அறிவு" என்றார் திருவள்ளுவரும். இலௌகிக உதா ரணங்கள் இங்கே பலபடக் கூற விரும்புகின்றே னில்லை. உலகியலில் உயிர்கள் நிலை கலப்புற்றுப் புலப்படுத்தும் உண்மைகளை உறுதிப்படுத்தக் காட்சியளவையே சாலும். பிறவேண்டுவதில்லை. உலகைக்கொண்டு உயிருண்மையையும், இரண் டையுங் கொண்டு ஆண்டவனுண்மையையுங் கண்டு, உயிர் இரண்டுமல்லாத ஒன்றாய்ச் சார்ந்த தன் வண்ணமாயிருக்கும் நுட்பத்தை உலகிற்

குணர்த்திய தமிழ்மக்களின் ஆராய்ச்சி முதுமை வியக்கற் பாலதே.

அறியாமையோடு கூடிய உயிர் ஆண்டவனருளால் தனுகரண புவன போகங்களைப் பெற்று, அவைகளால் விளங்கப்பெற்ற தன்னறிவால், தனக்கு வாழ்வளித்த பெருவாழ்வாம் ஆண்டவன் அருட்டிறத்தைப் புகழ்ந்து புகழ்ந்து நிட்காமியப் பணி யாற்றிவரின், ஆகாமியவினை பீடித்தலின்றிப் பேரின்ப நுகரும். அவ்வருள்வழி நில்லாது உயிர் ஆண்டவன் உதவி மறந்து "தான்" என்று இறுமாந்து, காமியப்பணி யாற்றினால் பிறவி வேரறாது; துன்பம் வளர்ந்துகொண்டே போகும். இவ்வுண்மைகண்டே மணிவாசகனார்,

"கண்ணுதலோன் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கும் எட்டா எழிலார் கழலிறைஞ்சி [யாய்
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

என்று அருளிய திருவாக்கைச் சிந்திக்க. உயிர்

ஆணவத்தோ டத்துவிதமா யிருப்பதினின்றும் நீங்கி மெய்ஞ்ஞானத் தாணுவினோ| டத்துவித மாதற்கு நிட்காமியப் பணியென்னும் இறைபணி நிற்றல் வேண்டுமென்க. இதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

கடவுள் நிலையைப்பற்றிச் சித்தாந்தங் கூறு வதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. கடவு ளைப்பற்றி மெய்கண்ட சாத்திரம்,

" பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
 பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும் அருவுருவின்றிக் குணங்குறிக ளின்றி
 நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசலமாகி
 அகண்டிதமாய் ஆனந்த உருவாயன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
 திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே "

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப் பது காண்க. சைவசித்தாந்தக் கடவுள் பிறப் பிறப்பில்லாததென்பதையும், மும்மூர்த்திகளையுங் கடந்த முதற்பொரு ளென்பதையுஞ் சிறப்பாக ஈண்டு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பௌ ராணிக மதம் எல்லாவற்றையுங் குழப்பிக்கூற லான் இச்சிறப்பை இங்கே குறிக்க நேர்ந்தது. ஆண்டவன் பிறப் பிறப்பில்லாதவன் என்பதை,

" பிறப்பில் பெருமானை "

"பிறப்போடிறப் பென்றும் இல்லா தான்காண்"

"பாலனய் வளர்ந்திலாப் பான்மை யானே"

"பெண்ணுண் பிறப்பிலியாய்"

"தோற்றக்கே டில்லாதான் காண்"

"பிறவாது மிறவாதும் பெருகினை"

"பிறவாத பெருமையாவண"

எனவரூஉம் தமிழ்வேத மெய்ம் மொழிகளிற் காண்க. இவைபோன்ற மொழிகள் பன்னூற்றுக் கணக்காகக் கிடக்கின்றன.

பிறப்பு இறப்புடைய உயிர்களைச் சைவசமயம் தத்துவங் கடந்த தனிப்பரம் பொருளாகக் கொள்வதில்லை. சைவத்துக்குள்ள தனிச் சிறப புக்களுள் இஃதொன்று. இஸ்லாம் மதமும் ஆண் டவனுக்குப் பிறப்பிறப்புக் கூறுவதில்லை. சில சம யங்கள் அறிவால் அன்பால் கடவுள் நிலை பெற்ற உயிர்களைக் கடவுளாகக் கருதி வழிபட்டு வருகின் றன. கடவுள் நிலைபெற்ற உயிர்களை அன்பு மிகுதி யால் கடவுளாக வழிபடுவது கடவுளை வழிபடு வதேயாகும். கடவுள் பிறப்பிறப்பில்லாதவர் என்பதொன்றே ஈண்டுக் கருதற்பாற்று. வழி பாட்டைப்பற்றிய கவலை நமக்கு வேண்டாம்.

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ"

என்று அப்பர் சுவாமிகளும்,

" அல்லலாந் தொழில்படைத்தே அடிக்கடி யுருவெடுத்தே
மல்லல்மா ஞாலங்காக்க வருபவர் கடவுளென்னில்[காது
தொல்லையாம் பிறவிவேலை தொலைந்திடாது இருள்நீங்
நல்லது மாயைதானும் நானென வந்துநிற்கும் "

என்று தாயுமான சுவாமிகளும் ஓதியிருத்தல் காண்க.

இறைவன் மூவர் முதல்வன் என்பதனை :—

" மூவராய முதலொருவன் "
" மூவர்கோன் "
" மூவர்க்கு முதலானான் காண் "
" மூவரறியாச் சிந்துரச் சேவடியானை "
" முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங்காணாச் சிவபெருமான் "
" மூவரு மறிகிலர் "

எனவரூஉந் தமிழ்மறை யுரைகளானுணர்க.

தமிழ் நாட்டிற்றோன்றிய ஆழ்வார்கள் அருளிய நாலாயிரப் பிரபந்தமும் தமிழ் மறையாக நம்மக்களால் போற்றப்பட்டு வருகிறது. அம்மறையுங் கடவுளை நான்காவது பொருளென்றே முறையிடுகிறது.

" மூவராகிய மூர்த்தியை முதல்
மூவர்க்கு முதல்வன் தன்னை "
" மூவர் தம்முளும் ஆதியை "
" மூவர் முதல்வன் மூவுலகாளி "

எனவரூஉம் நம்மாழ்வார் திருவாய் மொழிகளை

யோர்க. வடமொழி வேதமும் எல்லாம்வல்ல இறைவனைச் "சதுர்த்தம்" என்று சாற்றுகிறது. நால்வரும் ஆழ்வாரும் முறையே இறைவனைச் சிவமென்னும் பெயராலும் திருமாலென்னும் பெயராலும் ஓதினும், அவ்விரு பெரியோர் உள்ளம் நான்காவது பொருளில் பதிந்து கிடந்தது கருதத்தக்கது. கடவுள் பெயரைப்பற்றிய வாதம் நமக்கு வேண்டுவதில்லை. பெயர் எப்பெயராயினுமாக. ஜீஹோவா அல்லா முதலிய பெயராயினுமாக.

நால்வரும் ஆழ்வாரும் மும்மூர்த்திகளுள் வைத்து எண்ணப்படும் உருத்திரனையாதல் விஷ்ணுவையாதல் முழுமுதற் பொருளாகக் கொண்டாரில்லை. நால்வர் விட்டுணு கடவுளல்ல என்று சொற்றதும், ஆழ்வார் அரன் கடவுளல்ல என்று சொற்றதும் மும்மூர்த்திகளுள் விளங்கும் விட்டுணுவையும் அரனையுமெனக் கொள்க. அயன் அரி அரன் என்னும் மூவரும் நான்காவது பொருளாம் ஆண்டவன் அருட்சத்தி வழி நின்று படைத்தளித் தழிக்குந் தொழிலாற்றலான்* அவர்

*"படைத்தளித் தழிக்கமும் மூர்த்திகளாயினை" என்று திருஞான சம்பந்த சுவாமிகளும், "காலமும் நாளகள் ஊழிபடையாமுன் ஏகஉருவாகி மூவருருவில் சாலவுமாகி" என்று அப்பர் சுவாமிகளும், "ஒருருவின் மூவருமே யென்ன நின்ற இமையவர்தந் திருவுருவே றெண்ணும்

செயலைக் கடவுள் செயலாகக் கூறுதல் நம்மனோர் மரபு. அதனால் மும்மூர்த்திகள் கூறாக உலகிடைத் தோன்றி உலகை யோம்பும் பெரியோர்களைக் கடவுள் கூறாக நம்மவர்களிற் சிலர் வழிபட்டு வருவதுந் தொன்றுதொட்ட வழக்கம். விரிக்கிற் பெருகும். இது நிற்க.

சைவசித்தாந்தம் முப்பொருளுண்மை கூறினும், பொருளொன்றே என்னுங் கொள்கையையும், வேறு வேறு என்னுங் கொள்கையையும் தன்னகத்தே தாங்கி நிற்றலால் எக்கொள்கையாரிடத்தும் மாறுபட்டு நிற்பதாகாது. கடவுள் உலகுயிரோடு நீக்கமறக் கலந்து நிற்றலானும், கடவுளுக்கு வேறாகப் பிரிந்து உலகும் உயிரும் நிற்றலின்மையானும் கலப்பால் ஒற்றுமையும் பொருட்டன்மையால் வேற்றுமையுஞ் சைவசித்தாந்தந் தெரிவிக்கிறது. பொருளொன்றே என்று கூறுவோரை நோக்கி, "ஆம் கலப்பால் ஒன்றே" என்றும், பொருள் வேறுவேறு என்போரை நோக்கி " ஆம் பொருட்டன்மையால் வேறு

---

போது-ஒருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற - மூவுருவுங் கண்டபோ தொன்றாஞ்சோதி முகிலுருவம் எம்மடிகள் உருவந்தானே" என்று திருமங்கையாழ்வாரும் ஆண்டவன் மூவர் வழித் தொழில் நிகழ்த்தலை விளங்க உரைத்திருப்பது நோக்குக.

வேறு" என்றும் இருவரையும் தன்னுடன் சேர்த்துப் பிணக்கொழிக்கும் பெருந்தகைமை வாய்ந்தது சைவ சித்தாந்தம். கலப்பால் ஒற்றுமையும் பொருட்டன்மையால் வேற்றுமையு முடைய ஒரு நிலையையே சைவசித்தாந்தம் அத்துவிதமென்று சொல்கிறது.

" உலகேலாமாகி வேறாய் உடனுமாய் "

என்று மெய்கண்ட சாத்திரம் முழங்குகிறது. அத்துவித மென்னுஞ் சொல்லிலுள்ள அகரத்துக்கு மெய்கண்டார் அன்மைப் பொருள் கொண்டார். எண்ணுப் பெயர் முன்வரும் அகரம் அன்மைப் பொருள்குறிக்கு மென்பது அவர் கருத்து. ஒன்றென்பதற்கு ஏகமென்னுஞ் சொல்லிருப்ப, இரண்டைக் குறிக்கத் துவிதமென்னுஞ் சொல்லிருப்ப வேதாந்தம் இரண்டையும் விடுத்து அத்துவிதமென்று அறைவதன் நோக்கமென்னை? ஒன்று இரண்டு என்று சொல்லமுடியாத நிலையை அத்வைதம் என்று வேதாந்தங் கூறியிருக்கிறது. இவ்வுண்மை கண்டமையான்,

" பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்டநாதன் அருள் மேவுநாள் எந்நாளோ "

என்று தாயுமானாரும், நமது சைவ சித்தாந்தத் தவப்பொருளைப் போற்றினர். ஆகவே சைவ சித்தாந்தங் கூறும் முப்பொருளும், அவைகளின்

கலப்பும் பல சமயத்தார் கருத்துக்குப் பெரிதும் அரண்செய்தல் காண்க.

எல்லார்க்கும் பொதுவாக உள்ள வேதாந்த உண்மை யிஃதென ஒவ்வோர் அறிஞர் கூறிய வாறு மெய்கண்டாருந் தாங்கண்ட வேதாந்த உண்மையை உலகிற்கு அறிவுறுத்தினர். அவ் வுண்மை சித்தாந்தம் சுத்தாத்துவிதம் முதலிய பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

ஏகான்ம வாதமே வேதாந்தமெனக் கூறுவோர்க் கும் இச்சித்தாந்தக் கொள்கையுடையார்க்கும் என்றும் போர் நிகழ்ந்து வருவதை யான் அறி வேன். வேதாந்தமென்பது ஒரு கூட்டத்தார் உடைமையன்று. வேதாந்தம் என் பொருள் என் பொருள் என்று போரிடுவோர்க்கு அஃதென் றும் பொருளாதல் அரிது; அரிது. என்னை? வேதாந்தம் வாதப்போர்களைக் கடந்தொளிர்வதா கலின் என்க. வேதாந்தமாதல் சித்தாந்தமாதல் போரிடுமாறு யாண்டுக் கூறுகிறது? உண்மை குறிக்கொண்டு ஆராய்வோர்க்கு வேதாந்த சித் தாந்த வேற்றுமை தோன்றவே தோன்றாது.

வேதாந்தமென்பது யாது? வேட்கையற்றவிட மன்றோ வேதாந்தம்? வேட்கையறுத்தல் என்பது எல்லாவற்றையுந் துறந்து காட்டுக்குப் போய் மூக்கைப் பிடித்திருப்பதன்று; தன்னல மறுத்து

மற்றவர் பொருட்டுக் கைம்மாறு கருதாது தொண்டு செய்வது.

" வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே"

எனவரூஉந் திருமூலர் திருவாக்கை யோர்க. வேட்கை தணிந்தவிடம் வேதாந்தமெனவேதாந்த இயல்பு கூறிய அப்பெரியாரே மீண்டும்,

" சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்"

என்றும்,

" வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை"

என்றும்,

" சித்தாந்தத் தேசிவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்பர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் சிவனையே"

என்றும்,

ஓதியிருத்தலை நோக்குழி வேதாந்தமே சித்தாந்தமென்பதும், அஃதே இஃதென்பதுஞ் செவ்விதின் விளங்குதல் காண்க.

இத்திருமூலர் மரபு வழிவந்த மௌனகுரு பால் ஞானோபதேசம் பெற்ற சமரசஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகளும்,

" * * * தரணிமிசை லோகாயதன், சமயநடை சாராமல்
வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி
மன்னவொரு சொற்கொண் டேணைத்தடுத்தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே, மந்த்ரகுரு வேயோக
தந்த்ரகுரு வேமூலன் மரபில்வரு மௌனகுருவே "

எனவும்,

' வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே "

எனவும்,

" வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே "

எனவும்,

" போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே "

எனவும்,

" முத்தாந்த வீதி முளரிதொழும் அன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே "

எனவும்,

வேதாந்த சித்தாந்த வேற்றுமையின்மை விளக்கி யிருத்தல் காண்க. இவ்வுண்மை கண்ட அத்தாயுமான சுவாமிகளே,

" பொய்கண்டார் காணப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ "

என்று மெய்கண்டாரைப் போற்றியதை முன்னர்

எடுத்துக் காட்டியுள்ளேன். இதனால் மெய்கண்டார் சித்தாந்த மெது என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை.

" வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத்
திறனிங்குத் தெரிக்கலுற்றாம் "

என்னுந் திருவாக்கும் முன்னர் எடுத்துக் காட்டப்பட்டதே. ஆகவே, மெய்கண்டார் சொற்ற சித்தாந்தம் வேதாந்தத்துக்கு முரண்படுவதன்று என்பது கவனிக்கற்பாலது.

ஒருவர் கருத்தை மற்றொருவர் உணராமல் கிடப்பதே விவாதத்துக்கு இடமுண்டாக்குகிறது. அன்பர்கள் வேதாந்த நூல்களையும் சித்தாந்த நூல்களையும் விருப்பு வெறுப்பின்றி முறையாகப் பயில்வார்களாயின் எந்நூலினும் மாறுகோள் காணமாட்டார்களென்பது ஒருதலை. வேதாந்த நூல்களைப் பயில்வோர் அந்நூல்களில் அபிமானமும், சித்தாந்த நூல்களைப் பயில்வோர் அந்த நூல்களில் அபிமானமுங் கொள்வதால் வேற்றுமை யுணர்வு தோன்றுகிறது. இரண்டிற்கும் வேற்றுமை யுண்டு உண்டு என்று சிலர் சில நூல்கள் எழுதிவிட்டுச் சென்றனர். அன்னார் குறிப்பிட்ட வேற்றுமையன்றி உண்மையில் வேற்றுமை யிருப்பதாகத் தோன்றவில்லை. பாழும் அபிமானம் மக்களைப் பாழ்படுத்துகிறது.

வேதாந்தம் வேதாந்தமென்று சிலர் சில நூல்களைப் பயின்று தாம் பெற்ற கலைஞானங் கொண்டு, "அது பொய் ; இது பொய் ; எல்லாம் பிரமம்" என்று உலகத்திற்குப் போதிப்பதால் விளையுந் தீமையை என்னென்று கூறுவேன் ? இப் போதனையால் உலகில் நாத்திக உணர்வுபரவித் தீயொழுக்கஞ் செறியுமென்பதில் ஐயமில்லை. வேட்கையற்ற விடத்தில் மிளிரவேண்டிய வேதாந்தம் இந்நாளில் ஏட்டில் காவித் துணியில் பேச்சில் மொட்டைத் தலையில் மிளிர்கிறது. பற்று பற்று என்று எல்லாவற்றையும் வெறுக்கும் ஒரு வித சோம்பேறி வேதாந்தமும் நமது தமிழ் நாட்டில் பரவி யிருக்கிறது. உண்மை வேதாந்தம் எதையும் பொய்யென்று கூறுது ; எதையும் பற்றெனத் தள்ளாது. எல்லாங் கடவுள் மயமாயிருக்கும்போது அதன்கண் பொய்யேது ? எல்லாமஃ தாயிருக்கும்போது எதைப் பற்றென வெறுப்பது ? 'எல்லாம் மெய் எதையும் வெறுத்தலாகாது' என்று அறிவுறுத்துவது எதுவோ அதுவே மக்கள் வாழ்வைத் தூய்மை செய்யவல்ல செய்கை வேதாந்தமாகும்.

'எந்த வேதாந்த சித்தாந்த ஞானநூலை எடுத்தாலும் அஃது உலகைத் துறக்குமாறு - ஆசையை யறுசகுமாறு அறிவுறுத்துகிறதே' என்று சிலர் வினவலாம் ; சிலர் ஐயுறலாம். ஞானநூல்கள் உலக

ஆசையைத் துறக்குமாறு போதிப்பது உண்மையே. உலகிடைவாழும்மனிதன் உலகைவிடுத்து எங்கே போவது? காட்டுக்குச் சென்று மூச்சைப் பிடித்து ஆகாயத்திற் பறப்பதா? அல்லது கல் மரம்போல் கிடப்பதா? என் செய்வது? உலகைத் துறப்பது என்றால் யான் எனது என்ற பற்றையறுப்பதாகும். உலகை ஆண்டவனாகக் காணாதவனுக்கு யான் எனதுஎன்னும் பற்றுக்களுண்டு. அப்பற்றால் அவனுக்குத் துக்கம் வளர்ந்துகொண்டு போகும். ஒருவன் மனைவியைஏன் துறத்தல் வேண்டும்? மைந்தரை ஏன் வெறுத்தல் வேண்டும்? அவர்கள் உள்ளத்தில் ஆண்டவனில்லையோ? கடவுள் வீற்றிருக்குங் கோயில்களையா வெறுப்பது? கடவுள் காட்சி நல்குங் கோயில் என்ற எண்ணமின்றி என்புதோல் போர்த்த உடலைப் பொருளாக்கொள்பவனுக்கு எல்லாந் துன்பமாகவே தோன்றும். என்புதோல் போர்த்த உடல் என்ற எண்ணத்தை விடுப்பதே துறப்பதாகும்; ஆசை யறுப்பதாகும். எல்லாவற்றிலும் ஆண்டவன் நீக்கமற நிறைந்திருக்கும்போது எதை வெறுப்பது? எதைத் துறப்பது? கடவுள் எப்பொருளிலில்லை? எல்லாம் அவன் வடிவம்; எல்லாம் அவன் உடைமை; எல்லாம் அவன் செயல். "எல்லாம் அவன்" என்னும் ஞானமின்றி உலகாயத வழிநின்று உலக இன்பத்தைத்துய்க்கின்றவனுக்கும், உலகம் பொல்

லாது என்று காட்டுக்குச் சென்று பட்டினிகிடந்து உடலை வருத்தி வருத்திப் புலன்களைக்கொன்று உணர்வைக் கெடுத்துக் கொள்பவனுக்கும் என்ன வேற்றுமை? இருவரும் ஆண்டவன் இன்பப் பேற்றையிழந்தவரே யாவார். எல்லாங் கடவுளெனக்கொண்டு உயிர்களை வழிபடுவோனுக்கு இவ்வுலகமே கைலாயமாகும். முற்றத் துறந்த முனிவர் பெருமானாராகிய பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில், (பதினொராந்திரு முறையில் சேர்ந்தது) உலகாயத முறையில் உலகைவெறுத்தலை மறுத்து, எல்லாம் ஆண்டவனாகக் கொண்டுங் கண்டும் இன்பந்துய்த்தலைப் போற்றியிருக்கிறார். அப்பொன்னுரை வருமாறு:—

"மலர்தலை யுலகத்துப் பலப்பல மாக்கள்-மக்களை மனைவினைய யொக்கலை யொரீஇ - மனையும் பிறவுந் துறந்து நினைவருங் - காடு மலையும் புக்குக் கோடையிற் - கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி - ஐவகை நெருப்பினழுவத்து நின்று - மாரி நாளிலும் வார்பனி நாளிலும் நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ் - சடையைப் புனைந்துந் தலையைப் பறித்தும் - உடையைத் துறந்து முண்ணா துழன்றுங் - காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும் - வாயுவும் நீரும் வந்தன வருந்தியுங் - களரி லுங் கல்லிலுங் கண்படைகொண்டுந் - தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவர் - அம்மை முத்தி யடைவதற் காகத்-தம்மைத் தாமே சாலவு மொறுப்பர் - ஈங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம் - பழுதின் றுயர்ந்த எழுநிலை மாடத்துஞ் செந்தா

துதிர்ந்த நந்தன வனத்தும் - தென்ற லியங்கு முன்றில
கத்தும் - தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும் - பூவிரி
தரங்க வாவிக் கரையிலும் - மயிற்பெடை யாலக் குயிற்றிய
குன்றிலும் - வேண்டுழி வேண்டுழி யாண்டாண் டிட்ட
மருப்பி னியன்ற வாளரி சுமந்த விருப்புறு கட்டின்
மிமிசைப் படுத்த - ஐவகை யமளி யணைமேற் பொங்
கத் - தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப் - பட்டி னுட்
பெய்த பதநுண் பஞ்சி - னெட்டணை யருகாக் கொட்டைகள்
பரப்பிப் - பாயின் மீது பரிபுர மிழற்றச் - சாயலன் னத்தின்
றளர்நடைப் பயிற்றி - * * * * அஞ்சொன் மடந்தைய
ராகந் தோய்ந்துஞ் சின்னம் பரப்பிய பொன்னின்
கலத்தின் - அறுசுவை யடிசில் வறிதினி தருந்தா தாடி
னர்க் கென்றும் பாடினர்க் கென்றும் - வாடினர்க் கென்
றும் வரையாது கொடுத்தும் - பூசுவன பூசியும் புனைவன
புனைந்தும் - தூசு நல்லன தொடையிற் சேர்த்தியும் - ஐந்து
புலன்களு மார வார்ந்து - மைந்தரு மொக்கலு மகிழ்வன
மகிழ்ந்து-இவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை - மந்திர
வெழுத் தைந்தும் வாயிடை மறவாது - சிந்தை நின்வழி
செலுத்தலி னந்த - முத்தியு மிழந்தில முதல்வ வத்திற
நின்னது பெருமை யன்றே ''

இதுவே ரவீந்தரநாதர் அறிவுறுத்திவரும் அன்புச் சமயமாகும். விவேகாநந்தர் லண்டனில் நிகழ்த்திய "எல்லாவற்றிலுங் கடவுள்" (God in Everything) என்னுஞ் சொற்பொழிவும் இக் கருத்துக்கு அரண் செய்வதாகும்.

சுவாமி விவேகாநந்தர் சொற்பொழிவுகளை நன் மனங் கொண்டு வாசிப்போர் சோம்பேறி வேதாந் தம் திண்ணை வேதாந்தம் முதலிய போலி வட்டு வேதாந்தங்களை விடுத்து, வீறுகொண்டு எப்பற்று மின்றி உயிர்களுக்கு ஊழியஞ்செய்யப் புறப்படு வர் என்பது திண்ணம். விவேகானந்தர் சோம்ப லெனுந் திண்ணை வேதாந்தத்தைப் போதித்தா ரில்லை. அவர் உபநிடதக் கருத்துக்களின் நுட் பத்தையே உலகுக் குரைத்தார். அவ்வேதாந்த வீரர்* "எல்லாவற்றையும் இறைவனாகக் காண்க; தொண்டு செய்க" எனறும், "அஞ்சா நெஞ்சு டைய ஆண்டகை மக்கள் தேவை. நமக்கு இரத் தத்தில் வீரச்செறிவும் நரம்புகளில் உரமும் இரும்பனைய தசைக்கட்டும், எஃகனைய நரம்புக ளுந் தேவை * * *" என்றும், "நம்மைச் சுற்றிலு முள்ள எல்லாவற்றையும் எல்லாரையுங் கடவுளா கக் கண்டு வழிபடுங்கள்; மனிதர்களும், ஜெந்துக் களும் நம்முடைய கடவுளர்கள். நாம் முதலாவது வணங்க வேண்டிய கடவுளர் நம்முடைய

---

"செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையு-மைய நின்னதென் றெண்ணுமறி வின்றி-வெய்ய காம வெகுளி மயக்கமாம்-பொய்யி லேசுழன் றேனென்ன புன்மையே"
"வடிவெலா நின் வடிவென வாழ்த்திடாக் - கடியனேனு முன் காரணங் காண்பனோ - நெடியவானென வெங்கு நிறைந்தொளி - ரடிகளேயர சேயரு ளத்தனே."—தா-ர்.

தேசத்தாரே யாவர். * * * " என்றும் பேசியிருக்கிறார். பலவிடங்களில் உடலை ஓம்புமாறும், வீரர்களாக உலாவி மற்றவர்கட்குக் கிழமை பூண்டு வாழுமாறும் அவர் போதித்திருக்கிறார். உலகுக்குப் பயன்தரத்தக்க இத்தகைவேதாந்தமே நமக்கு வேண்டும். இச்செய்கை வேதாந்தத்துக்குத் துவிதம் அத்துவிதம் என்னும் இரண்டும் இன்றியமையாதன. உண்மை வேதாந்தம் ஒன்றைவிட்டு ஒன்றைத் தள்ளாது. துவைதத்தைக் குறைகூறும் வேதாந்தம் வேதாந்தமாகாது.

மெய்கண்டார் துவித வழி அத்துவித உண்மையை அறிவுறுத்தியிருத்தலால் அவர் போதனை உலகைச் செம்மை நெறியில் நடாத்தும் இயல்பினதாய்ப் பொலிகிறது.

" வேதமுட னுகம புராணஇதி காசமுதல்
  வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்கான அத்துவித துவிதமார்க் கத்தையே
  விரிவா யெடுத் துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
  உண்டுபண் ணு ஞான மாகும் "

என்று தாயுமான சுவாமிகள் அருளிச் செய்துள்ள அநுபவ மொழிகளை அன்பர்கள் கருத்தூன்றிக் கவனிப்பார்களாக. துவித வழிபாடே அத்துவித ஞானத்தை உண்டு பண்ணுவதாகும். வெறும் அத்துவிதம் வாயால் பேசுவது வீண் பேச்சே

யாகும். வேதவேதாந்தம் துவிதம் அத்துவித மென்னு மிரண்டையும் போதிப்பதன் நுட்பத்தை ஆராயல் வேண்டும். உலகிற்குத் துவிதம் மிக இன்றியமையாதது. இக்கருத்துப் பற்றியே மெய்ஞ்ஞானச் செல்வராய தாயுமானார் ஓதரிய துவிதமென்றும், அதுவே அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞான மென்றும் உலகை நோக்கி அறைகிறார். ஆதலால் * வேத வேதாந்தம் முறையிடும் துவிதத்தையுங் கொள்ளல்வேண்டும்; அத்துவிதத்தையுங் கொள்ளல்வேண்டும். ஒன்றைக்கொண்டு மற்றொன்றைத் தள்ளுதல் வேத வேதாந்தக் கொள்கைக்கு மாறுபடுவதாகும். மெய்கண்டார் இரண்டையுங் கொள்கிறார்.

---

* " This is what I mean by the word Vedanta that it covers the ground of Dualism, of Qualified Monism and Advaitism."

"Therefore, I now find, in the light of this Man's life, that the Dualist and the Advaitist need not fight each other; each has a place, and a great place in the national life; the Dualist must remain, for he is as much part and parcel of the national religious life as the Advaitist; one cannot exist without the other."

" It is foolish to attempt to prove that the whole of the Vedas is Dualistic. It is equally foolish to attempt to prove that the whole of the Vedas is non-Dualistic. They are Dualistic and non-Dualistic both. We understand them better to-day in the light of newer ideas."

—*Swami Vivekananda.*

உலகம் கடவுளா உயிர் கடவுளா என்ற கடாக்களுக்கு மெய்கண்ட சாத்திரம் ஆம் அல்ல என்று விடையிறுக்கும். உலகிலும் உயிர்களிலும் ஆண்டவன் நீக்கமற நிறைந்திருத்தலால் ஆம் அவை (கலப்பால்) கடவுள் என்றும், உலகம் தோற்ற நிலை இறுதி என்னும் விகாரமுடைய சடமாகலானும், உயிர்க்கு அறியாமை உண்மையானும் அவை (பொருளால்) கடவுளல்ல என்றும் அந்நூல் விரித்துக் கூறும்.

கடவுள், உலகு உயிர்களில் எவ்வாறு நீக்கமற நிறைந்திருக்கக் கூடுமென்றும், இருபொருள் ஓரிடத்தில் எவ்வாறு ஒன்றி நிலவுமென்றும், ஒன்றுள்ள விடத்தில் மற்றொன்றிரா தென்றுஞ் சில அறிஞர் கருதுவர். இருபொருள் ஓரிடத்திலிரா என்னும் நியாயம் உருவப் பொருளுக்கன்றி அருவப் பொருளுக்கில்லை. எள்ளுங் கொள்ளும் ஒரே யிடத்தி லிருப்புப் பெறுதல் அரிது. என்னை? இரண்டும் உருவப்பொருளாகலான். இந்நியாயத்தைக் கொணர்ந்து அருவப் பொருளில் நுழைத்தலாகாது. ஆகாயம் என்னும் சூக்குமபூதம் காற்று, தீ, புனல், மண் ஆகிய நான்கு தூலபூதங்களிடை நீக்கமற நிறைந்திருக்க வில்லையோ? இவ்விடத்தில் இரண்டு பொருள் ஓரிடத்தில் ஒன்றியிரா என்னும் நியாயம் பேசலாமோ? ஆகாயம் வடிவில்லாப்பொருள்; அஃது

எங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் இயல்புடையது. சடத்தன்மையுடைய சூக்கும பூதத்துக்கே நீக்கமற நிறைந்து நிற்கும் இயல்பிருக்கும்போது, சித் சொரூபமாகிய சிவம் உலகுயிர்களில் நீக்கமற நிறைந்திருக்கும் இயல்புடையதாகாதோ?

மரத்தால் செய்யப்பட்ட யானையை இருவர் உற்றுநோக்கி யாராய்வதாக வைத்துக்கொள்வோம். ஒருவன் மரத்தியல்பை நன்கு உணர்ந்தவன்; மற்றொருவன் யானைவடிவ இயல்பைச் செவ்வனே உணர்ந்தவன். முன்னவன் மரயானையைப் பார்த்து "இது நல்ல மரமன்று; விரைவில் உளுத்துப்போகும்" என்று சொல்கிறான்; பின்னவன் "இக்காது யானைக்காது போலில்லை. இதை ஒழுங்குபடுத்தல் வேண்டும்" என்று சொல்கிறான். முன்னவன் உள்ளத்தில் மரமுண்மையும் யானையின்மையும், பின்னவன் உள்ளத்தில் யானையுண்மையும் மரமின்மையும் விளங்குவது ஓர்க. இவ்வண்ணமே அஞ்ஞானி உலகை நோக்கும் பொழுது உலகும், மெய்ஞ்ஞானி அதைப்பார்க்கும் பொழுது சிவமுந் தோன்றும். சிவத்தோற்றமுடையார்க்கு உலகில்லை; இத்தோற்ற முடையார்க்கு அஃதில்லை.

* "பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணந் - தன்னை
மறைத்தது தன்கர ணங்களாந் - தன்னின் மறைந்தது

சிவந் தோன்றும்போது உலகமிருக்கிறதா இல்லையா என்ற வாதம் ஏகான்ம வாதிகட்குஞ் சித்தாந்திகட்கும் நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது. அந்நிலையில் ஏகான்ம வாதிகள் கூறுகிறபடி உலகம் பொய்யாகப் பொன்றுகிறதோ அல்லது சித்தாந்திகள் சொல்லுமாறு இருந்து தோன்றுமலிருக்கிறதோ - அதைப்பற்றி என் போன்றோர் ஏன் மன்றாடல் வேண்டும்? சிவந்தோன்றப் பெறுவோர்க்கு உலகந்தோன்று தென்பதொன்றே கவனிக்கற்பாற்று. விவகார நிலையைப்பற்றி ஏகான்ம வாதிகட்கும் சித்தாந்திகட்கும் எவ்வித வாதமுமில்லை. விவகார உலகில் வாழும் இருவரும் போரின்றி உயிர்கள் வழிபாட்டைச் செய்து வருவாராக. வழிபாட்டில் கருத்துப் பதிந்தால் வாதத்துக்கிடமேது? உயிர்களைச் சிவமாக வழிபடுந் தொண்டிற்புகாது ஏடுகளைக் கட்டியழுவோர் அழுக. ஏடுகளைப் புரட்டிப் புரட்டி வாதஞ் செய்வோரைப் பார்க்கினும், வழிபாட்டிற் கருத்துடையாரே விரைவில் உண்மை நிலை காண்போராவர். மெய் கண்டார் வழிபாட்டிற்குரிய உண்மை ஞானம்

---

தன்கரணங்களே.'' ''மரத்தை மறைத்தது மாமத யானை - மரத்தின் மறைந்தது மாமத யானை - பரத்தை மறைத்தது பார்முதற் பூதம் - பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.''—திருமூலர்.

போதித்தலால் அவர் போதனை பணியில் விருப்புடையோர்க்கு ஏற்புடைத்தாகும்.

வேதாந்தம் அறிவுறுத்தும் பொருள் ஒன்று இரண்டா என்றவாதம் உலகில் தோன்றி உலகை இடர்படுத்தி வந்தநாளில் மெய்கண்டார்தோன்றி வேதாந்த உண்மை இஃதென உலகுக்குச் சித்தாந்தப்படுத்திக் காட்டினர். உபநிடதங்களாய வேதாந்தம் எவ்வாறு துவிதம் ஏகம் அத்துவிதம என்னும் மூன்றற்கு மிடந்தருகிறதோ அவ்வாறே மெய்கண்டார் போதனையும் அம்மூன்றற்கும் இடந்தந்து நிற்பது கவனிக்கத் தக்கது. மெய்கண்டார் அருளுரை சமரச நாட்டமுடைய எவர்க்கும், வழிபாட்டில் விருப்புடைய எவர்க்கும், உண்மைகாணும் நோக்குடைய எவர்க்கும் உரியது என்பது அவர் வாய்மொழியை ஆராய்வோர்க்கு இனிது புலனாகும்.

## சமரச இயல்பு

இதுகாறுஞ் சைவசித்தாந்தம் சமயநோக்கினும், தத்துவ நிலையினும், பொருளுண்மையினும், பிறவற்றினும் மற்றச்சமயங்களோடு மாறுபடாது, பெரிதும் முற்றும், சிறிது ஒரோ வழியும் ஒத்துப்போகுஞ் சமரச இயல்புடையதென்பதைப் பற்றி எனது சிற்றறிவுக் கெட்டியவாறு சொல்லி வந்தேன். இனி அச் சமரச இயல்புக்குரிய

உயர்ந்தோர் தாழ்ந்தோர்க் குழைத்தல், கைம் மாறற்ற பணி, பிறப்பு வேற்றுமைபாராட்டாமை, எவ்வுயிரையும் தன்னுயிர் போல் பாவித்தல், பாவ மன்னிப்பு முதலிய அறவழிகள் அதன் மாட் டுண்டா என்பதைத் தெரிந்துகொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம். ஒவ்வொன்றைப்பற்றியும் விரித் துரைப்பின் பெருகுமாதலால் சுருங்கச்சொல்லப் புகுகிறேன்.

சைவசித்தாந்தம் உயிர்களை விஞ்ஞானகலரென் றும் பிரளயாகலரென்றும் சகலரென்றும் முக் கூறுபடுத்தி யிருக்கிறது. ஒரு மலமுடையார் விஞ்ஞானகலரென்றும், இருமலமுடையார் பிரள யாகலரென்றும், மும்மலமுடையார் சகலரென் றுஞ் சொல்லப்படுவர். விஞ்ஞானகலர் தமக் குக் கீழ்ப்பட்டுள்ள பிரளயாகலரைத் தந நிலைக்கு உயர்த்தவும், பிரளயாகலர் சகலரைத் தம் பேற்றை யடையுமாறும் முயன்று வரு கிறாரென்று சிவாகமங்கள் செப்புகின்றன. இத னின்றும் நாம் கற்றுக்கொள்ள வேண்டுவ தென்னை ? உயர்ந்தோர் தாழ்ந்தோரை உயர்த்தித் தந்நிலைக்குக் கொணரவேண்டு மென்பதன்றோ ? ஆண்டவன் என்ன செய்கிறான் ? அறியாமைக் கட்டால் பீடிக்கப்பட்டு இருட்டில் கிடக்கும் உயிர் களைத் தன்னிலைக்குயர்த்த அவைகட்கு இவ் வுடலையும், உலகையும், வாழ்வையும் வழங்கித்

துணைசெய்து வருகிறான். இவ்வருட் குணம் அவன் படைப்புக் குட்பட்ட ஒவ்வோருயிரினி டத்து மிருத்தல்வேண்டும். இக்குணமிலலார் கட வுளன்பராகார். பிறர்க்குழைக்கும் பெருமையா ளரே கடவுளிடத்தன்புடையாராவர்.

பிறர்க்குழைக்குங்கால் எவ்வித கைம்மாறுங் கருதாது உழைத்தல்வேண்டும். கைம்மாறு கருதி யுழைப்பது எவ்வுயிரிலும் வீற்றிருக்கும் இறை வனுக்கு அன்பு செலுத்துவதாகாது. இக்கார ணம்பற்றியே நிட்காமியப்பணி நிட்காமியப்பணி என்று சமய நூல்கள் முழங்குகின்றன. சைவ சித்தாந்த வழி இதை உறுதிப்படுத்த எந்நூலையுந் தேடவேண்டுவதில்லை. சைவர்கள் தொழும் நட ராஜமூர்த்தியைச் சிறிது உற்று நோக்குவோம். அம்மூர்த்தி நிட்காமிய கருமத்துக்கே ஓரிலக்கிய மாக விளங்குவது காணலாம். அப்பெருமான் ஓயாது நடம்புரிகிறான். ஒரு நொடிப்பொழுது அவ்வாண்டவன் திருக்கூத்தை நிறுத்துவானா யின், அகிலம் என்ன பாடுபடும்? இவ்வகிலமும் அகிலத்துள்ள உயிர்களு மியங்கித் தங்கடனாற்ற வன்றோ ஆண்டவன் ஓயாது இயங்குகிறான்? வையம் உய்யப் பெருங்கூத்தாடும் பெம்மான் தன் செயற்கருஞ் செயலைக் குறித்து இறுமாப்பெய்துகி றானா? அல்லது ஏதாவது கைம்மாறு கருதுகிறானா? ஒன்றுமில்லை. உயிர்களுய்யவேண்டும் என்னும்

கைம்மாறற்ற பெருங்கருணை யொன்றே கொண்டு எம்பெருமான் ஆடுகிறான். என்ன கருணை? இவனன்றோ அருட்கடல்? கிருபாசமுத்திரம்? இவ்வருள் மூர்த்தியை யடைய உயிர்கள் என் செயல்வேண்டும்? அவனைப்போலவே கருணையால் கைம்மாறு கருதாது பிறர் நலம் நாடித் தொண்டு செய்தல் வேண்டும். கடவுளை அடைதற்குரிய வழிகளுள் சிறந்தவழியிதுவே.

நடராஜன் புரியுந் தாண்டவம் ஆனந்தத் தாண்டவம் என்றுஞ் சொல்லப்படுகிறது. அதன்பொருளென்னை? நிட்காமிய கருமத்தில் ஆனந்தமுண்டு என்பதன்றோ? காமிய கருமம நரகத்துன்பத்தை யன்றோ அளிக்கும்? சைவர்களுக்கு வேறு வீடு பேறு எற்றுக்கு? கைம்மாறு கருதாப் பணியாற்றி இவ்வுலகிலேயே இன்பநுகர்ந்து வாழலாமன்றோ? வீடு பேறுபெற்றுச் செயலின்றிக் கிடப்பதைவிட நிட்காமியப் பணிசெய்து இவ்வுடலையே இன்ப நிலையமாக்கிக் கொள்வது நலம்.

"ஓடும் பொன்னையும் ஒக்கவே நோக்குவார்
கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்னுஞ் சேக்கிழார் பெருமான் சொன்மலரை முடிமீதணிந்து ஆனந்தக் கூத்தாடுவேன்.

பிறர் நலம்நாடிக் கைம்மாறு கருதாது தொண்டு செய்வோர்க்குக் குறுக்கே பிறப்பு வேற்றுமையும் பிற வேற்றுமைகளும் நிற்குமோ? சமரசம் பேசுஞ் சைவசித்தாந்தம் பிறப்பால் சாதி வேற்றுமை பாராட்டுமோ? பாராட்டுமாயின் அது சமயமாகாது. "அன்பே சிவம்" என்னுஞ் சீரிய கொள்கை தாங்கியுள்ள சைவம் பிறப்பு வேற்றுமையை எவ்வாறு பாராட்டக்கூடும்? சைவ சமயாசாரியராகிய அப்பரெம்பெருமான்,

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டு என்செய்வீர்"

என்று குலம் பேசுவோரை நோக்கிக் கேட்கிறார்.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தாற் கன்பராயின்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவு ளாரே"

என்று மற்றுமோரிடத்திலும் அப்பெரியார் பிறப்பு வேற்றுமையை மறுத்திருக்கிறார்.

"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாண்டானை"

என்று மணிவாசகனாருங் கூறிப்போந்தார். பெரிய புராணமென்னும் அன்பு நூலை முற்றமோதிப் பொருள் தேறுவோர்க்குச் சாதி வேற்றுமை தோன்றவே தோன்றாது. சாதிபகை கடியவே அந்நூலெழுந்த தென்றும் நான் கூறுவேன்.

வேறெந்தச் சைவ நூலும் அன்பைக் குலக்கும் பிறப்பு வேற்றுமை பாராட்டியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"படமாடக் கோயில் பரமற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பற்கங் காகா
நடமாடக் கோயில் நம்பற்கொன் றீயின்
படமாடக் கோயில் பரமற்கங் காமே"

என்னுந் திருப்பாட்டில் திருமூலர் நடமாடுங் கோயில்களாகிய உயிர்கள் வழிபாட்டைச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். உயிர்கள் என்றால் எவ்வுயிர்களை? உயர்ந்த சாதி உயிர்களை மாத்திரமா? பொதுவாக நடமாடுங் கோயிலென்றே அப்பெரியார் ஓதியிருக்கிறார். உலகிலுள்ள ஆடுமாடு முதலிய எல்லா உயிர்களையும் உள்ளிட்டே திருமூலர் நடமாடுங் கோயிலென்று அருளிச்செய்தார். நடமாடுங் கோயிலென்று மனிதர்களை மாத்திரங் கொண்டு வேறு பல உயிர்களை விலக்குவதுங் கூடாது. தாவர முள்ளிட்ட எல்லாவுயிரும் என்றே பொருள் கோடல்வேண்டும். தாவரங் களில் எல்லா உயிர்க்குணங்க ளிருப்பதை டாக்டர் போஸ் கண்டு வருகிறார். "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவன் என்று-எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்று சைவசமயநெறி விளக்கமாகக் கூறுகிறது. எவ்வுயிரு மென்றமையான் சைவசமயம் எவ்வுயிரை நீக்கக்கூடும்? தாவர முள்ளிட்ட எல்லா

உயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டு மென்பதே சைவ சித்தாந்தத்தின் கொள்கை. இக் கொள்கையுடைய ஒரு பெருஞ் சமயத்துக்குச் சாதி வேற்றுமை யேது? வேறு வேற்றுமை யேது? சைவரென்று தம்மைச் சொல்லிக்கொள்ளுஞ் சிலர் சாதி வேற்றுமை பாராட்டுவதுண்மை. ஆனால் சைவ சமயத்துக்கு எவ்வேற்றுமையு மில்லை.

எவ்வேற்றுமையும் பாராட்டாது பிறர் நலம் பேணிவாழ்வதே சைவ வாழ்வெனில், அச் சைவம் ஒரு கூட்டத்தார்க்குரியதாகுமோ? சைவம் எல்லார்க்கு முரியது. உயிர்க்கொலையும் புலைப் புசிப்புமில்லா ஒருவன் எச்சமயத்தவனாயினும் அவன் தன்னைச் சைவம் (ன்) என்ற சொல்லால் தனது ஜீவகாருண்ணிய நெறியைத் தெரிவிக்க விரும்புகிறான். சைவம் ஜீவகாருண்யமுள்ள விடத்திலெல்லாமிருப்பது. இவ்வுயர்வு நோக்கியே தாயுமானார்,

"சைவ சமயமே சமயம்"

என்றும்,

"இராஜாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவம்"

என்றுங் கூறி,

"எவ்வுயிர்த்திரளும்உலகிலென்னுயிர்எனக்குழைந்துருகி"

"தம்முயிர்போல் எவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென் று செய்வேன் பராபரமே"

" எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

" கொல்லா விரதங் குவலய மெல்லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவது என்னிச்சை பராபரமே"

" கொல்லா விரதங் கொண்டாரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

" கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்"

எனவரூஉம் மொழிகளான் சைவம் இஃது என்று உலகிற்கு அறிவுறுத்தினர்.

இராமலிங்க சுவாமிகள் சைவம் சமரச நோக்குடைய சன்மார்க்கமெனும் ஜீவகாருண்ய நெறியென்று கடல்மடை திறந்தாற்போல் பொழிந்திருக்கிறார்.

" மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டுங்
கணமுநான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும் அவ் வருத்தந் தவிர்க்குநல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்"

" உருவஎன் னுயிர்தான் உயிர்இரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில்என் னுயிரும் ஒருவும் என்னுளத்
தொருவனே நின்பதத் தாணை"

" இவ்வுலக வழக்கிலே உயிர்இரக் கத்தால்
இலகு கின்றனம் நான் என்செய்வேன்
இரக்கம் என்னுயிர் என்னவே றிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கில்என் னுயிரும்
நீங்கும்நின் திருவுளம் அறியும்"

" கொலை புரிவார் தவிரமற்றை யெல்லாரும்
நினது குலத்தாரே"

" உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும்உடையவர்களெல்லாம்
உறவினத்தா ரல்லர்அவர் புறவினத்தார் "

" தயையுடையா ரெல்லாருஞ் சமரசசன்
மார்க்கஞ் சார்ந்தவரே "

" அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன்
மார்க்கம் அடைந்தவரே "

" எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கி
உப கரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின்
செயலெனவே தெரிந்தேன் "

" எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போல்
எண்ணி யுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்அவர்
உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் "

" கருணை யொன்றே வடிவாகி எவ்வுயிருந் தம்முயிர்போல்
கண்டு ஞானத்
தெருணெறியிற் சுத்தசிவ சன்மார்க்கப் பெருநீதி
செலுத்தா நின்ற
பொருணெறிசற் குணசாந்தப் புண்ணியர் "

இவ்வருளுரைகளால் சைவம் சன்மார்க்கமென்பதும், சன்மார்க்கம் ஜீவகாருண்ய மென்னும் அருணெறி யென்பதும் வெள்ளிடை மலையென விளங்குதல் காண்க. அருள் - கருணை - இரக்கம் - தயையுடையார்க்கெல்லாம் இப்பெருஞ் சமயம் உரியதென்க.

அருளுடையார்பால் பிறர் குற்றம் பொறுத்தலும், குற்றமிழைப்போர் தங்குற்ற முணர்ந்து மனந்திரும்பி வருந்துவரேல் அவரை மன்னிப்பதும் இயல்பாயமைந்திருத்தல் வேண்டும். இவ்வியல்பில்லாதார் அருளாளராகார். சைவ சமயத்துக்கு இவ்வியல்புண்டு. சைவம் போற்றுஞ் சிவம் திருவருளையே தனக்குரிய வடிவாக்கொண்டிருப்பது.

" மாறிலாதமாக் கருணை வெள்ளமே "
என்று தமிழ்மறையும்,

" கற்பனை கடந்த சோதி கருணையே வடிவ மாகி "
என்று பெரிய புராணமும்,

" உருவருள்குணங்களோடும்உணர்வருள்உருவிற்றோன்றுங்
கருமமு மருள்அரன்தன் கரசரணாதி சாங்கம்

சருமருள்உபாங்கமெல்லாந்தானருள் தனக்கோன் றின்றி
அருளுரு வுயிருக் கென்றே ஆக்குவன் அமல னன்றே''

என்று மெய்கண்ட சாத்திரமுங் கூறுதல் காண்க. ஆண்டவன் தடங்கருணைப் பெருங் கடலாயிருத்தலாலன்றோ எவர் எப்பிழை செய்யினும், அவர் அப்பிழை நினைந்து நினைந்து, வருந்தி வருந்திக் கசிந்து கசிந்து உருகும்போது அவரை மன்னிக்கிறான்? பாவமன்னிப்புத் தம் மதத்திற்கே யுரியதென்றும், தம் மதமே பாவிகளை "ரட்சிக்குங்" கொள்கையுடையதென்றும், ஏனைய சமயங்கள் புண்ணியர்களுக்குப் பேறு வழங்குவன வென்றும் கிறித்துவப் பாதிரிகள் பேசுவது வழக்கம். திருவிளையாடற் புராணத்துள்ள மாபாதகந்தீர்த்த படலத்தின் உள்ளுறையை யோர்ந்தால் சிவபெருமான் எத்தகைப் பாவத்தை மன்னித்தாரென்பது நனிவிளங்கும். பாவங் குறித்து மனந் திரும்பி வருந்தாதாரைப்பற்றிப் பேச்சேயில்லை. அவர் வினை அவரைத் துன்புறுத்திக்கொண்டேயிருக்கும். தாம் நிகழ்த்திய பாவங் கருதி வருந்தி வருந்தி மனந்திரும்பி ஆண்டவனை நோக்கி இடையறாது அறிக்கை செய்வோரைப் பற்றியே ஈங்கு நான் குறிப்பிட்டுப் பேசுகிறேன்.

கர்மம் பிராரத்த சஞ்சித ஆகாமியங்களாகப் பிரிந்து நின்று தன் கடனாற்றி வருகிறதெனச் சாத்திரங்கள் சொல்வதன் பொருளென்னை என்று

சிலர் வினவலாம். மனிதன் அறியாமையால் பாவச் செயல் புரியும் சீரன் என்பதை எவரும் மறுக்கமாட்டார். மன உணர்வுடைய மனிதன் பாவத்தினின்றும் பிழைத்தலரிது. பாவம் பெருகிப் பெருகிப் பிறவித்துன்பத்தில் அவனை அழுத்திவருமாயின், அவன் உய்வது எந்த நாள்? அவனை உய்விக்குநெறியே கடவுள் நெறியாகும். பாவவினையிழைக்கும் மகன் தன்வினையுணர்ந்து மனம் பதைத்துத் தந்தையாம் ஆண்டவனை நோக்கிக் கதறிக்கதறி அழுவானாயின், அவன் வினை நசிக்கும். மனந்திரும்பல், குற்றமுணர்ந்து வருந்தல், ஆண்டவனை நோக்கி முறையிடல் முதலியன எளியன அல்ல. மிக அரியன; மிக அரியன. இவ்வுண்மை தேறுதார் ஆற்றிய வினையை அனுபவித்தே தீரல்வேண்டுமென்று சொல்வர். குற்றத்தையுணர்ந்து வருந்துவதினுஞ் சிறந்த அனுபவம் பிறிதில்லை. வருந்தும் வேளையில் இரக்கமுடைய இறைவன் வாளா கிடப்பனோ? இரான்; இரான். அவன் திருவருளைப் பொழிகிறான். விரிப்பிற் பெருகும்.

"தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே"

எனவரூஉந் திருவாக்கு ஈண்டுக் கருதற்பாற்று.

சைவ சமயம் பாவிகளைக் காப்பதைத் தனக் குரிய கொள்கையாகக் கொண்டிருக்கிறது. சைவம் எவனையும் வேண்டாமென்று தள்ளாது. முள் ளுச் செடிக்கு முத்தி யுதவிய சைவம் - பன்றிக் குட்டிக்குப் பால்கொடுத்த சைவம் - எவ்வுயிரை விலக்கும்?

"இருப்பு நெஞ்ச வஞ்சனேனை ஆண்டுகொண்ட
நின்னதாள்"

"யானே பொய் என்னெஞ்சும் பொய் என்னன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதாலுன்னைப் பெறலாமே"

"இல்லை நின்கழற் கன்பதென்கணே
ஏலுமேலு நற்குழலி பங்கனே"

"கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற் கன்பனாக்கினாய்
எல்லையில்லை நின்கருணை"

"கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை"

"ஏசினும் யானுன்னை யேத்தினும்
என்பிழைக்கே குழைந்து
வேசறு வேனை விடுதிகண்டாய்"

"வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்"

" பேயேனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை "

" கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக்
கருணையினால் நிற்பானை "

" வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை
நின்பெருமையினால் பொறுப்பவனே "

" வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே "

" அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ யளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரிவாயே "

" பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே "

" இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என்
என்புருக்கிக் கரும்புதரு சுவை எனக்குக்காட்டினை "

எனவரூஉம் மணிவாசகனார் கல்லையுங் கரைக்கும் அமுத மொழிகளில் சிவபெருமான் அருட்பெருக்கும், மக்கள் பிழைபடுந் தன்மையும், அப்பிழையுணர்ந்து வருந்தலும், அப்பிழையை ஆண்டவன் தன்னருளால் களைதலும் பிறவுங்காண்க.

அருள்வடிவினராகிய சிவபெருமான், மக்கள் அறியாமையால் பிழை நிகழ்த்திப் பின்னர் அது குறித்து வருந்தித் தம்மை வேண்டுவாராயின், அவர் பிழை பொறுத்தாண்டு அருள்புரிந்த வர

லாறுகள் பல. இந்நாளில் உலகம் போற்றும் பெரியாரும், மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்த அருணெறியோம்பிவரும் அருளாளரும், திருநீல கண்ட நாயனாரும் மெய்ப்பொருள் நாயனாரும் மீண்டும் ஓருருக்கொடு ஈண்டுப் போந்தாலென நமது நாட்டிடை வாழ்பவருமாகிய காந்தியடிகள் தம் முள்ளிட்டாருடன் நாடோறுங் காலைப்போழ்தில் சபர்மதி நதிக்கரையில், சத்தியாக்கிரக ஆச்சிரமத்தில் பாவமன்னிப்புக் குறித்து, அருட்பெருங் கடவுளாகிய சிவபரஞ்சுடரை வழுத்தி வருவதுங் கவனிக்கத்தக்கது. இவ்வுண்மை மகாத்மாகாந்தி கோஹத் குழப்பத்தை முன்னிட்டுத் தில்லியில் உண்ணாவிரதம் பூண்டு தவங்கிடந்த போது (25-9-24) "யங் இந்தியா" பத்திரிகை வாயிலாக உலகிற்கு அறிவுறுத்தினார். அவர் மெய்யுரை வருமாறு :—

["The news of Kohat set the smouldering mass aflame. Something had got to be done. I passed two nights in restlessness and pain. On Wednesday I knew the remedy. I must do penance. In the Satyagrahashram at the time of morning prayer we ask **Shiva, God of Mercy**, to forgive our sins knowingly or unknowingly committed. My penance is the prayer of a bleeding heart for forgiveness for sins unwittingly committed."]

"கோஹத் செய்தி எனது உள்ளத்தில் அனல் மூட்டிற்று. ஏதாயினுஞ் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. இரண்டு நாளிரவு அமைதியின்றியும் நோயோடும் கழித்தேன். புதன்கிழமை மருந்து கண்டேன். நான் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். சத்தியாக்கிரக ஆசிரமத்தில் காலை ஜெபத்தில், தெரிந்தோதெரியாமலோ செய்யப்படும் எங்கள் பாவங்களை மன்னிக்குமாறு கருணைக் கடவுளாகிய சிவபரம்பொருளை நாங்கள் வேண்டுகிறோம். அறியாமற் செய்த பாவ மன்னிப்புக்குரிய பிராயச்சித்தம் செந்நீர் பொங்கும் எனது இதயத்தினின்றுமெழும் ஜெபமேயாகும்."

சிவபரம்பொருள் அருட்பெருங் கடவுள் என்றும், அன்றாடம் தெரிந்தோ தெரியாமலோ ஆற்றும் பாவங்களைக் குறித்து முறையிடுதற்குரிய இடம் அப்பெருமான் திருவடி என்றும் மகாத்மா காந்தி உலகிற்கு அறிவுறுத்துகிறாரெனில், அருண்மூர்த்தியாகிய சங்கரனைப்பற்றி யான் என்ன கூறவல்லேன்? பாவமன்னிப்புச் சைவ சமயத்திலிருப்பதைச் சைவ நன்மக்கள் உணர்ந்து பிறர் குற்றம் பாராட்டல் புறங்கூறல் முதலிய தீக்குணங்களை விடுத்துச் சிவத்தொண்டு செய்தால் அருணெறியாண்டுப் பரவாது?

நம் முன்னோர்கள் நமக்கு அறிவுறுத்திச் சென்ற அருணெறியையே மகாத்மாகாந்தி உலகிடை யோம்ப முனைந்து நிற்கிறார். உலகில்

தோன்றிய எல்லாப் பெரியோர்களும், சமய குரவர்களும் ஜீவகாருண்யத்தையே போதித்துப் போந்தார்கள். அப்பெருநெறி பல நாட்டில் பல சமயங்களாகப் பிரிந்து நிற்கிறது. அருணெறியை எச்சமயப் பெயரால் அழைக்கினும் அழைக்க. அதைக் குறித்து எனக்குக் கவலையில்லை. வேண்டுவது அருணெறியே. இப்பெருநெறி உலகில் பரவப் பரவப் பல சமய உணர்வுமாண்டு, எல்லாருஞ் சகோதரர் என்னும் உணர்வு உயிர்களிடை விளங்கி, உலகில் அமைதி நிலை பெறும். அவ்வருணெறி மகாத்மாகாந்தி வாயிலாகக் கீழ் நாட்டில் வளர்ந்து வருகிறது. மேல் நாட்டில் இயற்கை ஆராய்ச்சி முதிர்ந்து வருகிறது. இரண்டும் ஒன்றுபடுங் காலமும் நெருங்கியிருக்கிறது. அதுபோழ்து ஒரு புதிய உலகந்தோன்றும். அவ்வுலகம் எல்லா வழியிலுஞ் சமரசத்தையே விரும்பும். அஃதொரு சமரச சமயத்தையும் விழைந்து நிற்குமென்பது திண்ணம்.

சமரசமாவது எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாத அருணெறியே யாகும். அச் சமரச சமயம் நமது சைவசித்தாந்தமாக மிளிர நாமேன் இப்பொழுதே முயலலாகாது? சைவ சித்தாந்தத்தில் சமரசமில்லையா? பொருளுண்மை யில்லையா? அன்பில்லையா? அருளில்லையா? என்ன இல்லை? எல்லாமிருக்கின்றன. எல்லாம் பெற்ற

நாம் என்ன செய்கிறோம்? போனது போக. இனியாவது நம்மை மறந்து நம்பாலுள்ள குற்றங் குறைகளைப் பாராட்டாது குறைவிலா நிறைவாங் கோதிலா அமுதாம் - நடராஜ மெய்யன் - ஐந் தொழில் புரியும் ஐயன் - திருவருளை முன்னிட்டு அன்புக் கடனாற்றுவோமாக.

## நமது முன்னணி வேலை

சைவம் அதாவது ஜீவகாருண்யம் உலகெலாம் பரவல்வேண்டும் என்னும் எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடையறாது ஊர்ந்து ஊர்ந்து நிற்றல்வேண்டும். சைவம் தமிழ் நாட்டார்க்கே உரிய தென்றும், அச்சமயத்தைத் தமிழ் நாட்டுப் பெட்டியிலேயே அடைத்துப் பூட்டிட வேண்டுமென்றுங் கூறுங் குறுகிய நோக்குடையாருஞ் சிலருளர். சைவ சாத்திர ஆராய்ச்சியுடையார் அக்கூற்றை ஏற்றுக்கொள்வரோ? சித்தாந்த நூல்கள் கூறுந் தத்துவம் எச்சமயத்திலில்லை? இவ்வழி நின்று பார்த்தால் சைவ சமயமில்லாத இடமேயில்லை என்று சொல்லலாம். இவ்வுண்மை மேலே ஒரு சிறிது விளக்கப்பட்டிருத்தல் காண்க. இவ்வழி நின்று விளக்குவது ஒரு பால் கிடக்க.

சிவசம்பந்தம் இந்தியாவில் எப்பகுதியிலில்லை என்று அந்நண்பரை நோக்கி வினவினால் அவர் என்னவிடையிறுப்பரோ தெரியவில்லை. பழந்

தமிழ் நாட்டின் ஒருபகுதியாய கேரள நாட்டில் சிவாலயங்களில்லையோ? தெலுங்குநாட்டில் சிவாலயங்களில்லையோ? மைசூர், ஹைதராபாத், நாகபுரி, பம்பாய் முதலிய விடங்களில் பெரும்பான்மையோர்களாகவுள்ள வீரசைவர்கள் - சிவாத்துவித சைவர்கள்-எக்கடவுளைத் தொழுகிறார்கள்? நேபாளர், காஸ்மீரர் ஆண்டவனை எந்நாமத்தால்வழுத்துகிறார்? இராஜபுதனத்தில் இன்னுஞ் சிவலிங்க மகிமைவைக் காணலாமே. பாரத கண்டத்துள்ள ஹிந்துக்கள் அனைவரும் போற்றும் காசியம்பதியில் வீற்றிருக்கும் விசுவநாதன் எவன்? மற்றப் பகுதிகளிலுள்ள சாக்தேயர் யாவர்? காணபத்தியர் யாவர்? கௌமாரர் யாவர்? சிவராத்திரி விரதம் இமயம் முதல் கன்னியாகுமரிவரை அனுஷ்டிக்கப்படுவது அச்சகோதரர்களுக்குத் தெரியாதுபோலும்! ஹிமயத்தின்முடி கௌரிசங்கர் என்னும் பெயர் தாங்கி நிற்பதை அவ்வன்பர்கள் அறியார்கள் போலும்! உலகெலாஞ் சென்று சமரசஞானத்தைப் பரப்பிய வேதாந்தபானு சுவாமி விவேகாநந்தர் "ஏ! இந்தியாவே! நீ தொழுங்கடவுள் முனிவர்க்கு முனிவன் என்பதை - எல்லாந் துறந்த சங்கரன் என்பதை உமைக்கு நாயகன் என்பதை - மறவாதே" என்று முழங்கியிருப்பதைத் தமிழ்நாட்டு நண்பர்கள் கண்விழித்துப் பார்ப்பார்களாக. இது நிற்க, இன்னும் வேறு வழியில் சைவம் உலகில்

பரவி வருவது எனது உள்ளத்தூறுகிறது. பழைய வைதிக சமயமென அறிஞரால் போற்றப்படும் ஆரிய சமாஜத்தின் அடிப்படையான தத்துவம் என்ன? சைவ சமயங்கூறும் முப்பொருளுண்மை யன்றோ? உலகமுழுவதுஞ் சமரசம் என்னும் ஒரே சமயம் பரவப்போகிறதென்றும், அதற்கென ஒரு ஜெகத்குரு தோன்றப் போகிறாரென்றும போதித்துவரும் தியோசாபிகல் சங்கத்தார் கந்தக் கடவுளின் கூறாகிய சனத்குமாரரையல்லவோ பெருங் குருவாகப் போற்றிவருகிறார்? மேல்நாட்டில் பலவிடங்களில் இயற்கைப்பொருளாராய்ச்சி முதிர்ந்து வருகிறது. அவ்வாராய்ச்சி, இயற்கையை உள் பொருளாகக்கொண்டுள்ள சித்தாந்த சமயத்துக்கு எவ்வெவ்வழியில் துணை செய்யுமென்று நான் கூற வேண்டுவதில்லை. மேல்நாட்டு ஆன்ம தத்துவ சாத்திரிகளிற் சிலர் சைவ சித்தாந்தம் அறிவுறுத்தும் முப்பொருளுண்மை அத்துவித நிலை முதலியவற்றிற்கு உடன்பட்டு வருகிறார். மேல் நாட்டில் சில விடங்களில் சைவ உணவைப்பற்றிய உணர்வும் இயக்கமும் மிக விரைவாகப் பரவி வருகின்றன. இவ்வேளையில் சைவம் தமிழர்க்கே உரியது என்று சொல்வது சைவ உலகிற்கு நலஞ் செய்வதாமோ? "மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டிற் கப்பால் முதல்வனுர் அடி சேர்ந்த முறைமையோரும்" என்று தெய்வச் சேக்கிழார் அங்காளிற் கூறிப்

போந்த உண்மையையாவது குறுகிய நோக்குடையோர் கூர்ந்து சிந்தித்துத் திருந்துவாராக. குறுகிய நோக்குடையார்க்கு அஞ்சாது பரந்த வழி நின்று அருட்டொண்டு செய்ய உறுதிகொள்ள வேண்டுவது நமது முதல் வேலை.

ஒவ்வொருவரும் "நமது ஜீவகாருண்ய மதம் - அருணெறி - யாண்டும் பரவல்வேண்டும்" என்று இடையறாது எண்ணல்வேண்டும். அவ்வெண்ணமே தவமென்பது. அத்தவத்துக்கு இறையருள் சுரக்கும். "ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே - சூழ்க வையகமுந் துயர்தீர்கவே", "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனவரூஉம் நம் முன்னோர் திருஉள்ளக்கிடக்கையை யோர்ந்துணரல் வேண்டும். "சிவத்திற்குமேல் தெய்வமில்லை; சித்திக்குமேல் சாத்திரமில்லை" என்றும், "சைவத்தின் மேற் சமயம் வேறிலை" என்றும்ஏட்டிலுள்ள பழைய உரைகளைப் பகன்றுகொண் டிருப்பதால் என்ன பயன் விளையும்? சிவமென்பது அன்பென்றும், சைவமென்பது எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாது நலம்பேணும் அருணெறி யென்றும் உலகோர் ஒப்புமாறு அறிவுகொளுத்த முயலல்வேண்டும். பௌராணிக சைவத்துக்கும் சித்தாந்த சைவத்துக்கு முள்ள வேற்றுமையை விளங்கவைத்தல் வேண்டும்.

சைவசித்தாந்திகள் எச்சமயத்தாரையும் தமக்கு மாறுபட்டவராகக் கருதலாகாது. சைவ சமயத் தார் தங்கொள்கையை யாண்டும் பரப்பினால் மெய்ச்சமயம் பொய்ச்சமயம் என்னும் வாதமும், என் கடவுள் உன் கடவுள் என்னும் போராட்டமும் அறவே ஒழியும். ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகும் அறியாமையும் நீங்கும். பாதிரிமதம் (கிறிஸ்து கொள்கையன்று) முதலிய மதங்களில் புகுந்தவர்களை மீண்டுஞ் சித்தாந்த நெறியில் சேர்க்க உளங்கொளல்வேண்டும். இதுகாறும் சம ரசம்பேசி மற்றச் சமயத்தாரைச் சித்தாந்தநெறி யில் சேர்க்கவேண்டுமென்று சொல்வது அறமா என்று சிலர் ஐயுறலாம். சித்தாந்த சமயத்தில் பிற ரைப் புகுத்தலென்பது பல சமய உணர்வை அழிப்பதாகும். ஒரு சமயத்திலிருந்து மற்றொரு சமயத்திற்கு வலிந்து எவரையும் ஈர்ப்பதன்று.

திருநாவுக்கரசர் திருவருணெறி தமக்குக் கூடாதபோது தாம் பிறந்த சமயம் விடுத்துச் சமண சமயம் புகுந்தாரென்றும், ஆண்டிருந்து மீண்டும் சைவசமயம் போந்தாரென்றுஞ் சொல் லப்படுகின்றன. சமணராயிருந்த நாவரசர் மீண்டுஞ் சைவசமயம் புக்காரென்பது 'சமண சமயமென் றொரு சமயமுண்டு; சைவசமயமென்றொரு சமய முண்டு' என்ற வேற்றுமை யுணர்வின்றி எல்லாந் திருவருள் சமயம்என்னும் மெய்யுணர்வு பெற்றதே

யாகும். நாவரசர் சமணராயிருந்தபோது அருகன் ஒரு கடவுளென்றும், சிவபிரான் ஒரு கடவுளென்றும், இவ்விருவருள் சிறந்த கடவுள் அருகனென்றும் உறுதிகொண்டிருந்தார். பின்னர் அவர் தம்மறிவில் ஆண்டவன் திருவருள் விளங்கப் பெற்றதும் தாம் பிறந்த சமயத்தில் போற்றிய கடவுளும், சமணசமயந் தழுவியபோது வழுத்திய கடவுளும் சிவபரஞ்சுடராகவே யிருப்பது கண்டு "ஆண்டவனே! உன்னை எப்பொழுதும் மறந்தறியேன்" என்னும் பொருள்பட "சலம் பூவொடு தூபமறந்தறியேன் தமிழோடிசைபாடல் மறந்தறியேன் - நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் - உன்னுமம் என்னுவில் மறந்தறியேன்" என்னுஞ் சமரச ஞானப்பாடல் பாடியருளினர். ஆதலால் சமரச உணர்வளிப்பதே சித்தாந்த சமயத்தில் சேர்ப்பதென்பது.

இச்சமரசஞானத்தை இன்னார்க்குப் போதிக்கலாம் இன்னார்க்குப் போதித்தல் கூடாது என்னும் நியதியிருத்தலாகாது. ஞான வேட்கையுடைய எவர்க்கும் ஞானசாத்திரம் போதிக்கலாம். "நான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்" என்று நமது ஆன்றோர் கூறினரேயன்றி "இக்குலத்தாரே இன்பம் பெறல்வேண்டும், இச்சமயத்தாரே இன்பம் பெறல்வேண்டும்" என்று கூறினரோ? நமது ஆண்டவன் பன்றிக்கும் கருக்குருவிக்கும்

நாரைக்கும் யானைக்கும் பாம்புக்கும் சிலந்திக்கும் செடிக்கும் கொடிக்கும் முத்தி கொடுத்த சரிதங்களைப்படிக்கிறோம்; கேட்கிறோம். அத்தகை அருட்கடவுளைப் போற்றுஞ் சைவர்கள் தங்களைப்போல மனித உடல் தாங்கியுள்ள உயிரகண்மீது இரக்கங்காட்டாது தீண்டாமை பாடல்பாடுவது அறமா அன்பா அருளா என்று கேட்கிறேன். போன காலமெல்லாம் போக. இனியாவது அருள்நெறிக்குரியார் இவர்தான் என்னும் நியதியின்றி எவ்வெவ்வழியில் சமரச ஞானத்தைப் பரப்பல் வேண்டுமோ அவ்வவ்வழியில் பரப்ப முயலல் வேண்டும்.

நம்முன்னோர்கள் திருவருள் நெறி வளர்ச்சிக்கென மடங்களையுங் கோயில்களையும் ஏற்படுத்தினார்கள். கலைஞானப் பயிற்சிக்கென மடங்களும் மெய்ஞ்ஞானப் பேற்றிற்கெனக் கோயில்களுங் காணப்பட்டன. அம்மடங்களுங் கோயில்களும் இப்பொழுது எந்நிலையிலிருக்கின்றன? மடங்களில் என்புதோல் போர்த்த புன்குரம்பைகள் காணப்படுகின்றன. கோயில்களில் கல் செம்புகள் காட்சியளிக்கின்றன. மடங்களில் ஞானமாஞ் சக்திகாணோம்; கோயில்களில் அன்பாஞ் சிவத்தைக்காணோம்; அவ்வருணெறிக் கழகங்கள் கொலை களவு கள் காமம் பொய் முதலிய பாவங்களுக்கு நிலைக்களன்களாக மாறிவிட்டன. அம்மாற்றங் கண்டுங்கேட்

டுந் தேவாரமோதும் நாம், சிவத்தைத் தொழும் நாம், சைவர்களென்று சொல்லிக்கொள்ளும் நாம் வாளா கிடக்கிறோம். நமக்குக் கண்ணீர் பெருக வில்லை. செந்நீர் கொதிக்கவில்லை. நமக்கு உடலை யும் உணர்வையும் ஆண்டவன் ஏன் தந்தான்? நம்முன்னோர்கள் மடங்கட்கும் கோயில்கட்கும் ஏன் பெரும்பொருள் ஈட்டி வைத்தார்கள்? அரு ணெறி வளர்ச்சிக்கன்றோ? "எந்நன்றி கொன் றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்று நாயனார் அருளிய மெய் யுரையைச் சிந்தையிலிருத்தல்வேண்டும். செய்ந் நன்றிகொன்ற பாவம் நந்தலைமீது கிடக்கிறது. அது கிடக்க. நாம் நீறணிந்து அஞ்செழுத்தோதி ஆண்டவனை வழிபடுகிறோம். அவ்வழி பாட்டை ஆண்டவன் ஏற்றுக்கொள்வானா? உலகுய்யும் ஒரு நெறிக்கு இடர் விளைந்துள்ளபோது அவ்விடர் களைய முயலாது ஆண்டவனை மாத்திரம் வழி படல்போதுமா? அவ்வழிபாட்டான் நமது கடனை ஆற்றினவர்களாவோமா? அவ்வழி பாடாதல் ஆண்டவன் வழிபாடாமோ? அது தந்நல வழி பாடேயாகும்.

"மடங்களையுங் கோயில்களையும் எப்படித் திருத்துவது? எல்லாங் காலச்செயல்; சிவா என்று காலங் கழித்துவிட்டுப் போகலாம்" என்றும் இன்னும் பலவிதமாகவும் பலர் நினைப்பது

முண்டு ; பேசுவதுமுண்டு. மடங்களையுங் கோயில் களையுந்திருத்த வழியா இல்லை? எத்துணையோ வழிகளுண்டு. ஆயிரஞ் சிவனடியார் உடல் பொருளாவி மூன்றையுஞ் சைவசமயத்துக்கென அர்ப்பணஞ் செய்து, "நாமார்க்குங் குடியல்லோம்" என்றெழு முணர்வும், "அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" என்று அஞ்சாநெஞ்சமும், "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற உறுதியுங்கொண்டு, திருவருளை முன்னிட்டுப் புறப்பட்டால் வழியா ஏற்படாது? வழியிது முறையிஃது என்று குறிப்பிட்டு உங்கள் அரிய காலத்தைக் கொள்ளைகொள்ள விரும்புகின்றேனில்லை. இப்பொழுது வேண்டற்பாலது தொண்டர் கூட்டம். அத்திருக்கூட்டங் கூடினால் வழியும் முறையும் பின்னர்க் காணக் கொள்ளலாம். வழியும் முறையும் திருவருள் காட்டும்; கூட்டும். திருவருள் துணைகொண்டு மடங்களையுங் கோயில்களையும் ஒழுங்குபடுத்தி, அவைகளின் வாயிலாக அருணெறி யோம்ப முயல்வது நமது தலையாய கடமைகளுள் ஒன்று என்று சொல்வேன்.

பண்டைக்காலத்தில் நம்மக்களிடை ஆண்டவன் திருவடிப்பற்றில் ஓர் உறுதி நிலையிருந்தது. அந்நிலையை இக்காலமொழியில் நம்பிக்கை

அல்லது விசுவாச மதமென்று எளிய நடையில் சொல்கிறேன். கிறிஸ்துவ சகோதரர்கள் "விசுவாசம், விசுவாசம்" என்று அடிக்கடி சொல்வார்கள். இதைப்பற்றிக் கிறிஸ்து மிக உரமாகப் பல விடங்களில் பேசியிருக்கிறார். அம்மாசிலாக் கொள்கை நமது நாட்டில் வேரூன்றியிருந்தது. இன்னும் தற்கால நாகரிக நஞ்சு ஏறாத விடங்களில் அக்கொள்கை இறந்துபடாது நிலவி வருகிறது. அம்மேலாங் கொள்கை பல விடங்களில் தற்காலப் படிப்பாலும், போலிஞானப் பேச்சாலும் இறந்துபட்டு வருகிறது. பண்டை நாளில் நம்மவர்கள் நோய்வாய்ப்படின் "மந்திரமாவது நீறு" என்னுந் திருப்பதிகமோதி நீறணிந்து ஆண்டவனை வழுத்தி நோய் போக்கிவந்தார்கள். அக்காலத்தில் தெய்வப் பிரார்த்தனையால் பல அருவினைகள் ஆற்றப்பட்டுவந்தன. கண்ணில்லார் கண்பெற்றதும், செவியில்லார் செவிபெற்றதும் பிறவும் இக்காலத்தவர்க்கு நாவல் கதை போல் தோன்றலாம். அவர் இக்கொள்கையை மூடபக்தி யென்று எள்ளி நகையுமாடுவர். மனோ தத்துவ நுட்பந்தெரிந்த நன்மக்கள் இக்கொள்கையை எள்ளி நகையாடார். நமது சமய குரவர் நிகழ்த்திய அற்புதங்களும், கிறிஸ்து முதலிய பெரியோர் நிகழ்த்திய அற்புதங்களும் பழைய காலத்தில் நிகழ்ந்தன. இக்காலத்திலும் பெந்த

**கோஸ்தே** சங்கத்தார் ஆண்டவனருளில் உறுதி கொண்டு மனதை அவன் கீழ்க்கிளத்தி ஜெபத்தால் பலப் பல நோய்கள் தீர்ப்பதை நான் நேரிற் கண்டு வருகிறேன். நம்மவர்களில் சிலர் இன்னும், முருகக் கடவுள் கோயிலை வலம் வருதலாலும், தெருவில் புரள்வதாலும், வெல்லக்கட்டி கரைப்பதாலும் பலதிற நோய்கள் போக்குவதையுங் கண்டு வருகிறேன். கிறிஸ்துவின் அருட்பெருக்கும் முருகன் அருட்பெருக்கும் மக்கள் மனோநிலையைப் பொறுத்துப் பொங்கி எழுவன. அமெரிக்க நாட்டில் சில அறிஞர் இலௌகிக முறையில் மனோதத்துவ வலியால் எத்துணை அருவினைகள் நிகழ்த்துகின்றார்! அத்தகை மனோ சக்தியை - நம்பிக்கை மதத்தை - வாய் வேதாந்திகள் இகழும் மூட பக்தியை - மீண்டும் உயிர்ப்பிக்க நாம் முயலல்வேண்டும்.

நம்முன்னோர்கள் திருவருள் நெறியில் நிற்போர் இன்னார் என்று உலகோர்க்கு அறிவுறுத்தத் திருநீற்றையும் கண்டிகையையும் புறச்சின்னங்களாக ஏற்படுத்தினார்கள். திருநீறு மாசிலா உள்ளத்தைக் காட்டும் அறிகுறி. "பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்றார் தெய்வச் சேக்கிழார். கண்டிகை ஆண்டவன் கண்மணி என்று சொல்லப்படுகிறது. "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" என்பது ஆன்றோர்வாக்கு. கண்ணையே

அருள் சுரப்பிடமாகக் கொள்வது உலகியல் வழக்கு. கண்டிகை உயிர்களிடத்துச் செலுத்தும் இரக்கத்தை அறிவிப்பதாகும். சுருங்கக் கூறின் நீறுங் கண்டிகையும் இரக்க அகமுடைமையைப் புறத்தே காட்டுஞ் சின்னங்களாகப் பண்டைக் காலத்தாரால் கொள்ளப்பட்டன என்று கூறலாம். நீற்றையுங் கண்டிகையையும் பொருளாக்கொண்ட மெய்ப்பொருள் நாயனார் அப்பெயரால் அழைக் கப்பட்டதும், அக்கோலத்துக்கேற்ப அவர் தம் மைக் குத்திக்கொன்ற முத்தி நாதனிடங் கருணை காட்டி, அவன் உயிர்க்கு எவராலுந் தீங்கு நேராத வாறு காத்ததும், சேரமான் பெருமாள் நாயனார் உவர் மண் மழையால் கரையப் பெற்று நீற்றுக் கோலமளித்த ஒரு வண்ணானைச் சிவனடியாரெனத் தொழுததும், பிறவும் பண்டை நீறு கண்டிகை யின் உள்ளக் கிடக்கையைத் தெரிவிப்பனவாம். "நீறிடா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" என்று மணிவாசகனார் நீற்றின் உள்ளுறை புகல் கிறார். அதன் உள்ளுறையாது? இரக்கமில்லா உள்ளத்தவரைக் கண்டால் உள்ளம் நடுக்குறுகிறது என்பது. "வேடநெறி நில்லார் வேடம்பூண் டென் பயன்-வேடநெறி நிற்பார் வேடம் மெய்வேடம்" என்றார் திருமூலரும். அந்நீறுங்கண்டிகையும் இதுபோழ்து குடியர் வெறியர் காமுகர் கொலைஞர் பொய்யர் வஞ்சகர் முதலிய மாக்கள் உடலங்களிலும் இடங்

கொண்டிருப்பதைக் காணக்காணக் கண்ணீர் பெருகுகிறது. நீறு கண்டிகை தரித்து எத்துணைப் பாவங்கள் செய்தாலும் அப்பாவங்களை அச்சின்னங்கள் தாங்கித் தங்கட்கு நலஞ்செய்யுமென்னும் அறியாமையுஞ் சிலரிடத்துண்டு. வேறு பல சிறுமைகளுமுண்டு. அவைகளை விரிப்பிற் பெருகும். ஈண்டு யான் வலியுறுத்தப் போந்தது நீறு கண்டிகையின் உண்மை பொன்றியுள்ள இந்நாளில் அவைகளை அணிந்திருப்போரே சைவரென்னும் நியதியிருத்தலாகாதென்பதே. எவ்வுயிரையுந் தம்முயிர்போல் கருதிக் கொலை புலை தவிர்ப்போரனைவரையும் சைவராகக் கோடல் வேண்டுமென்பது எனது கருத்து. இக்கருத்தைப் பரப்ப முயல வேண்டுவதும் நங்கடன்களுளொன்று.

முன்னை நாளில் அஞ்செழுத்துப் பொருளுணர்ந்து ஓதப்பட்டது. இப்பொழுது அதைச் செவியுறுத்தும் குருமார்களில் எத்துணை பேர்க்கு அஞ்செழுத்துண்மை தெரியுமென்பது வெள்ளிடைமலை. மகரமாகிய மலத்தால் நகரமாகிய மறைப்புற்றுள்ள யகரமாகிய நான் (ஆன்மா) வகரமாகிய திருவருள் வாயிலாகச் சிகரமாகிய கடவுளோடு சேரல் வேண்டுமென்னும் பொருளுணர்வோடு ஓதி ஓதி அவ்வோதல் பின்னர்ப் பொருள்பட்டு அழியா நிலைபெய்துவிக்கும் நெறி கண்டு வந்தனர் நம்முன்னோர். அஞ்செழுத்

தோதலால் பெறற்கரிய பெரும்பேறு பெறலாம். தமிழ்வேதத்திலுள்ள பஞ்சாக்கரப் பதிகங்களைப் பார்க்க. "நல்லக விளக்கது நமச்சி வாயவே" என்னுந் திருவாக்கையோர்க. அஞ்செழுத்தில் அடங்காத தென்னை? உலகு உயிர் கடவுள் எல்லாம் அவ்வெழுத்தில் அடங்கியிருக்கின்றன. இப்பொழுது அவ்வெழுத்துக்கள் பொருளிழந்து வரிவடிவங்களாக நிற்கின்றன. அஞ்செழுத்தின் உண்மையை உலகோர்க்கு எவ்வித கட்டுப்பாடுமின்றி உணர்த்த முயல்வது நம்பெருங் கடமை.

சிவ தீக்கை இன்னார்தான் செய்யவேண்டும் இன்னார்தான் பெறல்வேண்டும் என்னுங் கட்டுப்பாட்டைக் களைதல்வேண்டும். கொலை புலை நீத்துப் பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரம் முதலிய திருவருள் நூல்களில் வல்லராய்த் தேர்ச்சியடைவோர் எவராயினும் அவர்க்குத் தீக்கை செய்யும் உரிமை வழங்கப்படல் வேண்டும். தீக்கை நாடி வருவோர் எவராயினும் அவர்க்குத் தீக்கை செய்யல்வேண்டும். சந்தான குரவருள் ஒருவராய உமாபதி சிவாச்சாரியார் பெற்றான் சாம்பான் என்னும் புறையனுக்குத் தீக்கை செய்ததை நந்தமிழ் நாட்டுச் சைவமக்கள் கவனித்து நடப்பார்களாக.

இன்னும் அருணெறி வளர்ச்சிக்கெனக் கல்லூரி மருத்துவவிடுதி முதலிய அறச்சாலைகளைக்

குறிப்பிட்டு உங்கள் அரிய காலத்தைப் போக்க விரும்புகிறேனில்லை. நமது முன்னணி வேலைகள் பற்பலவாகக் கிடக்கின்றன. அவைகளை ஒழுங்கு பட நடாத்த நல்லமைப்புகள் தேவை. அமைப்புக்கு இன்றியமையாதது ஒற்றுமை. முதலாவது சைவமக்களுக்குள் அவ்வொற்றுமை வேண்டும். அவ்வொற்றுமை நிகழாது குலைத்து வருவது அழுக்காறென்பது. எத்தொண்டி லீடுபடுவோரிடத்திலும் அழுக்காறிருத்தலாகாது. தன்னை வேறாகவும் பொதுத் தொண்டை வேறாகவும் கருதல்வேண்டும். இக்கல்வியை மேல் நாட்டாரிடமிருந்து நாம் பயிலல்வேண்டும்.

சைவப்புலவர் ஒவ்வொருவரும் தமக்குமேல் கற்றாரிலர் என்று இறுமாந்து எவருந் தமது அடிவருடியே வாழ்தல் வேண்டுமென்னும் பேய்க் குணங்கொண்டு வாழ்ந்தமையே சைவ உலகக் கேட்டிற்குத் தலையாய காரணமென்று எனக்குத் தோன்றுகிறது. சைவப் புலவர்களுக்குக் கூவலாமை குறை கடலாமை கதையை நினைவூட்ட வேண்டுவதில்லை. போனகாலம் போக. இன்று முதலாவது சைவப் புலவர்கள் சைவ உலகஞ் சிறுமைப்பட்டு வருவது கருதித் தங்களை மறந்து அருட்டொண்டு செய்ய ஒன்றுபடுவார்களாக.

அவர்களனைவரும் ஒன்றுபட்டுச் சைவ உலகிற்கென ஒரு பெருஞ் சமாஜம் காண்டல் வேண்டும்.

அதற்குக் கிளையாகப் பல ஜில்லா சபைகள் தாலுக்கா சபைகள் கிராம சபைகள் தோன்றுதல் வேண்டும். இப்பொழுது தமிழ் நாட்டில் எண்ணிறந்த சங்கங்கள் ஒன்றற்கொன்று தொடர்பின்றி யிருக்கின்றன. அவைகளெல்லாம் ஒன்றுபட்டால் ஒரு பெருஞ் சமாஜம் நாளையே தோன்றும். சில ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் சைவசித்தாந்த மகா சமாஜம் என்றொரு சமாஜம் தோன்றி நற்றொண்டு செய்து வந்தது. இப்பொழுது அச்சமாஜமெங்கே? நிட்டை கூடி ஆண்டுக்கொரு முறை விழித்து மீண்டும் ஒடுக்கம் புகுகிறது. அதன் குலைவுக்குக் காரணம் சொல்லவும் வேண்டுமா? மீண்டும் அதைப் பழையபடி உயிர்ப்பிக்க முயலல் வேண்டும். அல்லது புதிதாக வேறொன்று காண முயலல் வேண்டும்.

இவ்வமைப்புகட்கும் பிறவற்றிற்கும் பிரசாரம் முதல் முதல் வேண்டற்பாலது. ஒவ்வொரு சைவ சங்கமும் இவ்வருந் தொண்டு செய்துவரலாம். சங்கங்களிலுள்ள அங்கத்தவர்கள் ஓய்ந்த நேரங்களில் எளிய மக்களிடைப்போந்து ஜீவகாருண்ய உபதேசஞ் செய்யலாம்; துண்டுப்பிரசுரங்கள் வெளியிடலாம். பிரசாரத்துக்கெனச் சிறப்பாகக் கல்வி அறிவு ஒழுக்கமுடைய சந்நியாசிகளை ஒவ்வொரு சங்கத்திலுஞ் சேர்த்து அவர்க்குச் சோறு கூறையளித்து அவர்கள் வாயிலாக எவ்வளவோ பிர

சாரஞ் செய்விக்கலாம். பிரசாரத்துக்குப் பொருள் வேண்டுமே என்னுங் கவலை பலருக்குண்டு. அருணெறி வளர்ச்சிக்குப் பெரும்பொருள் எற்றுக்கு? புத்தர் பெருமான் ஒரு காசின்றி ஒழுக்கமுடைய அறவோரைக் கொண்டே தமது அறநெறியை உலகிற்பரப்பி வந்தார். பெரும்பொருள் சேர்த்து வைப்பது பின்னர் உலகாயத மதத்துக்கு அடிகோலி வைப்பதாகும். மடங்களின் தற்கால நிலையும் கோயில்களின் தற்கால நிலையும் எதை கூற்றை வலியுறுத்தும். பெரும்பொருள் காரணத்தாலன்றோ கிறிஸ்துநாதர் பெயரால் நடத்தப் பட்டுவரும் பல சங்கங்கள் சமய ஞானமற்ற அமைப்புக்களாக மாறுபட்டன? பொருட்செல்வம் பெற முயல்வதைப் பார்க்கிலும் அருட்செல்வம்பெற முயல்வது சிறப்பு. "செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" என்றார் ஞானசம்பந்தப் பெருந்தகையார். அச்செல்வத்தால் உலகைப் பலவழியில் திருத்தலாம். சங்கத்தார் திருவருள் நெறி வளர்ச்சிக்கெனப் புறப்பட்டால் ஆண்டவன் உதவி பல வழிகளிலும் வந்து சேரும். நமது கடமை பணி செய்வது. ஒவ்வொரு சங்கத்தாரும் 'வாரத்துக்குக் குறைந்தது இவ்வளவு பேரைக் கொல்லாமை நோற்குமாறு செய்யவேண்டும் என்னும் உறுதி கொண்டுழைத்தல் வேண்டும்.

சங்கங்கள் அரிய நூல்களைக் கால நிலைக்கேற்ற வாறு வெளியிட முயலல் வேண்டும். நூல்கள் வெளியீடென்று எல்லாச் சங்கத்தாரும் பழைய புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதால் பெரும் பயன் விளையாது. பழைய நூல்களை ஒரு சிலர் வெளியிடலாம். பழைய நூற் கருத்துக்களை எளிய நடையில் கற்றவரைக்கொண்டு எழுது வித்து முதுக்கல்வியில்லாதார்க்கு அவைகளைப் பயன் படுத்தல்வேண்டும். சிவஞானபாடியத்தை எளிய நடையில் எழுதி நாட்டிற்கு உதவினால் எத்தகை நலன் விளையுமென்பதை யான் கூற வேண்டுவதில்லை.

மேல் நாட்டு இயற்கை ஆராய்ச்சிக்காரர் உழைப்பு நமது சமய ஆராய்ச்சிக்கு இன்றி யமையாதது. அதை நாம் இழிவாகக் கருத லாகாது. சைவ சித்தாந்தம் இயற்கையை உள் பொருளாகக் கோடலால், அக்கொள்கைக்கு மேல் நாட்டார் இயற்கை யாராய்ச்சி பெருந்துணை செய்வதாகும். ஆதலால் மேல் நாட்டு மொழி களிலுள்ள தாவர நூல், விலங்கு நூல், பூத பௌதிக நூல் முதலியவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து நாட்டுக்கு நலஞ்செய்யல் வேண்டும். ஆங்கிலங் கற்ற தமிழ் நன்மக்கள் சித்தாந்த உண்மைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்குந் தொண்டில் தலைப்படல் வேண்டும்; மேல்நாடு

போந்து சித்தாந்த உண்மையைப் பரப்பவும் முய லல்வேண்டும். சடத்தின் இயல்பை நன்கு ஆராய்ந் துள்ள மேல்நாட்டு மக்கட்கு ஆத்திக உணர்வை நஞ்சித்தாந்த ஞானமளிக்குமென்பதில் ஐயமில்லை. எத்துணையோ மக்கட்கு ஆத்திக உணர்வு வழங்க வல்ல அருட்செல்வத்தையுடைய நாம் அதைப் பிறர்க்குப் பயன்படுத்தாது வாளாகிடப்போ மாயின் நமது வாழ்வில் ஆற்றவேண்டிய கடனை ஆற்ற தொழிந்தவராவோம். அக்கடனாற்ற நாம் முற்படுவோமாக.

இத்தூத்துக்குடிச் சபை நாற்பத்தோராண்டுக ளாகப் பல அறத்தொண்டுகளை ஆற்றிவருவது குறித்துக் கழிபேருவகை யெய்துகிறேன். தொன்மையும் செல்வாக்குமுடைய இச்சபை இக் கால நிலையுணர்ந்து சில புது முறைகளைக் கடைப் பிடித்து வழிகாட்டினால் சைவ உலகத்துக்கு உயிர் நல்கும் பேற்றிற்குரியதாகும். திருநீற்றுச் செல் வம்-பாண்டிமாதேவி-எனதாருயிர்த் தெய்வம்-மங் கையர்க்கரசி - வாழ்ந்த நாடன்றோ இச்சைவத் தென்பாண்டிநாடு? குலம்பிறப்பு முதலிய புறவேற் றுமைகருதாது குலச்சிறையார் சிவநெறி வளர்த்த நாடன்றோ இத்தமிழ்த் தென்பாண்டி நாடு? இத் திருநாட்டிலன்றோ சைவம் அனலிடையும் புன லிடையும் நின்று தன் பெற்றி விளக்கியது? அத் தகைத் தமிழ்ச் சைவத் திருநாட்டிலன்றோ இச்

சபை சைவம் வளர்த்து வருகிறது? அந்நாளில் சைவத்துக்குற்ற இடுக்கணைப் பார்க்கிலும் இப்பொழுது நேர்ந்துள்ள இடுக்கண் சாலவுங் கொடியது. இந்நாளில் பல மங்கையர்க் கரசிமார் தேவை; பல குலச் சிறையார் தேவை. மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாருந் தோன்றுவரேல் திருஞான சம்பந்தர் வருவார். மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும் நல்க இச்சபையார் முயலல் வேண்டும். அம்முயற்சி யெழுமாறு அங்கயற் கண்ணிபங்கன் ஆலவாய் அவிர்சடைக் கடவுள் அருள்புரிவானாக.

## இறுவாய்

சகோதரிகளே! சகோதரர்களே! இதுகாறுஞ் சமயத்தின் இயல்பு இஃது என்பதும், உலகிற்குச் சமயம் இன்றியமையாதது என்பதும், எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயரால் பல வழியில் போற்றுகின்றன என்பதும், சமரச சமயமொன்றே கடவுள் நெறி என்பதும், சமயங்கள் பலவாய்க் கிடப்பினும் அவைகள் யாவும் சமரசத்தையே குறிக்கொண்டு நிற்கின்றன என்பதும், தொன்மை வாய்ந்த தமிழ் மக்கள் கண்ட முருகு கந்தழி எச்சமயத்துக்கும் உரிய பொருளென்பதும், அப்பொருளே சிவமாக இன்று காறும் போற்றப்பட்டு வருகிறதென்பதும், அச்சிவ சம்

பந்தமுடைய சைவம் சமய குரவர் சந்தான குரவர் முதலியோரால் ஓம்பப்பட்டதென்பதும், அச் சைவம் எச்சமயத்தோடும் பிணக்கின்றியும் எச்சம யக் கொள்கையையும் நீதியினால் தன்னகத்தே தாங்கியும் நிற்குஞ் சமரச சமயமென்பதும், அது முனைப்பற்ற விடத்தில் பொலியும் அன்புச் சமய மென்பதும், அந்நிலையை எப்பெயரிட்டும் அழைக் கலாமென்பதும், சைவத்தின் தத்துவம், வழிபாடு, முப்பொருளுண்மை, அத்துவித நிலை முதலியன சமரச நோக்குடையன என்பதும், உலகு உயிர் கடவுள் மூன்றும் அநாதி நித்தியமென்பதும், அவை பொருளால் வேறுபட்டும், கலப்பால் ஒன்று பட்டும் நிற்பன என்பதும், சைவ சித்தாந்த ,கட வுள் பிறப்பிறப்பில்லாதது என்பதும், அது நான் காவது பொருள் என்பதும், துவித வழி அத்து விதத்தை அறிவுறுத்தலே வேதாந்த நெறி என் பதும், அவ்வழியே மெய்கண்டார் போதித்த வழி என்பதும், வேதாந்தமே சித்தாந்தம் இஃதே அஃது என்பதும், 'அது பொய் இது பொய்' என்று உலகைத் துறந்து ஓடுவது வேதாந்தம் அன்று என்பதும், தன்னலமறுப்பதே உலகைத் துறப்பது என்பதும், எல்லாம் ஆண்டவன் என்று உயிர்களை வழிபடுதலே செய்கை வேதாந்த மென்பதும், வேதாந்த சித்தாந்த ஒற்றுமை யுணர்ந்து வழிபாட்டில் கருத்தைச் செலுத்தி

நாட்டுக்கு நலஞ்செய்ய வேண்டுமென்பதும், சமரச இயல்புகள் இன்னின்ன முறையில் சைவத்திலிருக்கின்றன என்பதும், பிறப்பையொட்டி உயர்வு தாழ்வு பாராட்டாமை, கைம்மாறற்ற பணி, பிறர் குற்றம்பொறுத்தல், பாவமன்னிப்பு முதலியனசித்தாந்த சைவசமயத்தில் சிறப்பாக விளங்குகின்றன என்பதும், அருள்-கருணை-இரக்கம்-தயை உள்ள விடங்களிலெல்லாம் சைவம் மிளிரும் என்பதும், * சைவம் ஒரு சமயம் அன்றென்பதும், உலகில்

* சிவமூர்த்தங்கள் சிலவற்றை வழிபடுஞ் சில சமயங்களிருக்கின்றன. அவை சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம, வாமம், வைரவம், பாடாணவாத சைவம், நிமித்தகாரண பரிணாமவாத சைவம், சுத்த சைவம், பேதவாத சைவம், சங்கிராந்தவாதசைவம், ஐக்கியவாதசைவம், சிவசமவாதம் முதலியன. இச்சமயங்களுள் சைவம் சுத்தசைவம் என்னும் இரண்டு மதங்களிருத்தல் காண்க. இவைகட்கும் மற்றவைகட்கும், சித்தாந்தம், சுத்தாத்விதம், வைதிக சைவம், வேதாந்த சித்தாந்தம், சமரசம் முதலிய பெயர்களால் அழைக்கப்படும் சைவத்துக்கும் வேற்றுமையுண்டு. மெய்கண்ட சாத்திரத்தை முறையாகப் பயின்றோர்க்கு இவ்வேற்றுமை நன்கு தெரியும். தாயுமான சுவாமிகள் "சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து" என்றும், "சைவமுதல் மதங்களாகி" என்றும் அகப்புற அகச் சமயங்களிலுள்ள சைவத்தைக் குறிப்பிட்டுச் சமரச சைவசமயத்தை அவைகளினின்றும் வேறுபிரித்து "மேற் சமயங்கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்றும், "மதாதீதமான வருண் மரபுவாழி" என்

அது பல அறிஞர் வழி ஓங்கி வருகிறதென் பதும், சைவசமய ஆக்கங்கருதி முன்னணி வேலை களாக இன்னின்ன பணிகள் செய்யவேண்டுமென் பதும், இவைகளையொட்டிப் பிறவுஞ் சொல்லப் பட்டன. இச்சொற்பொழிவை இவ்வளவு நேரம் பொறுமையோடு செவிமடுக்கத் திருவுளங் கொண்ட உங்கள் பெருந்தகைமைக்கு வணக்கஞ் செலுத்துகிறேன். உங்கள் அரிய காலத்தை என் வெற்றுரைகளை இன்னுங் கேட்கும் வழியில் செலவழிக்க விரும்புகின்றேனில்லை எனது சிறுமை உரைகளில் பிழைகள் நிகழ்ந்திருக்கு மேல் அவைகளைப் பொறுத்தருளுமாறு மீண்டு மொருமுறை வேண்டுகிறேன்.

அன்பர்களே! இதுகாறுங் கூறி வந்ததன் முடிவு என்ன? சைவம் அருணெறி என்பதன்றோ? அருளாளர்களே! உலகை உற்று நோக்குங்கள் உலகில் எந்நெறி பெருகியிருக்கிறது? அரு ணெறியா? மருணெறியா? சிந்தியுங்கள்; கொலைச் சாலைகளின் பெருக்கை என்னென்று கூறுவது!

றுங் கூறி, இச்சமரசமும் அருண்மரபும் வைதிக சைவம் என்பதை விளக்க "வைதிக சைவம் ராஜாங்கத்திலமர்ந் தது" என்றும், "சைவசமயமே சமயம் சமயாதீதப்பழம் பொருள்" என்றும் "வேதாந்த சித்தாந்த சமரச சிவானு பூதி" என்றும் அருளிச் செய்திருத்தல் காண்க. விரிவு சிவஞான சித்தியார் முதலிய நூல்களிற் பார்க்க.

கொலைக்கருவிச் சாலைகளின் பெருக்கை என்னென்று கூறுவது! அந்தோ! உள்ளம் நடுக்குறுகிறது! இக்கொலைப் பெருக்கிற்குக் காரணர் யாவர்? ஜீவகாருண்யத்தையே மூலதர்மமாகக் கொண்டுள்ள சைவர்களாகிய நீங்களல்லவா? சைவர்களே! உங்கள் சமயம் யாது? நீரில் மூழ்குவதா? துணி தோய்ப்பதா? நீறிடுவதா? அனுட்டானஞ் செய்வதா? கோயில் வலம் வருவதா? அன்று; அன்று. இவையாவும் புறவொழுக்கங்களாகும். ஜீவகாருண்ய நெறியே உங்கள் உள்நெறி. அஃதில்லையேல் குளித்தலும் பூசலும் பிறவும் என்னும்? நீங்கள் உங்கள் அருட்டொண்டை ஆற்றியிருப்பின், உலகில் உயிர்க்கொலை நிகழுமோ? புலைப்புசிப்பு நிகழுமோ? உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் மடங்களையுந் தீண்டுமளவு பரவியிருப்பதைக் கவனிக்கின்றீர்களா? சைவ உலகின் கவலையீனமென்னே என்னே! இனி அருளுலகம் மறையுமோ என்னும் அச்சமும் உண்டாகிறது. உங்கள் ஒற்றுமையின்மை - உழைப்பின்மை - சித்தாந்த ஞானத்தை உலகுக் கறிவுறுத்த முன்வாராத "தன்னலம்"-உலகைத் துன்புறுத்துகின்றன. "நஞ் சமயம் தமிழர்க்கே உரித்து. அது தமிழ் நாட்டளவிலேயே கட்டுப்பட்டுக் கிடத்தல் வேண்டும்" என்னுங் குறுகிய நோக்கை உதறித் தள்ளுங்கள்; நாளுபக்கங்களிலும் அருணெறியோம்ப முயலுங்

கள் பரந்த நோக்குடைய ஒரு கொள்கையை மன்பதைக்குரிய ஒரு சமயத்தைப் - பிறர்க்குப் பயன்படுத்தாது, அதைச் சிறைப்படுத்துவதுஞ் சிறுமைப் படுத்துவதும் அறமாமோ? எத்துணையோ உயிர்கள் அருளுணர்வு பெறுவதை மறிப்பது மறச்செயலன்றோ? அதனினும் வன்கண் - கொடுமை - கொலை - வேறொன்றுண்டோ? தானத்திற் சிறந்த தானம் எது? ஞான தானமன்றோ? அதையா தடுப்பது? ஆண்டவன் அருளமுதைப் பருகச் "சேரவாருஞ் செகத்தீரே" என்று உங்கள் ஆன்றோர் உலகை நோக்கிக் கூவி அழைத்திருப்பதைக் கவனியுங்கள். 'எச்சமயத் தவரும் வந்திறைஞ்சா நிற்குஞ்' சிற்சபேசனை ஆனந்தத் தாண்டவனை வழிபடும் நீங்களா உங்கள் சமய உண்மையை மறைப்பது? அக் கரவையொழித்து அன்பே சிவமென்றெழுங்கள்; அருளே சக்தியென்றெழுங்கள். நீங்கள் உலக ஒளியாவீர்கள்.

பெரியோர்களே! உங்களுக்கு என்ன இல்லை? அறிவு நூல்களில்லையா? அன்பு நூல்களில்லையா? அருணூல்களில்லையா? எல்லாம் உண்டு. வேண்டற்பாலது எழுச்சியே; நெருப்பிடை நின்ற ஞானசம்பந்தரை நினையுங்கள்; நீற்றறையில் கிடந்து கடலில் மிதந்த நாவரையரை நினையுங்கள்; ஆண்டவனைத் தூதுகொண்ட ஆண்

டகையை நினையுங்கள்; ஐயனை மண்சுமப்பித்த அன்பரை நினையுங்கள்; நினைந்து நினைந்து ஊக்கங் கொள்ளுங்கள். நீலகண்டர் உறுதி, இயற்பகையின் ஈகை, மெய்ப்பொருள் பொறுமை, கண்ணப்பர் கனிவு, மங்கையர்க்கரசியார் வீரம்-இவைகள் எங்கே போய்விட்டன? பிறர்க்குழைக்க நீங்கள் புறப்பட்டால் இம்மாண்புகளெல்லாம் உங்களிடத்தில் பொங்கியெழுமென்பது திண்ணம். மெய்கண்ட சாத்திரமென்னும் ஞானவாளிருக்கும்போது உங்களுக்கென்ன அச்சம்?

சிவநேயர்களே! எவரையுஞ் சிவமாக வழிபடுங்கள்; எச்சமயத்தையுஞ் சிவசமயமாகக் கொள்ளுங்கள். எக்கடவுளரையுஞ் சிவமாகத் தொழுங்கள். உலகிலுள்ள ஆடுமாடுகள் அம்மா அம்மா என்று கதறிக் கதறி உங்களை அழைக்கின்றன. அருளுலகம் உங்களை அழைக்கிறது. செவி சாயுங்கள்; அன்புளங்கொண்டு எழுங்கள்; அருள் முகங்கொண்டு எழுங்கள்; தொண்டாற்றப் புறப்படுங்கள். வித்தகம் பேசவேண்டாம்; பணி செய்யப் புறப்படுங்கள். உங்கள் அருணெறி உலகெலாம் பரவப்போவதுண்மை. மேல் நாடுங் கீழ் நாடும் ஒன்றுபட்டு ஈனப்போகும் உலகு உங்கள் அருணெறியையே தழுவும். அந்நெறியே அவ்வுலகிற்குரிய நெறியாகும். ஆதலால் அந்நெறி வளர்க்க எழுங்கள்; எழுங்கள்; வடமொழி

தென்மொழி சண்டை வேண்டாம்; ஆரியர் தமிழர் சண்டை வேண்டாம். எவ்வுயிரை யுஞ் சிவமாகக் கொண்டொழுங்கள். எல்லா நலன் களும் உண்டாகும்.

ஆண்டவனே! எல்லாவற்றையும் ஆக்கும் அயனே! அளிக்கும் அரியே! அழிக்கும் அரனே! நின்னைச் சிவமெனும் மங்களப் பெயரால் நாங்கள் வழிபடுகின்றோம். எல்லாஞ் சிவமயமென்பதை நாங்கள் உணரல்வேண்டும்; எங்கணுஞ் சிவநெறி யாம் அருணெறி பரவல்வேண்டும்; எங்கணும் அருளறம், எங்கணும் அருளரசு, எங்கணும் அருட்டொண்டு பெருகல் வேண்டும்; அருள் செய்க; அருள்செய்க. முன்னைப் பழமைக்கும் பழமையாயிருக்கின்ற முதல்வன் நீ! பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்நிற்கும் பெரியோன் நீ! புதுமுறையில் அருணெறி வளர்க்க முயல்கின்றோம். அருள்செய்க. "சாந்தம் சிவம் அத்வைதம்"

காலமொடு தேசவர்த்த மான மாதி
   கலந்துநின்ற நிலைவாழி கருணை வாழி
மாலறவுஞ் சைவமுதன் மதங்க ளாகி
   மதாதீத மானவருண் மரபு வாழி
சாலமிகு மௌனியெனில் வழக்குப் பேசத்
   தயவுவைத்து வளர்த்தவருட் டன்மை வாழி
ஆலடியிற் பரமகுரு வாழி வாழி
   அகண்டிதா காரவரு ளடியார் வாழி.

—தாயுமானுர்.

# சைவத்தின் சமரசம்

## திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது.

[இரண்டாம் பதிப்பு]

இந்நூற்கண் சமயத்தின் இயல்பு இஃது என்பதும், எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பல பெயரால் பல வழியில் போற்றுகின்றன என்பதும், சமயங்கள் பல வாய்க் கிடப்பினும் அவைகள் யாவும் சமரசத்தையே குறிக்கொண்டு நிற்கின்றன என்பதும், அச்சமரசமே சைவம் என்பதும், பிறப்பையொட்டி உயர்வு தாழ்வு பாராட்டாமை, கைம்மாறற்ற பணி, பிறர் குற்றம் பொறுத்தல், பாவ மன்னிப்பு முதலியன சைவ சமயத்தில் சிறப்பாக விருக்கின்றன என்பதும், அருள் கருணை இரக்கம் - தயை உள்ள விடங்களிலெல்லாம் சைவம் மிளிரும் என்பதும், சைவம் ஒரு சமயம் அன்றென்பதும் பிறவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அணா 8.

* * *

# முருகன்

## ஷை முதலியார் இயற்றியது.

இந்நூற்கண் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகினியல், இளமைப்பேறு, இயற்கை மாண்பு, விரத மாண்பு, முருகன் வழிபாடு முதலியன ஓதப்பட்டிருக்கின்றன. நல்ல காகிதத்தில் பாக்கட் அளவாக அச்சிடப்பட்டுளது. விலை அணா 6.

# மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்

## திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது

[இரண்டாம் பதிப்பு]

**மிக விரிவாக எழுதப்பட்டது**

௫௱௧௨ 512 பக்கங்கொண்டது

இந்நூல் காந்தியடிகள் வரலாற்றைக் கூறுவதன்று. இஃது அவர் வரலாற்றிலுள்ள நுட்பங்கள் மனித வாழ்க்கையோடியைந்து நிற்கும் முறையைக் குறிப்பது; அதாவது காந்தீயத்தை அறிவுறுத்துவது. இந்நூற்கண் விளங்கும் பொருள் மூன்று (௧) மனிதப் பிறவியின் விழுப்பமும் மனிதன் எவன் என்பதும் (௨) ஒருவன் மனிதனாக எத்தகை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பது (௩) மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மா காந்தி என்பது.

இந்நூற்கண் பெண்மக்கட்குரிய பொருள், ஆண்மக்கட்குரிய பொருள், அரசியலுக்குரிய பொருள், சத்தியாக்கிரகப் பொருள், சமயப் பொருள் முதலிய பல பொருள்கள் காணலாம். இல்லறம், தியாகம், அஹிம்சை, சுயராஜ்யம், சத்தியாக்கிரகம், சமயவாழ்வு முதலியன வாசிப்போர்க் கின்பூட்டுவன. சமய வாழ்வில் சமரச சன்மார்க்க நுட்பம் மிக விளக்கமாக ஓதப்பட்டிருக்கிறது.

அடிகள் அறவுரைகளைத் திரட்டி ஒவ்வொரு தலைப்பின் கீழும் அவைகளை முறைப்படுத்தியுள்ள ஒழுங்கும் பொருளும் வாசிப்போர்க்கு இன்பூட்டுவதோடு நேரிய வாழ்வு நடாத்துமாறு அவரை அவைகள் தூண்டும். சன்மார்க்கத்துறைகள் பல இந்நூற்கண் காணலாம்.

**விலை ரூபா 2—0—0**

# கந்தபுராணச் சுருக்கம்

## மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது; பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும் விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடனே எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்க அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது. கலிகோ பயிண்டு விலை ரூ. 3.

***

### முருகவேள்

## பனுவல் திரட்டு

சுப்பிரமணியபக்தர்கள் பாராயணஞ் செய்தற்குரிய

சிறந்த நூல்

இதில், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, கந்தர் கலிவெண்பா, திருமுருகாற்றுப் படை, முத்துக் குமாரசாமிபிள்ளைத் தமிழ், திருப்போரூர் சந்நிதிமுறை, திருத்தணிகைசந்நிதிமுறை, கந்தபுராணம், தணிகைப்புராணம், திருச்செந்தூர்ப் புராணம் முதலிய நூல்கள் அடங்கியிருக்கின்றன. கலிகோ பவுண்டு ரூ. 1.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
முதல் திருமுறை ... ... 0 12

குசேலோபாக்கியானம் மூலமும் அரும்பதஉரையும் 0 12

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை

# என் கடன்
# பணிசெய்து கிடப்பதே

இப்பெயர் வாய்ந்த நூல் "நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இந்நூலில் பணியின் பெருமை விரிவாக உரைக்கப்பட்டிருக்கிறது. கடவுட் பணி, சமரசப்பணி, சிறப்பாகத் தேசப்பணி ஆகிய இப்பணிகளை இந்நூலில் காணலாம். இஃதொரு கருமயோக நூல். காலத்துக்கேற்றது. இரண்டாம் பதிப்பு விலை அணா எட்டு.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, MADRAS 41